## +1 பொருளியல்

### 2–MARK

### 1. நுண் பொருளியல் ஓர் அறிமுகம்.

1. **பொருளியல் என்றால் என்ன?**
   • பொருளியல் என்பதன் பொருள் இல்லங்களின் நிர்வாகம்.
   • செல்வத்தைப் பற்றிய அறிவியல் – ஆடம் ஸ்மித்.
   • மனிதனுடைய அன்றாட நடவடிக்கைகளை பற்றிய இயல் – மார்ஷல்.
2. **நுண் பொருளியல் என்றால் என்ன?**
   • பொருளாதாரத்தின் தனி (சிறு) அலகுகளை ஆய்வு செய்யும் இயல்.
   **உதாரணம் –** தனி மனிதர்கள், தனிக் குடும்பங்கள், தனி நிறுவனங்கள்.
3. **பண்டங்கள் என்றால் என்ன?**
   மனித விருப்பங்களை நிறைவு செய்யும் தொட்டுணரக் கூடிய, பரிமாற்ற மதிப்புடைய எதுவும் பண்டங்கள்.
4. **பயன்பாட்டின் வகைகளை கூறுக.**
   • வடிவப் பயன்பாடு. • இடப் பயன்பாடு. • காலப் பயன்பாடு.
   • உடைமைப் பயன்பாடு. • சேவைப் பயன்பாடு. • அறிவுப் பயன்பாடு.
5. **இயல்புரை அறிவியலின் இலக்கணத்தை வரையறுக்க.**
   • உள்ளதை உள்ளவாறு காணும் ஒழுங்குப்படுத்தப்பட்ட அறிவுத் தொகுதி.
   • பிரச்சனைகளை உண்மையின் அடிப்படையில் அதன் காரணங்களின் மூலம் ஆய்வு செய்யும் இயல்.
6. **பகுத்தாய்வு முறையின் பொருள் கூறுக.**
   பொதுக் கருத்தில் இருந்து தனி கருத்தை பெறுவதே பகுத்தாய்வு முறை.
7. **பண்டங்களை பணிகளில் இருந்து வேறுபடுத்துக.**

| பண்டங்கள் | பணிகள் |
|---|---|
| தொட்டு உணரக் கூடியவை. | உளவியல் அடிப்படையில் உணரக்கூடியவை. |
| உரிமையாளரிடம் இருந்து தனித்து காணப்படும். | உருவாக்குபவரிடம் இருந்து பிரிக்க முடியாது. |
| சேமிக்க முடியும். | சேமிக்க முடியாது. |
| பரிமாற்ற மதிப்பு உண்டு. | பரிமாற்ற மதிப்பு இல்லை. |

### 2 . நுகர்வுப் பகுப்பாய்வு

8. **பயன்பாட்டை வரையறு.**
   மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் ஆற்றல்.
9. **விருப்பங்களை வகைப்படுத்துக.**
   • இன்றியமையாத பண்டங்கள். • வசதிப் பண்டங்கள். • ஆடம்பரப் பண்டங்கள்.
10. **நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அணுகுமுறைகளை கூறுக.**
   • எண்ணளவை (இயல்பெண்) பயன்பாட்டு ஆய்வு.
   • தரவரிசை பயன்பாட்டு ஆய்வு.
11. **சமநோக்கு வளைகோடு என்றால் என்ன?**
   • இரண்டு பண்டங்களின் வெவ்வேறு அளவுகளின் ஒருமித்த நுகர்வில் சம அளவு மனநிறைவை தரும் புள்ளிகளின் குவியிடமே சமநோக்கு வளைகோடு.
12. **விலைதேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி.**
   • முற்றிலும் நெகிழ்ச்சியுள்ள தேவை. • முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை.
   • மிகை தேவை நெகிழ்ச்சி. • குறைத் தேவை நெகிழ்ச்சி. • அலகு தேவை நெகிழ்ச்சி.
13. **நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக.**
   • நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மை விலை.
   • நுகர்வோர் எச்சம் = மொத்தப் பயன்பாடு – மொத்த செலவு.
   • நுகர்வோர் உபரி = $TU - (P \times Q)$
14. **கிஃபன் பொருட்கள் எவை ? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?**
   • ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் தாழ்ந்தரகப் பண்டங்கள். • **உதாரணம் – கம்பு, கேழ்வரகு, சோளம், அரிசி.**
   • ஏழைகள் தாழ்ந்தரக பண்டங்களின் விலை குறையும் போது அவற்றை குறைவாக வாங்குவர். விலை கூடும் போது அதிகமாக வாங்குவர்.
15. **இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் என்றால் என்ன?**
   • ஒரே சமநோக்கு வளைக்கோட்டில் ஒரு கூடுதல் அலகு X யை பெற நுகர்வோர் விட்டுக் கொடுக்க விரும்பும் Y அளவு.
16. **இறுதிநிலைப் பயன்பாடு என்றால் என்ன?**
   • கூடுதலாக ஒரு அலகை நுகர்வதால் பெறும் அதிகப் பயன்பாடு.
   • கூடுதலாக ஒரு அலகு பண்டத்தை நுகர்வதால் மொத்தப் பயன்பாட்டில் ஏற்படும் நிகர மாற்றம்.

www.Padasalai.Net

## 3 . உற்பத்தி பகுப்பாய்வு

17. **உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்துக.**
 - **முதன்மை உற்பத்திக் காரணிகள்** – நிலம், உழைப்பு.
 - **இரண்டாம் நிலை உற்பத்திக் காரணிகள் –** மூலதனம், தொழில் அமைப்பு.

18. **உழைப்பு – வரையறு.**
 - வருமானத்தை எதிர்பார்த்து மனிதன் உடல், அறிவைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் முயற்சிகள் – மார்ஷல்.

19. **உற்பத்திச் சார்பினை குறிப்பிடுக.**
 - ஒரு நிறுவனத்தின் உள்ளீடு மற்றும் வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பு.

20. **காரணியின் இறுதிநிலை உற்பத்தி வரையறு.**
 - கூடுதலாக ஓர் அலகு உற்பத்திக் காரணியை உற்பத்தியில் ஈடுபடுத்துவதால் மொத்த உற்பத்தியில் ஏற்படும் நிகர மாற்றம்.

21. **சம உற்பத்தி செலவுக்கோடு என்றால் என்ன?**
 - குறிப்பிட்ட அளவு பணச் செலவில் வாங்கக்கூடிய இரு காரணிகளின் பலவகை இணைப்புகளை காட்டும் கோடு.

22. **உற்பத்தியாளர் சமநிலையை அடைய நிபந்தனை யாது?**
 - சம அளவு செலவுக்கோடு, சம உற்பத்திக் கோட்டிற்கு தொடுகோடாக அமைய வேண்டும்.
 - அந்த தொடு புள்ளியில் சம உற்பத்தி வளைகோடு தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.
 - சம அளவு உற்பத்திக் கோட்டின் சாய்வும், சம அளவு செலவுக் கோட்டின் சாய்வும் சமம்.
 - $MRTS_{LK} = \frac{P_L}{P_K}$

23. **அளிப்புக் கோடு மேல் நோக்கி செல்வதற்கான காரணங்கள் யாவை?**
 - விலைக்கும் தேவைக்கும் நேரடியான தொடர்பு நிலவுதல்.
 - விலை அதிகரித்தால் அளிப்பும் அதிகரிக்கும்.

## 4. செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு

24. **செலவு வரையறு.**
 - உற்பத்திக் காரணிகளுக்கு செலுத்தப்படுகின்ற விலையே உற்பத்திச் செலவு.
 - உற்பத்தியின் போது ஏற்படும் செலவுகள்.

25. **செலவு சார்பை வரையறு.**
 - ஒரு நிறுவனத்தின் மொத்த செலவிற்கும், மொத்த உற்பத்திக்கும் இடையே உள்ள சார்பு தொடர்பு.
 - $C = f(Q)$ , $C$ = செலவு, $Q$ = உற்பத்தி , $f$ = சார்பு

26. **மாறாச் செலவு என்றால் என்ன?**
 - மாறா உற்பத்திக் காரணிகளுக்கான செலவு.
 - உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடாது நிலையானது.
 - **உதாரணம் –** வாடகை, காப்புக் கட்டணம், உரிமக் கட்டணம்.
 - உற்பத்தி பூஜ்யமாக இருந்தாலும் மாறாச் செலவை மேற்கொள்ள வேண்டும்.

27. **வருவாய் வரையறு.**
 - பண்டங்களை குறிப்பிட்ட விலையில் விற்பனை செய்வதன் மூலம் பெறுகின்ற வருமானம்.

28. **வெளியுறு செலவு – வரையறு.**
 - ஒரு நிறுவனம் உற்பத்திக் காரணிகளை வாங்க செலுத்தும் தொகையே வெளிப்படை செலவு.
 - கணக்கு ஏடுகளில் பதிவு செய்யப்படும் செலவுகள். **உதாரணம் –** உழைப்புக்கான கூலி .

29. **உண்மைச் செலவு இலக்கணம் தருக.**
 - உழைப்பாளர்களின் துன்பங்களும் தியாகங்களுமே உண்மைச் செலவு – ஆடம் ஸ்மித்.
 - உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் சங்கடங்கள், முயற்சிகள் மற்றும் தியாகங்களுக்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை.

30. **மூழ்கும் செலவுகள்(அமிழ்த்தப்பட்ட) என்றால் என்ன?**
 - வேறு பயனுக்கு பயன்படுத்த முடியாத, மீட்டு எடுக்க முடியாத, கடந்த கால செலவுகளே மூழ்கும் செலவு.

## 5. அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும்

31. **அங்காடி வரையறு.**
 - வாங்குவோரும் விற்போரும் இணையும் இடத்தையும் பரிமாற்றத்தையும் குறிப்பதே அங்காடி.

32. **விலை ஏற்பவர் யார்?**
 - நிறைவுப் போட்டியில் நிறுவனம் தொழிற்சாலை தீர்மானிக்கும் விலையை ஏற்பவர்கள்.

33. **நிறுவனம் என்றால் என்ன?**
 ஒரு தொழிலில் இருக்கும் ஒற்றை உற்பத்தி அலகே நிறுவனம்.

34. **தூய போட்டியின் இன்றியமையாத பண்புகளை எழுதுக.**
 - எண்ணற்ற வாங்குவோர் – விற்போர்.
 - ஒத்த ஓரியல்பான பண்டங்கள்.
 - அங்காடி நிலைப்பற்றிய முழுமையான அறிவு.
 - காரணிகளின் முழுமையான இடபெயர்ச்சி.

35. **சில்லோர் முற்றுரிமையில் மாறாத விலை (Price rigidity) இருக்க காரணம் யாது?**
 - சில்லோர் முற்றுரிமையில் விலையை மாற்றி அமைப்பது கடினம்.
 - எதிராளிகளின் போட்டி பற்றிய அச்சத்தால் விலை மாறாமல் உள்ளது.





ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

36. **விற்பனைச் செலவு என்றால் என்ன?**
- பண்டத்தின் விற்பனையை அதிகரிக்க செய்யப்படும் செலவுகள்– **உதாரணம்: விளம்பரம்.**
- ஒரு பண்டத்திற்கான தேவை வளைகோட்டின் வடிவத்தை மாற்றி அமைக்க செலவிடபடும் பணத்தின் அளவு.

37. **கீழ் வரும் நிறுவனத்தின் தேவைகோடு வரைக. 1. நிறைவுப் போட்டி 2. முற்றுரிமை.**




38. **விலை பேதம் காட்டுதலின் இரண்டு வகைகளை எழுதுக.**
- தனி நபர் பேதம் காட்டுதல் – இரயில் கட்டணம்.
- இட பேதம் காட்டுதல் – குவித்தல்.
- பயன் பேதம் காட்டுதல் – மின் கட்டணம்.

39. **உபரி சக்தி – விளக்குக.**
உத்தம அளவு உற்பத்திக்கும் உண்மை உற்பத்திக்கும் இடையே உள்ள வேறுபாடே உபரி சக்தி.

40. **நிறைவுப்போட்டி இலக்கணம் தருக.**
ஒவ்வோரு உற்பத்தியாரின் உற்பத்தியும் முழு நெகிழ்ச்சியுடைய தேவையை கொண்டிருக்கும் நிலையே நிறைவுப்போட்டி – **திருமதி. ஜோன்ராபின்சன்**

## 6. பகிர்வுப் பற்றிய ஆய்வு

41. **பகிர்வு என்றால் என்ன?**
- நாட்டு வருமானத்தை(செல்வத்தை) நான்கு உற்பத்திக் காரணிகளுக்கு பகிர்ந்து அளித்தல்.
- நிலம் – வாரம், உழைப்பு – கூலி, முதல் – வட்டி, தொழில் அமைப்பு – இலாபம்.

42. **பகிர்வின் வகைகள் யாவை?**
- தனிநபர் வருமான பகிர்வு. • செயல்முறை (பணிசார்) பகிர்வு.

43. **வாரம் வரையறு.**
- நிலத்தின் உண்மையானதும் அழிக்க முடியாததுமான சக்திகளை பயன்படுத்திக் கொள்வதற்காக நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதே வாரம்.

44. **வட்டி என்பதன் பொருள் யாது?**
- அங்காடியில் முதலை பயன்படுத்திக் கொள்வதற்காக கொடுக்கப்படும் விலையே வட்டி– மார்ஷல்.
- நீர்மைத் தன்மையின் பகுதியை குறிப்பிட்ட காலத்திற்கு விட்டுக்கொடுப்பதற்கான வெகுமதியே வட்டி– கீன்ஸ்.

45. **பணக்கூலி மற்றும் உண்மைக் கூலி வேறுபடுத்துக.**
**பணக்கூலி :** தொழிலாளர் தன் உழைப்பிற்காக பெறுகின்ற பணத்தின் அளவு.
**உண்மைக்கூலி :** பணக்கூலியின் வாங்கும் திறனோடு நிறுவனத்தின் மூலம் பெறுகின்ற பிற சலுகைகளும் சேர்ந்தது.

46. **நீர்மை விருப்பம் என்பதன் பொருள் யாது?**
மக்கள் தங்களது சொத்தின் ஒரு பகுதியை ரொக்க பணமாக வைத்திருக்க விரும்புவதே நீர்மை விருப்பம்.

47. **இலாபம் என்றால் என்ன?**
- தொழில் முனைவோர் உற்பத்திக் காரணிகளை திறமையுடன் ஒருங்கிணைப்பதால் கிடைக்கும் வெகுமதி.
- தொழில் முனைவோர் தொழில் திறமையை பயன்படுத்துவதற்கான வெகுமதியே இலாபம்.

48. **பொருளாதார வாரம் என்றால் என்ன?**
- நிலத்தை பயன்படுத்துவதற்காக மட்டும் குத்தகைதாரர் நில உரிமையாளருக்கு வழங்கும் பகுதித் தொகை.

49. **போலிவாரம் குறிப்பு வரைக.**
**போலிவாரம்: (மார்ஷல்)**
- குறிகிய காலத்தில் உற்பத்தியாளர் மாறும் செலவுகளுக்கு மேலாக பெறும் உபரியே போலிவாரம்.
- போலிவாரம் = மொத்த வருவாய் – மொத்த மாறும் செலவு.
- குறுகிய காலத்தில் மனிதனால் உருவாக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் பிற கருவிகளின் விலைக்கு மேல் பெறும் உபரி வருவாய்.

www.Padasalai.Net

## 7. இந்தியப் பொருளாதாரம்

50. **பொருளாதார வளர்ச்சியின் பொருள் தருக.**
- GDP யை பொருத்து முன்னேறாத பொருளாதாரம் முன்னேறிய நிலையை அடைதல்.
- நாட்டு வருமானத்தில் தனி நபரது பங்கு அதிகரித்தல்.
- மக்கள் தொகையின் தலா உற்பத்தியின் வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சி.

51. **முன்னேறிய பொருளாதாரத்தின் இரண்டு இயல்புகள் யாவை?**
- உயர்ந்த நாட்டு வருமான வளர்ச்சி. • உயர்ந்த தனி நபர் வருமானம். • சீறிய பொருளாதார வளர்ச்சி
- உயர்ந்த வாழ்க்கைத் தரம். • உயர்ந்த தொழில் நுட்பம். • அதிக நுகர்ச்சி நிலை.

52. **இயற்கை வளங்களை பற்றி குறிப்பு வரைக.**
- ஒரு நாட்டின் இயற்கையில் இருந்து பெறப்படும் வளங்கள்.
- **உதாரணம் :** காடு, நீர், மண், கனிம வளங்கள், ஆற்றல் சக்திகள்.

53. **இந்திய பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு இயல்பினை கூறுக.**
- இந்தியா கலப்பு பொருளாதார முறையினை பின்பற்றுகிறது.
- அரசுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்படுவதே கலப்பு பொருளாதாரம்.

54. **புதுப்பிக்க இயலாத ஆற்றல் வளங்கள் பொருள் தருக.**
- மீண்டும் உருவாக்க முடியாத, நிலைத்திருக்க முடியாத ஆற்றல் மூலங்கள்.
- **உதாரணம் :** நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு.

55. **தொழில்நுட்ப தெரிவு பற்றி சென் கூறுவது யாது?**
- உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதாரத்தில் மூலதனச் செறிவு நுட்ப முறையில் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது கடினம் – **சென்**

56. **குறைந்த தலா வருமானம் இருக்கக் காரணங்களாக V.K.R.V. ராவ் கூறுவதை பட்டியலிடுக.**
- முறையற்ற நிலவுடைமை முறை. • நிலம் துண்டாடப்படுதல். • குறைவான நீர்பாசன வசதி.
- வேளாண்மையில் அதிக மக்கள் தொகை அழுத்தம். • முதலீடு இன்மை.
- பேரளவு தொழில்துறை இன்மை. • நாணயத்தில் சுயாட்சி கொள்கை இன்மை.
- பணம் பற்றிய கருத்துகளில் தங்கம் உடைமையாக் கொள்ளப்படுவதை ஊக்குவித்தது.

## 8. இந்தியப் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும்

57. **இந்தியாவில் காலணித்துவ சுரண்டலின் நிலைகள் யாவை?**
- வணிக மூலதனக் காலம் (1753 – 1813). • தொழில் மூலதனக் காலம் (1813 – 1858).
- நிதி மூலதனக் காலம் (1858 –1947).

58. **சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட நிலவுடைமை முறைகள் யாவை?**
- ஜமின்தாரி முறை. • மகல்வாரி முறை. • இரயத்வாரி முறை.

59. **மற்ற முறைகளில் இருந்து நிலவுடைமை முறை வேறுபடுவதற்கான அம்சங்களை எழுதுக.**
- நிலம் யாறுக்கு சொந்தமானது?. • நிலத்தில் யார் அறுவடை செய்வது?.
- நில வருவாயை அரசுக்கு செலுத்த பொறுப்பானவர் யார்?

60. **பசுமைப் புரட்சியின் பலவீனங்கள் யாவை?**
- பருவ மழையை நம்பி இருத்தல். • மூலதன பற்றாக்குறை. • பண்ணைகள் இயந்திரமயமாதல்.
- விவசாயிகளுக்கு இடையேயான வருமான இடைவெளி. • பகுதிகளுக்கு இடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள்.

61. **பத்தாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை?**
- தலா வருமானத்தை இரண்டு மடங்காக உயர்த்துதல். • 8 சதவீதம் வளர்ச்சி வீதத்தை அடைதல்.
- வறுமை விகிதத்தை 15 சதவீதமாக குறைத்தல். • சமத்துவம் மற்றும் சமூகநீதி.

62. **மனித மேம்பாட்டுக் குறியீட்டெண் (HDI) மற்றும் வாழ்க்கை தர குறியீட்டெண் (PQLI) வேறுபடுத்துக.**

| மனித மேம்பாட்டுக் குறியீட்டு எண் (HDI) | வாழ்க்கைத் தர குறியீட்டு எண்(PQLI) |
|---|---|
| உடல் மற்றும் பணம் சார்ந்த மேம்பாட்டை காட்டுகிறது. | உடல் சார்ந்த மேம்பாட்டை காட்டுகிறது. |
| வருமானம் சேர்க்கப்படுகிறது. | வருமானம் நீக்கப்படுகிறது. |
| குறியீடுகள்: வாழ்நாள், கல்விதகுதி, தனிநபர் வருமானம். | குறியீடுகள்: ஆயுட்கலாம், குழந்தை இறப்பு விகிதம், எழுத்தறிவு |

63. **மனித வளர்ச்சி குறியீட்டினை கணக்கிட உதவும் குறியீடுகளை கூறுக.**
- வாழ்நாள் (ஆயுட்காலம்). • கல்வி தகுதி. • வாங்கும் சக்தியின் அடிப்படையில் தனிநபர் வருமானம்.

64. **வணிக மூலதன காலம் பற்றி விவரி.**

**வணிக மூலதன காலம் (1757 – 1813)**
- கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் முற்றுரிமை வாணிபம் செய்து லாபத்தை இங்கிலாந்திற்கு கடத்தியது.
- பிரிட்டனில் தொழில் மூலதனத்தை அதிகரிக்க இந்தியாவின் வளங்கள் சுரண்டப்பட்டன.
- கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவை மிக முக்கிய சுரண்டல் பிரதேசமாக கருதி சுரண்டியது.
- இதன் அலுவலர்கள் நேர்மையற்று ஊழல் செய்தனர்.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

## 9 . இந்தியவின் மேம்பாட்டு அனுபவங்கள்

65. **இந்திய பொருளாதாரத்தில் கட்டமைப்பு சீர்திருத்தங்களை செயல்படுத்த காரணம் யாது?**
- இந்தியா பெரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்தது.
- வெளிநாட்டு வாணிபக் கணக்கில் ஏற்பட்ட பேரிழப்பு.

66. **முதலீட்டை திரும்ப பெறுதல் வரையறு.**
- அரசு பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பதாகும்.

67. **நிதிச் சமநிலை இன்மையை கட்டுப்படுத்த 1991 – 92 ல் ஏற்பட்ட கொள்கை முயற்ச்சிகள் மூன்றினைக் கூறுக.**
- உர மானியம் மற்றும் சர்க்கரை மானியங்கள் குறைக்கப்பட்டன.
- வருவாயை அதிகப்படுத்த பொதுத்துறை சொத்துகள் விற்கப்பட்டன.
- அரசு நலத் திட்டங்களுக்கான நிதியை படிப்படியாக குறைத்தது.

68. **சிறப்பு பொருளாதார மண்டலம் என்பதன் என்பதன் பொருள் யாது ?**
வணிகம், முதலீடு, வேலைவாய்ப்பு ஆகியவற்றை அதிகரிக்கவும், அயல்நாட்டு நேரடு முதலீட்டை ஈர்க்கவும் பொது சட்டங்களில் இருந்து விலகல் அளித்து சிறப்பு சலுகைகளுடன் அரசால் உருவாக்கப்படும் கட்டமைப்பே சிறப்பு பொருளாதார மண்டலம்.

69. **மத்திய மற்றும் மாநில அரசுகள் அறுவடைக்குப் பின் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் உட்கூறுகளை எழுதுக.**
- பெரிய உணவு பூங்கா. • மதிப்பு கூட்டி பாதுகாக்கும் கட்டமைப்பு. • நவீன இறைச்சிவதைக் கூடங்கள்.
- தர உத்திரவாத திட்டம். • ஒருங்கிணைந்த குளிர்பதன மற்றும் பதப்படுத்தும் கட்டமைப்பு வசதிகள்.

70. **LPG கொள்கையை செயபடுத்த காரணம் யாது?**
- இந்தியா பெரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. • வெளிநாட்டு வாணிபக் கணக்கில் ஏற்பட்ட பேரிழப்பு.
- புதிய பொருளாதார கொள்கையை செயல்படுத்த. • தொழில் கட்டுபாடுகளை தளர்த்த வேண்டிய அவசியம்.
- தனியார் மயமாதல் அவசிமானதாக கருதப்பட்டது. • தனியார் துறைக்கு போதுமான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

71. **தனியார்மயமாக்கல் என்றால் என்ன?**
- பொதுத் துறையின் நிர்வாகம் மற்றும் உரிமைகளை தனியாருக்கு மாற்றுதல்.

## 10 . ஊரக பொருளாதாரம்

72. **ஊரக பொருளாதாரம் – வரையறு.**
- பொருளாதார கொள்கைகளை ஊரக பகுதிகளில் நடைமுறைப்படுத்தி வளர்ச்சியடைய செய்தல்.

73. **ஊரக வளர்ச்சி என்றால் என்ன?**
- ஊரக பகுதிகள், ஊரக மக்கள், ஊரக வாழ்க்கை முறை ஆகியவற்றை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி.
- ஊரக மக்களின் சமூக பொருளாதார மற்றும் வாழ்க்கை முறையை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட உத்தி – உலக வங்கி.
- ஊரக மக்களின் சமூநலம் மற்றும் வாழும் சூழ்நிலையை மேம்படுத்துதலே ஊரக வளர்ச்சி.

74. **ஊரக ஏழ்மை – வரையறு.**
- கிராம மக்கள் தங்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான வருமானத்தை ஈட்ட முடியாத நிலை.

75. **திறந்த நிலை வேலையின்மை என்றால் என்ன?**
- வேலை செய்யும் விருப்பமும் தகுதியும் இருந்து நடைமுறை கூலி வீதத்தில் எந்த வேலையும் கிடைக்காமல் இருப்பது.
- வேளாண்மை தொழிலாளர்கள், கிராம கைவினைஞர்கள், கற்றவர்கள் இதில் அடங்குவர்.

76. **மறைமுக வேலையின்மை என்றால் என்ன?**
- தேவைக்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியில் இருக்கும் நிலை.
- பணியில் இருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தி குறையாது.
- தொழிலாளரின் இறுதிநிலை உற்பத்தி திறன் பூஜ்யம்.

77. **குடிழை தொழில் வரையறு.**
- குடும்ப உறுப்பினர்களை கொண்டு முழு அல்லது பகுதிநேர தொழிலாக மேற்கொள்ளப்படும் மரபுவழித் தொழில்கள்.
- **உதாரணம்** : பாய் பின்னுதல், கயிறு திரித்தல், கூடை முடைதல்.

78. **குறு நிதி(Mirce finance) என்றால் என்ன?**
- குறுங்கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் குறுங்கடன்களே குறுநிதி.
- குறைந்த வருமானம் உள்ள மக்களுக்கு அளிக்கப்படும் கடன், சேமிப்பு, காப்பீடு மற்றும் நிதி தொடர்பான திட்டங்களை உள்ளடக்கியதே குறுநிதி.
- மூலதன ஆதாரமில்லாத சிறு தொழில் முனைவோருக்கு தேவையான நிதியை வழங்கி முதலீடு செய்ய வைத்தல்.

79. **ஊரக மின்மயமாக்கல் வரையறு.**
- ஊரகப் பகுதிகளுக்கு மின் வசதியை ஏற்படுத்தி தருவதே ஊரக மின்மயமாக்கல்.

80. **இந்தியாவில் ஊரக மின்மயமாக்கலின் இரண்டு பாதக காரணிகளை எழுதுக.**
- நிதிப் பற்றாக்குறை • சீரற்ற நிலப்பரப்பு • மின் திருட்டு
- மின் அனுப்புகையில் ஏற்படும் இழப்பு. • மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்சனைகள்.

81. **ஊரக வீட்டுவசதி பிரச்சனைக்கான காரணங்களில் ஏதேனும் இரண்டினை எழுதுக.**
- தூய்மையான குடிநீர்வசதி இன்மை. • நல்ல சுகாதார வசதி இன்மை.
- முறைப்படி கழிவுகளை அப்புறப்படுத்தும் வழிகள் மிக குறைவு.
- வீட்டுமனை பெறுவதில் உள்ள சட்ட பிரச்சனைகள். • தனிக் குடும்பமாக வசிக்க விரும்புதல்.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

## 11 . தமிழ்நாட்டுப் பொருளாதாரம்

82. **சாதகமான பாலின விகிதம் கொண்ட இரண்டு மாவட்டங்களை எழுதுக. விகிதங்களையும் குறிப்பிடுக.**
 • தேனி (900). • தர்மபுரி (946).

83. **மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வரையறு.**
 ஒரு மாநிலத்தில் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் வினை முடிந்த பண்டங்களின், பணிகளின் மொத்த மதிப்பு.

84. **தமிழ்நாட்டுக் ஏற்ற நான்கு உணவுப் பயிர்களை குறிப்பிடுக.**
 • நெல். • கம்பு. • கேழ்வரகு. • சோளம். • நிலக்கடலை. • சிறு தானியங்கள்.

85. **தமிழ்நாட்டின் முக்கிய துறைமுகங்கள் யாவை?**
 • சென்னை. • எண்ணூர். • தூத்துக்குடி. • நாகப்பட்டணம்.

86. **குறு நிறுவனங்கள் – வரையறு.**
 • 25 இலட்சத்திற்கு மிகமால் மூலதன மூதலீட்டை கொண்ட நிறுவங்கள்.

87. **பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன?**
 • பாராம்பரியம், தொன்மை, புராதன சிறப்பு மிக்க இடங்களுக்கு மக்களால் மேற்கொள்ளப்படும் பயணங்களே பாராம்பரிய சுற்றுலா.

88. **தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் யாவை?**
 • கல்பாக்கம். • கூடங்குளம்

## 12. பொருளியலுக்கான கணித முறைகள்

89. **62 = 34 + 4x எனில் X மதிப்பு காண்க.**

**தீர்வு:**

$$62 = 34 + 4x$$
$$-4x = 34 - 62$$
$$-4x = -28$$
$$-x = \frac{-28}{-4} = 7$$

∴ விடை : $x = 7$

90. **அளிப்பு சார்பு கொடுக்கப்பட்டுள்ள போது அளிப்பு நெகிழ்ச்சி கெழு காணும் சூத்திரம் யாது?**

அளிப்பு நெகிழ்ச்சி $(e_s) = \left(\frac{p}{q}\right) \times \left(\frac{dq}{dp}\right)$

91. **தேவைச் சார்பு சமன்பாடு q = 150 – 3p என்றால் இறுதிநிலை வருவாய் சார்பை கண்டுபிடி.**

**தீர்வு**

$$q = 150 - 3p$$
$$TR = P \times Q$$
$$= P \times (150 - 3P)$$
$$\therefore TR = 150P - 3P^2$$

இறுதிநிலை வருவாய் (MR) $= \frac{d(TR)}{dP}$

$$= (1 \times 150)\ P^{(1-1)} - (3 \times 2)\ P^{(2-1)}$$
$$= 150\ P^0 - 6P^1$$

∴ விடை : MR = 150 – 6P

92. **மொத்த செலவு சார்பு $TC = 60 + 10X + 15x^2$ எனில் சராசரி செலவு சார்பை காண்க.**

**தீர்வு:**

$$TC = 60 + 10X + 15x^2$$

சராசரி செலவு ( $AC$ ) $= \frac{TC}{Q}$

$$= \frac{60}{X} + \frac{10X}{X} + \frac{15x^2}{X}$$

∴ விடை $(AC) = \frac{60}{X} + 10 + 15X$





www.Padasalai.Net

93. **தேவை சார்பு சமன்பாடு $x = 20 - 2p - p^2$ இல் p விலையையும் X அளவையும் குறிப்பிடும் எனில் P = 2.5 என்ற மதிப்பில் தேவை நெகிழ்ச்சி கெழு யாது ?**

$q = 20 - 2P - P^2$

$ed = \left(\frac{p}{x}\right) \times \left(\frac{dx}{dp}\right)$

p = 2.5

$x = 20p - 2p - p^2$

$= 20 - 2(2.5) - (2.5)^2$

$= 20 - 5 - 6.25$

$= 20 - 11.25$

**x = 8.75**

$\frac{dq}{dp} = \frac{d(20-2p-p^2)}{d(P)}$

$= 0 - (1 \times 2)\, p^{(1-1)} - (2 \times 1)p^{(2-1)}$

$= 0 - 2\, p^0 - 2p^1$

$= 0 - 2 - 2p$

$\therefore \left(\frac{dx}{dp}\right) = (-2) - 2p$ இங்கு P = 2.5 எனில்

$= (-2) - 2(2.5)$

$= -2 - 5$

$\therefore \left(\frac{dx}{dp}\right) = -7$

$ed = \left(\frac{p}{x}\right) \times \left(\frac{dx}{dp}\right)$

$= \frac{2.5}{8.75} \times (-7)$

$= \frac{-17.5}{8.75}$

$\therefore$ தேவைநெகிழ்ச்சி $(ed) = -2$

94. **ஒரு பொருளின் விலை p யும் அளவு q வும் $q = 30 - 4p - p^2$ என்ற சமன்பாட்டில் இணைக்கப்பட்டால் i) p = 2 என்ற மதிப்பில் தேவை நெகிழ்ச்சி கெழு மதிப்பு மற்றும் ii) இறுதிநிலை வருவாய் மதிப்பு காண்க.**

**தீர்வு: 1. தேவை நெகிழ்ச்சி**

$q = 30 - 4p - p^2$

$ed = \left(\frac{p}{q}\right) \times \left(\frac{dq}{dp}\right)$

p = 2 எனில்

$q = 30 - 4p - p^2$

$= 30 - 4(2) - (2)^2$

$= 30 - 8 - 4$

$= 30 - 12$

**q = 18**

$\frac{d(q)}{dp} = \frac{d(30-4p-p^2)}{d(P)}$

$= 0 - (1 \times 4)\, p^{(1-1)} - (2 \times 1)p^{(2-1)}$

$= 0 - 4 - 2p$

$\therefore \left(\frac{dx}{dp}\right) = (-4) - 2p$

**p = 2 எனில்**

$= (-4) - 2(2) = -4 - 4 = \therefore \left(\frac{dx}{dp}\right) = -8$

$ed = \left(\frac{p}{x}\right) \times \left(\frac{dx}{dp}\right) = \frac{2}{18} \times (-8) = \frac{-16}{18}$

$= -0.88$

$\therefore$ தேவை நெகிழ்ச்சி$(ed) = -0.88$

**தீர்வு: 2. இறுதிநிலை வருவாய்**

*மொத்த வருவாய் (TR) = p × q*

$= P(30 - 4P - P^2)$

$\therefore TR = 30P - 4P^2 - P^3$

இறுதிநிலை வருவாய்$(MR) = \frac{d(TR)}{dP}$

$\frac{d(TR)}{dp} = \frac{d(30P-4P^2-p^3)}{d(P)}$

$= 30 - 4(2)P^{(2-1)} - 3(1)P^{(3-1)}$

$MR = 30 - 8P - 3P^2$

P = 2 எனில்

$= 30 - 8(2) - 3(2)^2 \quad = 0 - 4p^0 - 2p^1$

= 30 – 16 – 12

= 30– 28 = 2

$\therefore$ இறுதிநிலை வருவாய்$(MR) = 2$





www.Padasalai.Net

## பாடம் 1. நுண்ணியல் பொருளியல் ஓர் அறிமுகம்

1. **பொருளியலை பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக.மேலும் மதிப்பீடு செய்க .**

**பற்றாக்குறை இலக்கணம்:** விருப்பங்களோடும் கிடைப்பருமை உள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூயடி சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளை பற்றி பயிலக்கூடிய அறிவியலே பொருளியல்.

**சிறப்பியல்புகள்**

- மனித விருப்பங்கள் எல்லையற்றது.
- வளங்கள் பற்றாக்குறையானவை.
- வளங்கள் மாற்று பயனுடையவை.
- பற்றாக்குறை தெரிவு செய்தலுக்கு வழிவகுக்கும்.

**குறைபாடுகள்**

- வளர்ச்சி, முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகள் இல்லை.
- வளங்களின் பங்கீடு, விலை தீர்மானம் மட்டுமே பொருளியல் அல்ல.
- முடிவுகள் நலன் தரக்கூடிய, நலன் தராத பொருட்களுக்கு சமமாக இருக்காது.

2. **பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?**

**பணிகளின் இயல்புகள்:**

- பணிகள் உருவ அடையாளம் அற்ற புலனாகாதவை.
- இடங்கள் மற்றும் கலாச்சார பின்னணியில் பணிகள் வேறுபடுகின்றன.
- பணிகளை சேமித்து வைக்க முடியாது அழியக்கூடியவை, பரிமாற்ற மதிப்பு அற்றவை.
- பணிகளை உருவாக்குபவரிடம் இருந்து பிரிக்க முடியாது.
- தரத்தின் அடிப்படையில் பணிகள் வகைப்படுத்தப்படும்.

3. **நுண்ணியல் பொருளியல் மற்றும் பேரியல் பொருளியல் வேறுபடுத்துக.**

| நுண்ணியல் பொருளியல் | பேரியல் பொருளியல் |
|---|---|
| பொருளாதாரத்தின் சிறு பகுதிகளை ஆராய்கிறது. | முழு பொருளாதாரத்தையும் ஆராய்கிறது. |
| காரணியின் விலை தீர்மானித்தலோடு தொடர்புடையது. | பொது விலைமட்டத்தோடு தொடர்புடையது. |
| விலைக் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது | வருவாய் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. |
| **உதாரணம் –** தனிபட்ட மனிதர்கள், தனிக் குடும்பங்கள், | **உதாரணம் –** தேசிய வருவாய், வேலைவாய்ப்பு. |

4. **இயல்புரை மற்றும் நெறியுரை பொருளியலை ஒப்பிடுக.**

| இயல்புரை பொருளியல் | நெறியுரை பொருளியல் |
|---|---|
| உள்ளதை உள்ளவாறு காணும் இயல். | எதுவாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வகுக்கும் இயல். |
| பிரச்சனைகளை உண்மையின் அடிப்படையில் அதன் காரணங்களின் மூலம் ஆராய்கிறது. | பிரச்சனைகளை சமுக, பண்பாடு, அரசியல், சமயம், நீதிநெறி போன்றவற்றின் அடிப்படையில் ஆராய்கிறது. |
| முடிவுகள் உண்மையின் அடிப்படையில் அமையும். | முடிவுகள் நீதிநெறியின் அடிப்படையில் அமையும். |
| முடிவுகள் வெளிப்படையானது. | முடிவுகள் உள்ளுணர்வு சார்ந்தது. |

5. **பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?**

**பயன்பாட்டின் இயல்புகள்**

- பயன்பாடு உளவியல் சார்ந்தது.
- பயன்பாடும், உபயோகமும் ஒன்றானவையல்ல.
- பயன்பாடும், மகிழ்ச்சியும் ஒன்றானவையல்ல.
- பயன்பாடு தனித்தும், சார்ந்தும் இருக்கும்.
- பயன்பாடு மனித விருப்பத்தின் தீவிரத்தை சார்ந்தது.
- பயன்பாட்டை துல்லியமாக அளவிட முடியாது.
- பயன்பாடு நீதிநெறி முக்கியத்துவம் கொண்டதல்ல.

6. **பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை விளக்குக.**

**பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை:**

- **நுகர்வு:** பயன்பாட்டின் அழிவுவே நுகர்வு. நுகர்வு பொருளாதார நடவடிக்கைகளின் துவக்கப் புள்ளியாகும்.
- **உற்பத்தி:** உள்ளீடுகளை – வெளியீடுகளாக மாற்றும் செயல்பாடே உற்பத்தி.
- **பரிமாற்றம்:** உற்பத்தி பண்டங்கள் நுகர்வோருக்கு கிடைக்கும் வரை உள்ள வணிக நடவடிக்கைகள்.
- **பகிர்வு:** உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கப்படும் ஊதியத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள்.

7. **என்ன உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்கான முக்கிய முடிவுகள் யாவை?**

**என்ன உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்கான முக்கிய முடிவுகள்**

- அதிகமாக உற்பத்தி செய்யப்பட வேண்டியது அடிப்படை பண்டங்களா? **அல்லது** ஆடம்பர பண்டங்களா?
- அதிகமாக உற்பத்தி செய்யப்பட வேண்டியது வேளாண்மை பண்டங்களா? **அல்லது** தொழிற்சாலை பண்டங்களா?
- அதிகமாக வளங்களை பயன்படுத்த வேண்டியது கல்விக்கா? **அல்லது** பாதுகாப்புக்கா?
- அதிகமாக வைத்துக் கொள்ள வேண்டியது நுகர்வு பண்டங்களா? **அல்லது** மூலதனப் பண்டங்களா?
- அதிகமாக செலவு செய்ய வேண்டியது அடிப்படை கல்விக்கா? **அல்லது** உயர் கல்விக்கா?

8. **தொகுத்தாய்வு முறை என்றால் என்ன?**

**தொகுத்தாய்வு முறை** : தனிக் கருத்தில் இருந்து பொதுக்கருத்தை பெறுவதே தொகுத்தாய்வு முறை.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

9. **மனித விருப்பங்களின் பண்புகளை கூறுக.**

**மனித விருப்பங்களின் பண்புகள்:**

- விருப்பங்கள் எண்ணற்றவை.
- விருப்பங்கள் பழக்கங்கள், வழக்கங்களாக மாறும்.
- விருப்பங்கள் நிறைவேறக் கூடியவை.
- விருப்பங்கள் மாற்றுப் பொருளால் நிறைவு பெறுபவை.
- விருப்பங்கள் போட்டியிடுபவை மற்றும் ஒன்றை ஒன்று சார்ந்தவை.
- விருப்பங்கள் மீளத் தோன்றும் இயல்புடையவை.

10. **மொத்தப் பயன்பாட்டிற்கும் இறுதிநிலை பயன்பாட்டிற்கும் உள்ள உறவை விளக்குக.**

**மொத்தப் பயன்பாட்டிற்கும் இறுதிநிலை பயன்பாட்டிற்கும் உள்ள உறவுகள்:**

- இறுதிநிலை பயன்பாடு குறையும் போது பூஜியத்தை விட அதிகமாக இருக்கும் வரை மொத்த பயன்பாடு அதிகரிக்கும்.
- இறுதிநிலை பயன்பாடு பூஜியம் எனில் மொத்த பயன்பாடு உச்ச நிலையில் இருக்கும்.
- இறுதிநிலை பயன்பாடு எதிர்கணியம் எனில் மொத்த பயன்பாடு குறைந்து செல்லும்.

| இறுதிநிலை பயன்பாடு (MU) | மொத்த பயன்பாடு (TU) |
|---|---|
| குறையும் | அதிகரிக்கும் |
| பூஜியம் எனில் | உச்சநிலை |
| எதிர்மறை எனில் | குறையும் |

11. **சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?**

**சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள்:**

- இடமிருந்து வலமாக கீழ் நோக்கி சரிந்து செல்லும்.
- தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.
- ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்ளாது.
- X அச்சையோ Y அச்சையோ தொடாது.

12. **நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தை எழுதுக.**

**நுகர்வோர் எச்சம் இலக்கணம் – மார்ஷல்.**

- ஒரு பொருளை வாங்காமல் இருப்பதை விட வாங்குவதே நல்லது என முடிவு செய்து நுகர்வோர் கொடுக்க நினைத்த விலைக்கும் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடே நுகர்வோர் உபரி.
- **நுகர்வோர் உபரி = தகுவிலை – உண்மை விலை.**


13. **நுகர்வோர் எச்சம் என்ற கருத்தை வரைபடத்துடன் விளக்குக.**

**நுகர்வோர் எச்சம்:**

நுகர்வோர் ஒரு பொருளுக்கு கொடுக்க நினைத்த விலைக்கும் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடு.

**எடுகோள்கள்:**

- பயன்பாட்டை அளவிட முடியும்.
- பணத்தின் இறுதிநிலை பயன்பாடு மாறாது.
- பதிலீட்டுப் பண்டங்கள் இல்லை.
- நுகர்வோரின் வருமானம் சுவை மாறாது.




**வரைபட விளக்கம்:**

- விலை OP எனில் தேவை OQ.
- தகுவிலை = OCEQ.
- உண்மைவிலை = OPCQ
- **நுகர்வோர் எச்சம் =** ODCQ – OPEQ = PCE (நிழலிடப்பட்டப் பகுதி).

14. **தேவை விரிவு மற்றும் தேவை சுருக்கத்தை வேறுபடுத்துக.**

| தேவை விரிவு | தேவை சுருக்கம் |
|---|---|
| குறைந்த விலையில் அதிக அளவு பொருட்களை வாங்குவது. | அதிக விலையில் குறைந்த அளவு பொருட்களை வாங்குவது. |
| விலை குறைந்தால் தேவை விரிவடையும் *மற்றவை மாறாமல் இருக்கும் போது.* | விலை அதிகரித்தால் தேவை சுருங்கும். *மற்றவை மாறாமல் இருக்கும் போது.* |
| ஒரே தேவைக் கோட்டில் வலதுபக்க நகர்வை காட்டும். | ஒரே தேவைக் கோட்டில் இடப் பக்க நகர்வை காட்டும். |

15. **தேவை வளைகோடு இடம் பெயர்தல் என்றால் என்ன? காரணிகள் யாவை?.**

**தேவை வளைகோடு இடம் பெயர்தல்:** தேவையை தீர்மானிக்கும் விலைத் தவிர்த்த பிறக் காரணிகளில் ஏற்படும் மாற்றம் தேவைக் கோட்டை இடம்பெயரச் செய்யும்.

**தேவைக் கோட்டை இடம்பெயரச் செய்யும் காரணிகள்:** 1. நுகர்வோரின் வருமானம். 2. நுகர்வோரின் சுவை, பழக்கவழக்கங்கள். 3. பதிலீட்டுப் பண்டங்களின் விலை. 4. விளம்பரம். 5. வருங்கால விலைப் பற்றிய எதிர்பார்ப்பு. 6. மக்கள் தொகை மாற்றம். 7. வணிகநிலை. 8. சேமிப்பில் மாற்றம். 9. காலநிலை மாற்றம்.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net


16. **நுகர்வோர் சமநிலை என்ற கருத்தை சுருக்கமாக விவரி.**

**நுகர்வோர் சமநிலை:**

வரவு – செலவுக்கோடு சமநோக்கு வளைகோட்டிற்கு தொடுகோடாக அமையும் புள்ளியில் நுகர்வோர் அதிக அளவு பயன்பாட்டை பெற்று சமநிலை பெறுவார்.

**நுகர்வோர் சமநிலையை அடைய நிபந்தனை:**

- சம – செலவுக்கோடு சமநோக்கு வளைகோட்டிற்கு தொடுகோடாக அமையும்.
- அந்த தொடு புள்ளியில் சமநோக்கு வளைகோடு தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.




**வரைபட விளக்கம்:**

- E புள்ளியில் இறுதிநிலை பதிலீட்டு வீதமும் விலை வீதமும் சமம்.
- சமநிலைப் புள்ளி E யில் $MRS_{XY} = \frac{P_X}{P_Y}$.
- E புள்ளியில் $IC_2$ என்ற சமநோக்கு வளைகோட்டின் சாய்வும், AB என்ற வரவு செலவு கோட்டின் சாய்வும் சமம்.
- E புள்ளியில் நுகர்வோர் அதிக பயன்பாட்டை பெறுவார்.

17. **இறுதிநிலை பயன்பாடு என்றால் என்ன?**

**இறுதிநிலை பயன்பாடு:** கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை நுகர்வதால் மொத்த பயன்பாட்டில் ஏற்படும் நிகர மாற்றம்.

. $MU_n = TU_n - TU_{n-1}$

18. **மொத்த பயன்பாடு என்றால் என்ன?**

**மொத்த பயன்பாடு:**

- ஒரு பண்டத்தின் எல்லா அலகுகளையும் நுகர்வதால் கிடைக்கும் பயன்பாட்டின் கூடுதலே மொத்த பயன்பாடு.
- இறுதிநிலை பயன்பாடுகளின் கூடுதலே மொத்த பயன்பாடு.

## 3. உற்பத்தி பகுப்பாய்வு

18. **நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?**

**நிலத்தின் சிறப்பியல்புகள்:**

- நிலம் ஒரு முதன்மை உற்பத்திக் காரணி.
- நிலம் இயற்கையின் கொடை.
- நிலம் நிலையானது மற்றும் அழிவற்றது.
- நிலம் செழுமையை பொருத்து பல வகைப்படும்.
- நிலம் பலவித பயன்பாடுகளை உடையது.
- நிலம் செயலற்ற உற்பத்திக் காரணி.
- நிலத்திற்கு உற்பத்தி செலவு இல்லை.
- நிலம் அசைவற்றது, இடம் மாறாது.
- நிலத்தின் அளிப்பு நிலையானது.

19. **அளிப்பு நெகிழ்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**

**அளிப்பு நெகிழ்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள்.**

- **பொருளின் தன்மை:** நிலைத்திருக்கக் கூடிய பொருட்களின் அளிப்பு நெகிழ்ச்சி அதிகம்.
- **உற்பத்திச் செலவு:** வளர்ந்து செல் விளைவு நிலையில் அளிப்பின் நெகிழ்ச்சி அதிகம்.
- **தொழில்நுட்ப நிலை:** மூலதன கருவிகளை குறைவாக பயன்படுத்தும் போது அளிப்பின் நெகிழ்ச்சி அதிகம்.
- **கால அளவு:** அளிப்பின் நெகிழ்ச்சி மிகக் குறுகிய காலத்தில் குறைவு, நீண்ட காலத்தில் அதிகம்.

20. **தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?**

**தொழில் முனைவோரின் பணிகள்:**

- வளங்கள் மற்றும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தொழிலை தொடங்கி உற்பத்தியை மேற்கொள்ளுதல்.
- தொழிலில் ஏற்படும் இடர்பாடுகளையும், நிச்சயமற்ற தன்மைகளையும் எதிர்கொள்ளல்.
- உற்பத்திக் காரணிகளின் உத்தம ஒருங்கிணைப்பில் உற்பத்தி செய்தல்.
- உற்பத்தி முறைகளில் புத்தாக்கங்களை புகுத்துதல்.
- வழிகாட்டி மேற்பார்வையிடுவதன் மூலம் கட்டுப்படுத்தி ஒழுங்குப்படுத்துதல்.

21. **பொருளியலின் உட்பிரிவுகள் யாவை?**

**பொருளியலின் உட்பிரிவுகள்:** நுகர்வு, உற்பத்தி, பகிர்வு, பரிமாற்றம், பொதுநிதி.

22. **அளிப்பு விதியை எழுதுக.**

**அளிப்பு விதி:**

- விலை அதிகரித்தால் அளிப்பு அதிகரிக்கும், விலை குறைந்தால் அளிப்பு குறையும்.
- விலைக்கும் அளிப்பிற்கும் நேரடித்தொடர்பு நிலவும்.

23. **அளிப்பு நெகிழ்ச்சியை பற்றி கூறுக.**

**அளிப்பு நெகிழ்ச்சி:**

- விலை மாற்றத்தினால் ஏற்படும் அளிப்பு மாற்ற வீதமே அளிப்பு நெகிழ்ச்சி.
- அளிப்பு நெகிழ்ச்சி $= \frac{\text{அளிப்பு மாற்ற விழுக்காடு}}{\text{விலை மாற்ற விழுக்காடு}}$
- $e_p = \frac{\Delta Q_S}{Q_S} \div \frac{\Delta P}{P} = \frac{\Delta Q_S}{Q_S} \times \frac{P}{\Delta P} = \frac{\Delta Q_S\, P}{Q_{S\,\Delta P}}$.





www.Padasalai.Net

24. **காப் டக்கலஸ் உற்பத்திச் சார்பை விளக்குக.**

**காப் – டக்லஸ் உற்பத்திச் சார்பு:**

- சமச்சீர் தன்மை வாய்த்த ஒருபடித்தான உற்பத்திச் சார்பு.
- உற்பத்திக் காரணிகளின் விகிதாச்சார அதிகரிப்புக்கு ஏற்ப உற்பத்தியும் அதே விகிதாச்சாரத்தில் அதிகரிக்கும்.
- காப் – டக்லஸ் உற்பத்திச் சார்பு $(Q) = AL^{\alpha} Q^{\beta}$

Q = வெளியீடு. A = நேர்மறை நிலைமதிப்பு. C = மூலதனம். L = உழைப்பு.

$\alpha =$ அடுக்கு விகித அளவு உழைப்பு. $\beta =$ அடுக்கு விகித அளவு மூலதனம்.

- $\alpha + \beta = 1$ எனில் மாறா விகித விளைவு.
- $\alpha + \beta < 1$ எனில் குறைந்து செல் விகித விளைவு.
- $\alpha + \beta > 1$ எனில் வளர்ந்து செல் விகித விளைவு.


25. **உற்பத்தியாளர் சமநிலையை வரைபடத்திடன் விளக்குக.**

**உற்பத்தியாளர் சமநிலை:**

உற்பத்திக் காரணிகளின் உத்தம ஒருங்கிணைப்பில் உச்ச பட்ச உற்பத்தியை குறைந்த செலவில் அடையும் நிலையே உற்பத்தியாளர் சமநிலை.

**உற்பத்தியாளர் சமநிலை அடைய நிபந்தனை:**

- சம அளவு செலவுக்கோடு சம உற்பத்தி வளைகோட்டிற்கு தொடுகோடாக அமையும்.
- அந்த தொடு புள்ளியில் சம உற்பத்தி வளைகோடு தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்




**வரைபட விளக்கம்:**

- E புள்ளியில் இறுதிநிலை தொழில்நுட்ப பதிலீட்டு வீதமும், உற்பத்திக் காரணிகளின் விலை வீதமும் சமம்.
- இந்த E புள்ளியில் உற்பத்தியாளர் சமநிலை பெற்று அதிக உற்பத்தியை பெறுவார்.
- E சமநிலைப் புள்ளியில் $MRTS_{LK} = \frac{P_L}{P_K}$
- E புள்ளியில் $IQ_2$ என்ற சமஉற்பத்தி வளைகோட்டின் சாய்வும், AB என்ற சம அளவு செலவு கோட்டின் சாய்வும் சமம்.

26. **மொத்த – சராசரி – இறுதிநிலை உற்பத்திகளுக்கு இடையே உள்ள தொடர்பினை கூறுக.**

| நிலைகள் | மொத்த உற்பத்தி (TP) | சராசரி உற்பத்தி (AP) | இறுதிநிலை உற்பத்தி (MP) |
|---|---|---|---|
| நிலை I | வளர் வீதத்தில் அதகரிக்கும். | அதிகரித்து சென்று பின் உச்ச நிலையை அடையும். | அதிகரித்து சென்று உச்சத்தை அடைந்து பின் குறைய தொடங்கும். |
| நிலை II | குறைந்து செல் வீதத்தில் அதிகரித்து உச்சநிலையை அடையும். | AP = MP நிலையை அடைந்த பிறகு குறைய தொடங்கும். | குறைந்து சென்று பூஜ்ஜியத்தை அடையும். |
| நிலை III | குறைய தொடங்கி தொடர்ந்து குறையும். | குறைந்து செல்லும் பூஜ்யத்தை விட அதிகமாக இருக்கும். | எதிர்கணியமாகும். |

## 4. செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு

27. **மாறாச் செலவை மாறும் செலவில் இருந்து வேறுபடுத்துக.**

| மாறும் செலவு | மாறாச் செலவு |
|---|---|
| உற்பத்திக்கு ஏற்ப மாறுபடும். | உற்பத்திக்கு ஏற்ப மாறுபடாது, நிலையாக இருக்கும். |
| உற்பத்தி பூஜ்யம் எனில் மாறும் செலவு பூஜ்யம். | உற்பத்தி பூஜ்யமாக இருந்தாலும் மாறாச் செலவு உண்டு. |
| மாறும் காரணிகளுக்குகான செலவு. | மாறா காரணிகளுக்குகான செலவு. |
| **உதாரணம்** – மூலப்பொருளுக்கான செலவு. | **உதாரணம்** – வாடகை, காப்புக் கட்டணம். |

28. **பணச் செலவு உண்மைச் செலவு வேறுபாடுகளை கூறுக.**

| பணச்செலவு | உண்மைச் செலவு |
|---|---|
| உற்பத்தியில் பணமாக செய்யப்படும் செலவு. | உழைப்பாளர்களின் துன்பங்களும் தியாகங்களுமே உண்மைச் செலவு. |
| வெளிப்படையானது. கணக்கு ஏடுகளில் பதியப்படும். | தன் உள்ளுணர்வு சார்ந்தது. மதிப்பிடுவது கடினம். |
| உதாரணம்: கூலி, சம்பளம், வட்டி, மின் கட்டணம். காப்பீட்டு கட்டணம். | உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் சங்கடங்கள், முயற்சிகள், தியாகங்கங்ள். |

29. **<u>வெளியுறுச் செலவு – உள்ளுறு செலவு வேறுபடுத்துக.</u>**

| வெளியுறு செலவு | உள்ளார்ந்த செலவு |
|---|---|
| உற்பத்திக் காரணிகளை வாங்க செலுத்தும் தொகை. | நிறுவனத்திற்கு சொந்தமான உற்பத்திக் காரணிகளுக்கு வழங்கப்படும் ஊதியம். |
| கணக்கியல் செலவு, வெளிச்செல்லும் செலவாகும். | மறைந்திருக்கும் செலவு, ஏட்டுச் செலவாகும். |
| உதாரணம் – கூலி, வட்டி, மின் கட்டணம். | சொந்தமான வளங்கள், சுய உழைப்பிற்கான செலவு. |

30. **<u>வாய்ப்பு செலவை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.</u>**

**<u>வாய்ப்புச் செலவு</u>: (பரிமாற்றச் செலவு) (மாற்றுச் செலவு)**

- அடுத்த தகுந்த மதிப்புடைய மாற்றுப் பண்டங்களின் மதிப்பே வாய்ப்புச் செலவு.
- அடுத்த சிறந்த மாறுபட்ட செலவே வாய்ப்புச் செலவு.
- கணக்குச் செலவிற்கும், பொருளாதாரச் செலவிற்கும் உள்ள வேறுபாடே வாய்ப்புச்செலவு.

**<u>உதாரணம்</u>–** • நெல் பயிரிட்டால் கரும்பு பயிரிட முடியாது.

- கிரிகெட் பார்பதால் படிக்கும் நேரத்தை இழக்க நேரிடும்.
- கலை பிரிவை பயின்றால் அறிவியல் பிரிவை இழக்க வேண்டும்.

31. **<u>இருவர் முற்றுரிமையின் இயல்புகள் யாவை?</u>**

**<u>இருவர் முற்றுரிமையின் இயல்புகள்</u>:**

- இரு விற்பனையாளரும் போட்டியாளரின் செயல்பாடுகளை முழுமையாக அறிந்திருப்பர்.
- இரு விற்பனையாளரும் விற்பனை தொடர்பான உடன்பாடு செயதிருப்பர்.
- அவர்கள் முறையற்ற போட்டியில் ஈடுபடலாம்.
- உற்பத்தி பண்டங்களில் வேறுபாடு இல்லை.
- விலை அதிக இலாபம் பெறும் நோக்கில் தீர்மானிக்கப்படும்.

32. **<u>இறுதிநிலை வருவாய் – குறிப்பு வரைக.</u>**

**<u>இறுதிநிலை வருவாய்</u>:**


- கூடுதலாக ஒரு அலகு பண்டத்தை விற்பனை செய்வதால் மொத்த வருவாயில் ஏற்படும் நிகர மாற்றம்.
- மொத்த வருவாயில் ஏற்படும் மாற்றத்தை மொத்த பண்டங்களின் அளவில் ஏற்படும் மாற்றத்தால் வகுக்க கிடைக்கும் ஈவு.

• $MR = \frac{\Delta TR}{\Delta Q}$ • $MR = TR_n - TR_{n-1}$


33. **<u>AC மற்றும் MC தொடர்பினை எழுதுக.</u>**

**<u>AC மற்றும் MC தொடர்பு</u>:**

- AC குறைய MC குறையும் ஆனால் AC யை விட MC வேகமாக குறையும்.
- AC அதிகரிக்க MC அதிகரிக்கும் ஆனால் AC யை விட MC வேகமாக அதிகரிக்கும்.
- AC கோட்டின் மிகத் தாழ்வான புள்ளியில் MC கோடு கீழ் இருந்து வளரும் போக்கில் வெட்டிச் செல்லும்.
- AC யின் தாழ்வான புள்ளியில் AC = MC.




34. **<u>நீண்ட கால சராசரி செலவுக்கோட்டை வரைபடத்துடன் விளக்குக.</u>**




- $LAC = \frac{LTC}{Q}$
- LAC பல SAC கோடுகளில் இருந்து பெறப்படுகிறது.
- பல SAC கோடுகளின் மிகத் தாழ்ந்த புள்ளிகளை ஒருங்கணைத்து LAC அமைந்துள்ளது.
- LAC ஒவ்வொரு அலகு அதிக உற்பத்தியுடன் குறைந்து ஒரு குறிப்பிட்ட புள்ளிக்கு பிறகு அதிகரித்து படகு வடிவத்தில் அமையும்.
- LAC திட்ட வளைகோடு, உறைவடிவ வளைகோடு என்றும் அழைக்கப்படுகிறது.

35. **<u>L வடிவ நீண்ட கால சராசரி செலவுக் கோடு பற்றி நீ அறிவது யாது</u>?**

**<u>L வடிவ நீண்டகால சராசரி செலவுக் கோடு</u>:**

- தற்போதுள்ள செலவு கோட்பாடுகளின் படி LAC கோட்டின் வடிவம் L.
- நீண்ட காலத்தில் ஆலையின் விரிவாக்கம், உற்பத்தியின் அதிகரிப்பு, பொருளாதார சிக்கனத்தினால் உற்பத்தி செலவு குறையும்.
- இதனால் நீண்ட கால சராசரி செலவுக் கோடு L வடிவத்தில் அமையும்.

www.Padasalai.Net

## 5) அங்காடி அமைப்பும் விலை நிரணயமும்.

36. **அங்காடியின் இயல்புகள் யாவை?**
**அங்காடியின் இயல்புகள்(பண்புகள்) :** • வாங்குவோரும் விற்போரும் இருக்க வேண்டும்.
• வாங்கவும் விற்கவும் பொருள் இருக்க வேண்டும். • வாங்க – விற்கப்படும் பண்டங்களுக்கு விலை இருக்க வேண்டும்.
• நேரடியாகவோ மறைமுகமாகவோ பரிமாற்றம் நடைபெற வேண்டும்.

37. **குவித்தல் என்பதன் பொருள் யாது?**
**குவித்தல்:** • முற்றுரிமை நிறுவனம் தனது பண்டத்திற்கு உள்ளூர் அங்காடியில் அதிக விலையும் வெளியூர் அங்காடியில் குறைந்த விலையையும் தீர்மானிப்பதே குவித்தல்.
• ஒரு நாடு மற்றொரு நாட்டில் தனது பொருட்களை ஏராளமாக குவித்து அந்த நாட்டு அங்காடியை கைப்பற்றுவதாகும்.
• இந்தியாவின் மின்னணுசாதன அங்காடி சீன பொருட்களினால் நிரப்பப்பட்டுள்ளது.
• குவித்தல் என்பது பன்னாட்டு விலைபேதம் காட்டுதலாகும்.

38. **விலை பேதம் காட்டுதலின் நிலைகளை விளக்குக.**
**விலை பேதம் காட்டுதலின் நிலைகள்:** (A.C. பிகு)
• **முதல் நிலை விலைபேதம் காட்டுதல்:** • வாங்குவோர் தர விரும்பும் அதிகபட்ச விலை வசூலிக்கப்படும்.
• நுகர்வோர் எச்சம் முற்றிலும் இருக்காது இது முழு பேதம் எனப்படும்.
• **இரண்டாம் நிலை விலை பேதம் காட்டுதல்:**
• வாங்குவோர் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பல்வேறு விலைகள் வசூலிக்கப்படும்.
• நுகர்வோர் உபரியில் ஒரு பகுதி உறிஞ்சப்படும். உதாரணம் – திரையரங்கு கட்டணங்கள்.
• இது நிறை – குறை பேதம் காட்டுதல் எனப்படும்.
• **மூன்றாம் நிலை விலைபேதம் காட்டுதல்:**
• அங்காடி பல துணை அங்காடிகளாகப் பிரிக்கபடும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விலை வசூலிக்கப்படும்.
• குழுக்கள் வயது, இனம் மற்றும் இடத்தை பொருத்து பிரிக்கப்படும்.
• **உதாரணம்:** இரயில் கட்டணம், பொருட்காட்சி – கண்காட்சி கட்டணங்கள்.

39. **விற்பனைச் செலவு என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.**
**விற்பனைச் செலவு:** • நிறுவனங்கள் தனது பண்டத்தின் விற்பனையை அதிகரிக்க செய்யும் செலவுகள்.
**உதாரணம்:** விளம்பரச் செலவு, மாதிரிகளை விலையின்றி வழங்குதல், காட்சி பொருள் அமைத்தல்.
• ஒரு பண்டத்தின் தேவை வளைகோட்டின் வடிவத்தை மாற்றி அமைக்க செலவிடும் பணத்தின் அளவு.

40. **நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?**
**நிறுவனம்:** • ஒரு தொழிலில் இருக்கும் ஒற்றை உற்பத்தி அலகே நிறுவனம்.
• பொருளை உற்பத்தி செய்து, விலையை தீர்மானித்து, விற்பனை செய்யும் ஒற்றை உற்பத்தி அலகே நிறுவனம்.
• உதாரணம்: டால்மியா சிமெண்ட்.
**தொழிற்சாலை:**
• ஒரே மாதிரியான பொருளை உற்பத்தி செய்யும் பல நிறுவனங்களின் தொகுப்பே தொழிற்சாலை.
• சிமெண்ட் உற்பத்தி செய்யும் டால்மியா சிமெண்ட், சங்கர் சிமெண்ட், ராம்கோ சிமெண்ட் போன்ற நிறுவனங்களின் தொகுப்பு.

41. **முற்றுரிமை என்பதன் பொருள் யாது?**
**முற்றுரிமை:**
• MONO என்ற சொல்லின் பொருள் ஒன்று. • POLY என்ற சொல்லின் பொருள் விற்பது.
• MONOPOLY என்றால் ஒரு பண்டத்தை ஒருவரே உற்பத்தி செய்து விற்பனை செய்யும் அங்காடி.

42. **நிறைவுப்போட்டி மற்றும் முற்றுரிமை அங்காடியில் உள்நுழைதல் தன்மை யாது?**

| நிறைவுப்போட்டி | முற்றுரிமை |
|---|---|
| நிறுவனங்கள் எளிதாக தொழிலில் நுழைய முடியும். | புதிய நிறுவனங்கள் நுழைவது கடினம். |
| புதிய நிறுவனங்கள் தொழில் நுழைய தடையில்லை. | உரிமம், சட்டங்கள், தொழில்நுட்பம், பொருளாதார, இயற்கை தடைகள் கடுமையாக இருக்கும். |
| குறுகிய காலத்தில் நிறுவனங்களின் நுழைவால் அளிப்பு அதிகரித்து விலை குறையும். | குறுகிகாலம் – நீண்ட காலம் என்ற வேறுபாடு இல்லை. விலை அதிகமாக இருக்கும். |

43. **நிறைவுப்போட்டி மற்றும் முற்றுரிமை போட்டிக்கும் உள்ள ஒற்றுமைகளை விளக்குக.**
**நிறைவுப் போட்டி – முற்றுரிமைப் போட்டி பொதுவான பண்புகள்(ஒற்றுமைகள்) :**
• நிறுனங்களின் முக்கிய நோக்கம் இலாபம் ஈட்டுதல்.
• விற்போரும் வாங்குவோரும் அங்காடியில் நுழைய, வெளியேற தடையில்லை.
• நிறுவனங்கள் MC = MR என்ற நிலையில் சமநிலை பெறும்.
• நிறுவனங்கள் குறுகிய காலத்தில் மிகை இலாபம் அல்லது நட்டம் பெறும்.
• நிறுவனங்கள் நீண்டகாலத்தில் இயல்பு இலாபத்தை பெறும்.
• உற்பத்தி பண்டங்கள் பொதுவாக பதிலீட்டுப் பண்டங்களாக அமையும்.

44. **இருமுக முற்றுரிமை என்றால் என்ன?**
• ஒரே ஒரு உற்பத்தியாளர் மற்றும் ஒரே ஒரு வாங்குபர் மட்டும் உள்ள அங்காடி அமைப்பு.
• முற்றுரிமை மற்றும் வாங்குவோர் முற்றுரிமை இணைந்த அங்காடி அமைப்பு.





www.Padasalai.Net

45. **பணத் தேவைக்கான நோக்கங்கள் யாவை?**
**பணத் தேவைக்கான (நீர்மை விருப்பத்திற்கான) நோக்கங்கள்:**

- **பேர(பரிமாற்ற) நோக்கம்:**
அன்றாட செலவுகளை மேற்கொள்ள பணத்தை ரொக்கமாக கையில் வைத்திருக்க விரும்புதல். $M_T = f(Y)$
- **முன்னெச்சரிக்கை நோக்கம்:**
எதிர்பாராத செலவுகளை மேற்கொள்ள பணத்தை ரொக்கமாக கையில் வைத்திருக்க விரும்புதல். $M_P = f(Y)$
- **ஊக வணிக நோக்கம்:**
முதலீட்டுச் சந்தையில் பங்கு பத்திரங்களை வாங்கி விற்பதன் மூலம் இலாபம் பெறும் நோக்கில் பணத்தை ரொக்கமாக கையில் வைத்திருக்க விரும்புதல். $M_S = f(I)$

46. **கூலியின் வகைகளை பட்டியலிடுக.**
**கூலியின் வகைகள்:**

- **பணக்கூலி:** தொழிலாளர் தன் உழைப்பிற்காக பெறுகின்ற பணத்தின் அளவே பணக்கூலி.
- **உண்மைக்கூலி:** பணக்கூலியின் வாங்கும் திறனோடு நிறுவனத்தின் மூலம் பெறுகின்ற பிற சலுகைகளும் சேர்ந்ததே உண்மைக் கூலி.
- **துண்டுக் கூலி:** முடிக்கப்பட்ட வேலையின் அளவுக்கு ஏற்ப வழங்கப்படுவதே துண்டுக் கூலி.
- **நேரக் கூலி:** உழைப்பாளி உழைக்கின்ற நேரத்தின் அளவுக்கு ஏற்ப வழங்கப்படுவதே நேரக் கூலி.

47. **வாரம் மற்றும் போலி வாரம் வேறுபடுத்துக.**

| வாரம் | போலி வாரம் |
|---|---|
| நிலத்திற்கு வழங்கப்படுவது. | மனிதனால் உருவாக்கப்பட்ட கருவிகளுக்கு வழங்கப்படுவது. |
| வாரம் விலையில் சேரும். | போலிவாரம் விலையில் சேராது. |
| நிலத்தின் அளிப்பு எப்போதும் நிலையானது. | இயந்திரங்களின் அளிப்பு குறுகிய காலத்தில் மட்டும் நிலையானது. |
| நீண்ட காலத்திலும் வாரம் வழங்கப்படும். | நீண்ட காலத்தில் போலிவாரம் மறைந்து விடும். |
| வாரம் = உண்மை வருவாய் – மாற்று வருவாய் | போலிவாரம் = மொத்த வருவாய் – மொத்த மாறும் செலவு. |

48. **பிழைப்பு மட்ட கூலிக் கோட்பாட்டை சுருக்கமாக எழுதுக.**
**பிழைப்பு மட்ட கூலிக் கோட்பாடு: (இயற்கைவாதிகள்)**

- வழங்கப்படும் கூலியானது உழைப்பாளியின் குடும்பத்தின் குறைந்த பட்ச அடிப்படை தேவைகளின் அளவிற்கு சமமாக இருக்க வேண்டும்.
- பிழைப்பு மட்ட அளவை விட அதிகமாக கூலி வழங்கினால் மக்கள்தொகை அதிகரிக்கும்.
உழைப்பாளரின் அளிப்பு உயர கூலி குறையும்.
- பிழைப்பு மட்ட அளவை விட குறைவாக கூலி வழங்கினால் மக்கள்தொகை குறையும்.
உழைப்பாளரின் அளிப்பு குறைய கூலி உயரும்.
- எனவே கூலி எப்போதும் பிழைப்பு மட்ட அளவில் இருக்கும்.

**திறனாய்வு:**

- தொழிற் சங்கங்களின் கூட்டு பேரம் கவனத்தில் கொள்ளப்படவில்லை.
- பல்வேறு கூலி நிலைகள் விளக்கப்படவில்லை.
- குழந்தை பிறப்பை தீர்மானிப்பது கூலி மட்டும் அல்ல.

49. **மாற்று வருவாய் என்றால் என்ன?**
**மாற்று வருவாய்:**
ஒரு உற்பத்திக் காரணியை அதன் தற்போதைய பயன்பாட்டில் நீடித்திருக்க வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியம்.

50. **புத்தாக்க இலாப கோட்பாட்டை சுருக்கமாக எழுதுக.**
**புத்தாக்க இலாபக் கோட்பாடு: (சும்பீட்டர்)**

- தொழில் முனைவோரின் புத்தாக்கம் புனையும் பணிக்கான வெகுமதியே இலாபம்.
- வணிகத்தில் புதிய கண்டுபிடிப்புகளை பயன்படுத்துவதே புத்தாக்கம் புனைதல்.
- புத்தாக்கம் புனைவதால் உற்பத்தி செலவு குறையும் இலாபம் கிடைக்கும்.

**சும்பீட்டர் கூறும் புத்தாக்கங்கள்:**

- புதிய பண்டங்களை அறிமுகம் செய்தல்.
- புதிய உற்பத்தி முறைகளை அறிமுகம் செய்தல்.
- புதிய சந்தைகளை தொடங்குதல்.
- புதிய மூலப் பொருட்களை கண்டறிதல்.
- தொழில் நிறுவனங்களை மறுசீரமைத்தல்.

51. **இடர் தாங்கும் இலாபக் கோட்பாடு குறிப்பு வரைக.**
**இடர் தாங்கும் இலாப கோட்பாடு : (F.B. ஹாலே)**

- தொழில் முனைவோரின் இடர் தாங்கும் பணிக்கான வெகுமதியே இலாபம்.
- தொழில் முனைவோரின் முக்கிய பணி இடர்பாடுகளை எதிர்கொள்ளல் இதுவே இலாபத்தின் அடிப்படை.
- இலாபம் அதிகமாக பெற வேண்டும் எனில் அதிகமாக இடர்பாடுகளை சமாளிக்க வேண்டும்.
- இலாபமே தொழில் முனைவோரை இடர்பாடுகளை எதிர்கொள்ள தூண்டுகிறது.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

52. **நிலையற்றத் தன்மையை தாங்கும் இலாப கோட்பாடு பற்றி விளக்குக.**

**நிலையற்ற தன்மையை தாங்கும் இலாபக் கோட்பாடு: (F.H. நைட்)**

- தொழிலில் நிச்சயமற்றத் தன்மையை தாங்குவதற்கான வெகுமதியே இலாபம்.
- தீ விபத்து, கொள்ளை, இயற்கை சீற்றம் போன்ற இடர்பாடுகளை அளவிட்டு காப்பீடு செய்ய முடியும்.
- நிறுவனங்களிடையே போட்டி, சந்தை நிலை, தொழில் நுட்ப மாற்றம், அரசின் கொள்கைகள் ஆகிய நிச்சயமற்றத் தன்மைகளை ஊகித்து காப்பீடு செய்ய முடியாது.
- தொழில் முனைவோர் நிச்சயமற்றத் தன்மையின் சுமையை ஏற்றுக்கொள்வதற்கான வெகுமதியே இலாபம்.

53. **இயங்குநிலை இலாப கோட்பாடு விளக்குக.**

**இயக்கநிலை இலாப கோட்பாடு: (J.B. கிளார்க்)**

- சமுதாயத்தில் ஏற்படும் இயக்கநிலை மாற்றங்களுக்கான வெகுமதியே இலாபம்.
- விலைக்கும் பண்டங்களின் உற்பத்தி செலவிற்கும் உள்ள வெறுபாடே இலாபம்.
- உற்பத்தி செலவை விட கூடுதலாக வாங்கும் விலையே இலாபம்.
- இயங்காநிலை சமுதாயத்தில் மாற்றம் ஏற்படாது. உற்பத்தி செலவும் விலையும் சமமாக இருக்கும்.

**இயக்கநிலை மாற்றங்கள்:**

- மக்கள் தொகை அதிகரித்தல். • மூலதன அளவு அதிகரித்தல். • உற்பத்தி முறைகள் மேம்பாடு அடைதல்
- தொழில் அமைப்பின் அளவு மாற்றம் அடையும். • நுகர்வோரின் விருப்பங்கள் பெருகுதல்.

54. **இலாபம் என்றால் என்ன? வகைகள் யாவை?**

**இலாபம்:**

- தொழில் முனைவோர் உற்பத்திக் காரணிகளின் பணிகளை உற்பத்தியில் ஒருங்கிணைப்பதற்கான வெகுமயே இலாபம்.
- தொழில் முனைவோர் தொழில் திறமையை உற்பத்தியில் பயன்படுத்துவதற்கான வெகுமதியே இலாபம்.

**இலாபத்தின் வகைகள்:**

- **முற்றுரிமை இலாபம்:** முற்றுரிமை கட்டுப்பாட்டினால் பெறக்கூடிய இலாபம்.
- **எதிர்பாராத இலாபம்:** எதிர்பாராத பல காரணிகளால் தோன்றக்கூடிய இலாபம்.
- **இயங்குவதற்கான வெமதி இலாபம்:** தொழில் முனைவோரின் பணிக்கான வெகுமதி இலாபம்.
- **இயல்பு இலாபம்:** தொழிலில் நீடித்து இருக்க எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச இலாபம்.
- **மிகை இலாபம்:** இயல்பு இலாபத்திற்கு மேல் பெறப்படும் தொகை.
- **மொத்த இலாபம்:** மொத்த வருவாய்க்கும் மொத்த செலவிற்கும் உள்ள வேறுபாடு.
- **நிகர இலாபம்** = மொத்த இலாபம் – உள்ளார்த் செலவுகள்.

55. **காத்திருத்தல் வட்டிக்கோட்பாட்டு குறிப்பு வரைக.**

**காத்திருத்தல் வட்டிக் கோட்பாடு: (மார்ஷல்).**

- ஒருவர் தனது நிகழ்கால நுகர்வை தவிர்த்து தியாகம் செய்து சேமிக்கிறார்.
- சேமிப்பவர் நுகர்வை தவிர்த்து காத்திருப்பதற்காக வழங்கப்படுவதே வட்டி.

**திறனாய்வு:**

- உற்பத்திக் காரணிகளின் உற்பத்தி திறன் புறக்கனிக்கப்பட்டுள்ளது.
- செல்வந்தர்களுக்கு சேமிப்பு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூற முடியாது.

## 7. இந்திய பொருளாதாரம்.

56. **பொருளாதார முன்னேற்றம் – வரையறு.**

**பொருளாதார முன்னேற்றம்:**

- ஒரு நாட்டின் GDP அதிகரித்தல், அந்த நாட்டு மக்களின் நல வாழ்வையும், உயர்வான வாழ்க்கை தரத்தையும் உள்ளடக்கியது.
- தலா வருமானத்தை பொருத்து ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம், நாட்டின் நலம் அதிகரிப்பது.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் கட்டமைப்பில் நிகழும் தொடர்ச்சியற்ற மற்றும் தன்னிச்சையான மாற்றங்களை குறிக்கும்.
- உற்பத்தி அதிகரிப்பதோடு உற்பத்தியாகும் பொருட்களின் வகைகளும் மாறுவதை காட்டுவதே பொருளாதார முன்னேற்றம்.

57. **வேளாண்மை பொருளாதாரம் பற்றி அம்பேத்கர் அவர்களின் பொருளாதார கருத்துகள் யாவை?**

**வேளாண்மை பொருளாதாரம்: (அம்பேத்கர்)**

- 1918 இல் இந்தியாவில் குறைந்த நிலவுடைமை மற்றும் தீர்வுகள் என்ற கட்டுரையை அம்பேத்கர் எழுதினார்.
- நிலவுடைமை ஒருங்கிணைப்பு மற்றும் நிலவுடைமை விரிவாக்கம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாட்டை விளக்கினார்.
- இது ஆடம் ஸ்மித்தின் நாடுகளின் செல்வத்தை போல அமைந்தது.

58. **மக்கள் தொகை அடர்த்தி என்றால் என்ன?**

**மக்கள் தொகை அடர்த்தி:** ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையே மக்கள் தொகை அடர்த்தி.

59. **கிராம சர்வோதயா – சிறு குறிப்பு வரைக.**

**கிராம சர்வோதயா: (காந்தியடிகள்)**

- உண்மையாக இந்தியா வாழ்வது நகரங்களிலோ புற நகரங்களிலோ இல்லை கிராமங்களில் – காந்தியடிகள்
- கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும்.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

60. **<u>இந்திய திட்டமிடுதலில் நேருவின் அணுகுமுறைகளை எழுதுக.</u>**
**<u>இந்திய திட்டமிடுதலில் நேருவின் அணுகுமுறைகள்:</u>**
- திட்டமிடுதலை இந்தியாவில் அறிமுகப்படுத்தியவர் நேரு.
- ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைக்கு திட்டமடுதல் அவசியம்.
- திட்டமிடுதலின் சாரம் என்பது மனித சக்தி வளங்கள், பணம் ஆகியவற்றை சிறந்த வழியில் பயன்படுத்துவதாகும்.
- திட்டமிடுதல் மூலம் ஒரு நாடு தன்னைதானே வளர்ச்சியடையச் செய்து தற்சார்பினை அடைகிறது.

61. **<u>பெருக்கி கருத்தை பற்றி V. K. R. V. ராவ் வின் பங்களிப்பை எழுதுக.</u>**
**<u>பெருக்கி கருத்தை பற்றி V. K. R. V. ராவ் வின் கருத்துகள்:</u>**
- முன்னேற்றம் அடையாத நாடுகளின் முதலீடு, வருமானம், மற்றும் பெருக்கி ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு என்ற நூலை 1952 ல் ராவ் எழுதினார்.
- இந்த நூல் பேரியல் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பை வழங்கியது.
- ராவ் பொருளாதாரத்தில் கீன்ஸின் அடிகளை பின்பற்றினார்.

62. **<u>நலப் பொருளாதாரம் பற்றிய அமர்த்தியா குமார் சென் கருத்துகளை எழுதுக.</u>**
**<u>நலப் பொருளாதாரம் பற்றிய அமர்த்தியா குமார் சென் கருத்துகள்:</u>**
- இரக்கத்திற்கு உரியவர்களாக ஏழைகளை பார்க்காமல் மனிதத் தன்மையுடன் அணுக வேண்டும்.
- ஏழைகளுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.
- ஏழைகள் அதிகார உரிமை கொண்டவர்களாக திகழ வேண்டும்.
- கல்வி, உடல் நலம், ஊட்டச்சத்து, பாலின சமநிலை, துன்ப காலங்களில் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு போன்றவை உரிமைகளாக மாற்றப்பட வேண்டும்.
- வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் நுகர்வு அதிகரிக்கப்பட வேண்டும்.
- அடிப்படை கச்சாப் பொருட்களை மக்களின் நலனுக்காக மாற்றி அமைக்க வேண்டும்.

63. **<u>சமூக கட்டமைப்புகளை விளக்குக.</u>**
**<u>சமூக கட்டமைப்புகள்:</u>**
- மனித வளங்களின் திறமையை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு மறைமுகமாக துணை செய்யும் அமைப்புகளே சமூக கட்டமைப்புகள்.
- **<u>உதாரணம்:</u>** பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், பொது மற்றும் குடிமை வசதிகள்.
- இவை மனித வளங்களின் திறமையையும், உற்பத்தி திறனையும் அதிகரிக்கிறது.
- குறைவான சமூக கட்டமைப்பு இந்திய பணியாளர்களின் உற்பத்தி திறன் குறைய காரணமக உள்ளது.
- மனித வள மேம்பாட்டுத்துறை நம் நாட்டின் கல்விக் கொள்கையையும், திட்டங்களையும் வகுத்து செயல்படுத்தி வருகிறது.

64. **<u>புதுப்பிக்க கூடிய மின் ஆற்றல் மூலங்கள் பற்றி குறிப்பு வரைக.</u>**
**<u>புதுப்பிக்க கூடிய மின் ஆற்றல் மூலங்கள்:</u>** (மரபு சார ஆற்றல் மூலங்கள்)
- மீண்டும் மீண்டும் உருவாக்கி பயன்படுத்தக் கூடிய ஆற்றல் மூலங்களே புதுப்பிக்கதக்க ஆற்றல் மூலங்கள்.
- இவை ஏராளமாகவும் முற்றுப் பெறாதவையாகவும் நீண்டகாலம் நிலைத்திருக்க கூடியதாகவும் உள்ளன.
- **<u>உதாரணம்:</u>** சூரிய சக்தி, காற்று சக்தி, அலைகள் சக்தி, புவிவெப்ப சக்தி, உயிரி எரிவாயு சக்தி.

## <u>8. இந்தியப் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும்.</u>

65. **<u>ஆங்கிலேயர் காலத்தில் இந்தியக் கைவினைப் பொருட்களின் உற்பத்தி குறைந்தது ஏன்?</u>**
**<u>ஆங்கிலேயர் காலத்தில் இந்தியக் கைவினைப் பொருட்களின் உற்பத்தி குறைய காரணங்கள்:</u>**
- பாகுபாடான சுங்கவரிக் கொள்கை மூலம் பிரிட்டிஷ் அரசு இந்திய கைவினைப் பொருட்களை அழித்தது.
- இந்திய அரசர்கள் காலம் முடிவுற்ற பிறகு இந்திய கைவினை தொழில்களை ஆதரிக்க எவரும் இல்லை.
- இந்தியாவில் ரயில்வே அறிமுகமான பிறகு பிரிட்டிஷ் பொருட்களுக்கான உள்நாட்டு சந்தை அதிகரித்தது.
- இயந்திர தயாரிப்பு பொருட்களுடன் போட்டியிட முடியவில்லை.

66. **<u>பொதுத்துறை வங்கிகள் என்றால் என்ன?</u>**
- ஒரு வங்கியின் பெரும்பான்மை பங்குகளை அரசு பெற்றிருக்குமாயின் அந்த வங்கி பொதுத்துறை வங்கியாகும்.
- பொதுத்துறை வங்கிகளில் அரசின் பங்கு **51** சதவீதம் அல்லது 51 சதவீதத்திற்கு மேல் இருக்கும்.
- **<u>உதாரணம்:</u>** பாரத ஸ்டேட் வங்கி. இந்தியன் வங்கி. கனரா வங்கி.

67. **<u>1991 ஆம் ஆண்டு தொழிற் கொள்கையின் மூன்று நோக்கங்கள் யாவை?</u>**
**<u>1991 ஆம் ஆண்டு தொழிற் கொள்கையின் நோக்கங்கள்:</u>**
- தனியார் துறையின் பங்கேற்பை ஊக்குவிக்க ஒதுக்கீடு மற்றும் கட்டுபாடுகளை நீக்குதல்.
- முற்றுரிமை வாணிப கட்டுப்பாட்டு சட்டத்தை ஒழித்தல்.
- அந்நிய முதலீடு மற்றும் அயல்நாட்டு தொழில் நுட்பத்திற்கு சிவப்பு கம்பள வரவேற்பு தருதல்.
- வேலைவாய்ப்பு, உற்பத்தியில் நீடித்த வளர்ச்சியை பராமரித்தல்.
- சர்வதேச போட்டிகளை எதிர்கொள்ளுதல்.
- நலிந்த தொழில் நிறுவனங்களை மறு சீரமைத்தல்.

68. **<u>பெரும் பிரிவினை ஆண்டு குறிப்பு வரைக.</u>**
**<u>பெரும் பிரிவினை ஆண்டு</u>: (1921)**
- 1911 முதல் 1921 வரை காலரா, பிளேக், இன்ஃபுளுயன்சா போன்ற கொல்லை நோய்கள் மற்றும் பஞ்சம் காரணமாக மக்கள் தொகை எதிர்மறையாக குறைந்தது.
- 1921 ஆம் ஆண்டு மக்கள் தொகை அதிகரிக்க துவங்கியது.
- எனவே 1921 ஆம் ஆண்டு பெரும் பிரிவினை ஆண்டு என அழைக்கப்படுகிறது.

69. **வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட காரணங்கள் யாவை?.**

**வணிக வங்கிகள் தேசியமயமாக்கப் பட்டத்தற்கான காரணங்கள்:**

- சமூக நலத்தை அடைதல்.
- தனியாரிடம் இருந்த வணிக வங்கிகள் அரசின் திட்டங்கள், சமூக நலத்திற்கும் உதவிகள் செய்ய தவறின.
- கிராமப்புற மக்களிடையே வங்கி செயல்பாடுகளை ஊக்குவித்தல்.
- கிராம மற்றும் பின்தங்கிய பகுதிகளில் வங்கி கிளைகளை தொடங்கி வளர்ச்சியடைய செய்தல்.
- வட்டாரங்களுக்கிடைய இருந்த ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்.
- வங்கித் தொழிலில் தனியார் முற்றுரிமையை தகர்த்தல்.
- வேளாண்மை, சிறு – குடிசை தொழில்களுக்கு தேவையான கடன்களை இலகுவாக வழங்குதல்.
- பொது சேமிப்பு சமூக விரோத செயல்களுக்கு பயன்படுவதை தடுத்தல்.
- அதிகாரமும் சொத்தும் ஒரே இடத்தில் குவிதலை தடுத்தல்.

70. **பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி குறிப்பு வரைக?**

**பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்**: (2012–2017)

- இதன் முதன்மை நோக்கம் விரைவான அதிகமான உள்ளடங்கிய மற்றும் நிலையான வளர்ச்சி.
- இதன் வளர்ச்சி இலக்கு 8 சதவீதம்.
- மக்களுக்கு வழங்கப்படும் மானியங்களை நேரடியாக வழங்குதல்.
- வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் விகிதத்தை 30 இருந்து 10 சதவீதமாக குறைத்தல்.
- வேளாண்மைத் துறையில் 4 சதவீத வளர்ச்சி விகிதத்தை அடைதல்.
- இத்திட்டத்தின் மொத்த செலவு ₹. 47.7 இலட்சம் கோடி.

71. **காலனி ஆதிக்கத்தின் போது இந்தியாவில் நடைமுறையில் இருந்த பல்வேறு நிலவுடைமை முறைகளை பற்றி தெளிவுப்படுத்துக.**

**ஜமின்தாரிமுறை**: • ஜமின்தார்கள் விவசாயிகளிடம் இருந்து நில வரியை பெற்று அரசுக்கு செலுத்தினர்.

- ஜமின்தார்கள் நிலத்தின் உரிமையாளராக கருதப்பட்டனர்.
- வசூலிக்கப்பட்ட நிலவரியில் 11 ல் 10 பங்கு அரசுக்கு செலுத்தப்பட வேண்டும் .

**மஹல்வாரி முறை**: • கிராம மக்கள் குழுவினர் விவசாயிகளிடம் இருந்து நிலவரியை பெற்று அரசுக்கு செலுத்தினர்.

- கிராம மக்கள் குழுவினர் நிலத்தின் உரிமையாளர்களாக இருந்து நிலத்தை பிரித்து விவசாயிகளிடம் கொடுத்தனர்.
- 66 சதவீதம் வரிவசூல் செய்யப்பட்டது.

**இரயத்வாரி முறை**: • உழவர்களே நிலத்தின் உரிமையாளர்களாக கருதப்பட்டனர்.

- உழவர்களே நிலவரியை அரசுக்கு நேரடியாக செலுத்தினர்.
- தமிழ்நாட்டில் சென்னையில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

72. **PQLI என்றால் என்ன?**

**வாழ்க்கை தரக் குறியீட்டெண்**: (PQLI).

- வாழ்க்கை தரக் குறீயீட்டெண்ணை உருவாக்கியவர் டி. மோரிஸ்.
- PQLI ஒரு நாட்டின் வாழ்க்கை தரத்தினை அளவிடப் பயன்படுகிறது.
- எதிர்பார்ப்பு ஆயுட்காலம், குழந்தை இறப்பு விகிதம், எழுத்தறிவு விகிதம் PQLI ன் குறியீடுகள்.
- PQLI உடல் சார்ந்த மேம்பாட்டை மட்டும் குறிக்கும். இதில் வருமானம் நீக்கப்படுகிறது.
- 1 நாட்டின் மோசமான செயல்பாட்டையும் 100 சிறப்பான செயல்பாட்டையும் குறிக்கும்.

## 9. இந்தியாவின் மேம்பாட்டு அனுபவங்கள்

73. **தனியார்மயமாதலின் கொள்கைகளை எவ்வாறு நியாயப்படுத்தலாம்?**

**தனியார் மயமாதலின் நன்மைகள்:**

- போட்டியை அதகரித்து குறைவான விலையில் தரமான பண்டங்கள்–பணிகளை வழங்குதல்.
- பொருளாதார வளர்ச்சியில் தனியார் துறைக்கு போதுமான வாய்ப்புகளை வழங்குதல்.
- மூலதன பயன்பாட்டின் திறனை அதிகரிக்கச் செய்தல்.
- நாட்டின் வளங்களை முழு திறனுடன் பயன்படுத்தி மேம்பட்ட பொருளாதார வளர்ச்சியை பெறுதல்.
- சமூக நலத்திட்டங்களுக்கு தேவையான வளங்களை திரட்டுதல்.
- மேம்பட்ட நிர்வாகத்துடன் காலதாமதம் மற்றும் ஊழலற்ற சேவைகளை வழங்குதல்.

74. **உலகமயமாதல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விவரி.**

**உலகமயமாதல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

- உள்நாட்டு பொருளாதாரத்தையும் ஏனைய பொருளாதாரங்களையும் ஒன்றிணைப்பதே உலகமயமாதல்.
- சுங்கவரி குறைப்பு, சுங்கவரி தவிர்ப்பு மூலம் இறக்குமதியை எளிமைப்படுத்துதல்.
- அயல்நாட்டு நேரடி முதலீடு (FDI), அயல்நாட்டு தொகுப்பு முதலீடு (FPI) ஆகியவற்றுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு தரப்பட்டது.
- பல நாடுகளுக்கு இடையே உயர் தொழில்நுட்ப முதலீடு மற்றும் பரிவர்த்தனைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.
- 1991 ல் 51% பங்குகள் வரை அயல்நாட்டு நேரடி முதலீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டது.
- இதன் அளவு பின்னர் 74% மாகவும் பின்னர் 100% மாகவும் மாற்றியமைக்கப்பட்டது.
- வெளிநாட்டு முதலீடு ஊக்குவிப்பு வாரியம் அமைக்கப்பட்டது.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

75. **சிறு பிளவு ஆண்டு குறிப்பு வரைக.**
**சிறு பிளவு ஆண்டு:** (1951)
- 1951 ஆம் ஆண்டு சிறு பிளவு ஆண்டு என அழைக்கப்படுகிறது. காரணம்
- 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகைப் பெருக்க விகிதம் 1.33 இல் இருந்து 1.25 சதவீதமாக குறைந்தது.

76. **மக்கள்தொகை வெடிப்பு ஆண்டு குறிப்பு வரைக.**
- 1961 ஆம் ஆண்டு மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு என அழைக்கப்படுகிறது. காரணம்
- 1961 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகையின் உயர்வு வீதம் 1.96 சதவீதமாகும்.

77. **வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை பற்றி குறிப்பு வரைக.**
**வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை:**
- அயல்நாட்டு நேரடி முதலீடு(FDI), அயல்நாட்டு தொகுப்பு முதலீடு(FPI) மற்றும் பன்னாட்டு தொழில் நுட்பத்திற்கு சிவப்பு கம்பள வரவேற்பு தரப்பட்டது.
- வெளிநாட்டு முதலீடு ஊக்குவிப்பு வாரியம் அமைக்கப்பட்டது.
- 1991 ல் 51% பங்குகள் வரை அயல்நாட்டு நேரடி முதலீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டது.
- இதன் அளவு பின்னர் 74% மாகவும் பின்னர் 100% மாகவும் மாற்றியமைக்கப்பட்டது.
- பல நாடுகளுக்கு இடையே உயர் தொழில்நுட்ப முதலீடு மற்றும் பரிவர்த்தனைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

78. **குளிர்பதன கிடங்குப் பற்றி விவரி.**
**குளிர்பதன கிடங்கு:**
- வேளாண் பொருட்கள் கெட்டுப்போகாமல் இருக்க குளிர்மைப்படுத்தப்பட்டு உருவாக்கப்படும் கிடங்கு.
- **1955** ஆம் ஆண்டு அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் மூன்றாவது பிரிவின் கீழ் குளிர்பதன கிடங்கு ஆணை **1964** ல் உருவாக்கப்பட்டது.
- விளைநிலம் முதல் அங்காடி வரை ஒருங்கிணைந்த குளிர்பதன வசதி, பதப்படுத்தும் கட்டமைப்பு வசதியும் உருவாக்கப்பட்டது.
- இருப்பினும் குளிர்பதன சேமிப்பு கிடங்கு வசதி போதிய அளவில் இல்லை.
- விரைவில் அழுகும் தன்மையுடைய பழங்கள், காய்கறிகளை சந்தைப்படுத்துவதில் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன.
- அறுவடைக்கு பின்னால் ஏற்படும் **25%** முதல் **30%** வரையிலான இழப்புகளினால் தனி நபருக்கு கிடைக்கக் கூடிய பழங்கள், காய்கறிகளின் அளவு குறைகிறது.
- நுகர்வோரை சென்றடையும் நேரத்தில் அதன் தரம் குறைவதால் விலையை குறைத்தாலும் தேக்கம் ஏற்படுகிறது.

79. **விவசாய பொருள் அங்காடி குழு என்றால் என்ன?**
**விவசாய பொருள் அங்காடி குழு:** வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பொருட்களை வர்த்தகம் செய்ய மாநில அரசால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டபூர்வ அமைப்பே விவசாய பொருட்கள் அங்காடி குழு.

80. **விவசாய உற்பத்தி அங்காடிக் குழுவின் பணிகளை கூறுக.**
**விவசாய உற்பத்தி அங்காடிக் குழுவின் பணிகள்:**
- வேளாண் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
- சந்தை சார்ந்த விரிவாக்க சேவைகளை வழங்குதல்.
- வேளாண் பொருட்கள் தொடர்பான புள்ளி விவரங்களை வெளியிடுதல், காட்சிப்படுத்துதல்.
- விற்பனை செய்த அதே நாளில் விவசாயிகள் பணம் பெறுவதை உறுதி செய்தல்.
- விலை நிர்ணயம், அங்காடி பரிமாற்றங்களில் வெளிப்படை தன்மைகளை பின்பற்றுதல்.
- வேளாண் சந்தைகளில் பொது மற்றும் தனியார் இடையே கூட்டுறவை வளர்ச்சியடைய செய்தல்.

81. **புதிய வர்த்தகக் கொள்கையின் சாராம்சத்தை விளக்குக.**
**புதிய வர்த்தகக் கொள்கையின் சாராம்சங்கள்:**
- **சுதந்திரமான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி:**
- 1992 ல் இருந்து இறக்குமதி வரையறுக்கப்பட்ட எதிர்மறைப் பட்டியல் மூலம் ஒழுங்குப்படுத்தப்படுகிறது.
- ஏறத்தாழ அனைத்து இடைவினை மற்றும் மூலதனப் பண்டங்களுக்கான இறக்குமதி சுதந்திரமாக்கப்பட்டது.
- 71 பொருட்கள் மட்டுமே தடைசெய்யப்பட்ட பட்டியலில் உள்ளது.
- **சுங்க கட்டண அமைப்பு மற்றும் அளவு கட்டுப்பாடுகளை நீக்குதல்:**
- ராஜா செல்லையா குழு இறக்குமதிக்கான தீர்வையை 50 சதவீதம் குறைக்க பரிந்துரை செய்தது.
- 1991 – 92 நிதிநிலை அறிக்கையில் இறக்குமதி வரி 300 இருந்து 150 சதவீதமாக குறைக்கப்பட்டது.
- அடுத்தடுத்த நிதிநிலை அறிக்கையில் சுங்கவரியை குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

82. **GSTஎன்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக.**
**பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி:** (GST)
- மத்திய, மாநில அரசுகள் விதிக்கும் அனைத்து மறைமுக வரிகளுக்கு மாற்றாக நுகர்வோர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மீது விதிக்கப்படும் மறைமுக வரியே **GST**.
- **GST 2017** ஜூலை **1** ல் நடைமுறைக்கு வந்தது.

**GST யின் நன்மைகள்:**
- ஒருமுனை மறைமுக வரி.
- பதிவுக்கான வாசலாக உள்ளது.
- இணைய வழி மூலம் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.
- தளவாடங்களின் திறன் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.
- அடுக்குவரி விளைவுகளை நீக்கியது.
- சிறிய நிறுவனங்களுக்கான கலவைத் திட்டங்கள் உள்ளன.
- மின்னணு வணிகம் வரையறுக்கப்பட்டுள்ளது.
- அமைப்பு ரீதியற்ற துறையை ஒழுங்கப்படுத்துகிறது.

www.Padasalai.Net

83. **LPG க்கு எதிரான கருத்துகள் யாவை?**

**LPG க்கு எதிரான கருத்துகள்:**

- தாராளமயமாதல் வெளிநாட்டின் பெரிய நிறுவனங்களுக்கு மிக வசதியாக இருந்தது.
- உள்நாட்டு நிறுவனங்கள் மிகவும் பாதிப்பட்டன.
- தனியார்மயமாதல் முற்றுரிமைச் சக்தி, செல்வ வருமான மற்றும் வட்டார வேறுபாடுகளை வளர்க்கும்.
- சமூக நீதியை நிலைநாட்ட முடியாது.
- உலமயமாதல் வளர்ந்த நாடுகளை மேலும் வளரச் செய்தது.
- வளர்ச்சி குறைந்த நாடுகளின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன.

84. **சட்டப்பூர்வ நீர்மை விகிதம் என்றால் என்ன?**

**சட்டபூர்வ நீர்மை விகிதம்(SLR):** பெற்ற வைப்புகளில் வணிக வங்கிகள் ரொக்கமாக, தங்கமாக , அரசு பத்திரமாக வைத்திருக்க வேண்டிய நீர்மை சொத்துக்களின் வீதம்.

85. **கடன் வைப்பு விகிதம் என்றால் என்ன?**

**கடன் வைப்பு விகிதம்(LDR):**

வங்கிகள் வழங்கிய கடனுக்கும், பெற்ற வைப்புகளுக்கும் இடையே உள்ள வீதமே வங்கி வைப்பு விகிதம்.

86. **தாரளமயமாதல் என்றால் என்ன?**

**தாரளமயமாதல்:** சமூக, அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளில் அரசின் கட்டுப்பாடுகளை தளர்த்துவதே தாரளமயமாதல்.

## 10 . ஊரகப் பொருளாதாரம்

87. **ஊரக மேம்பாட்டின் முக்கியத்துவங்களை கூறுக.**

**ஊரக மேம்பாட்டின் முக்கியத்துவங்கள்:**

- ஊரக மக்களின் முன்னேற்றம் மற்றும் பங்களிப்பு இன்றி நாட்டின் முன்னேற்றம் அமையாது.
- நகர்புறங்களுக்கு தேவையான குடிநீர், பால், உணவு, கட்சா பொருட்களை பெற ஊரக மேம்பாடு அவசியம்.
- ஊரக பகுதிகளை முன்னேற்றுவதன் மூலம் இயற்கை வளங்களை முழுமையாக பயன்படுத்த முடியும்.
- ஊரக மேம்பாட்டின் மூலம் வேலைவாய்ப்பை தேடி நகர் பகுதிகளுக்கு மக்கள் குடிபெயர்தலை தடுக்கலாம்.
- ஊரக மக்களுக்கு கல்வி, மருத்துவம் மற்றம் சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை அளிப்பதன் மூலம் மனித வளங்களை உருவாக்கலாம்.

88. **ஊரக வளர்ச்சியின்மைக்கான காரணங்களை விளக்குக.**

**ஊரக வளர்ச்சியின்மைக்கான காரணங்கள்:**

- **நிலங்கள் சரியாக பிரிக்கப்படாமை:**
- ஊரக நிலப்பகுதிகள் ஒரு சிலரிடம் குவிந்து காணப்படுகிறது.
- மக்களால் கூலிக்கு வேலை செய்து தங்களது தேவைகளை நிறைவு செய்ய முடிவதில்லை.
- **பண்ணை சாராத தொழில்களில் வேலைவாய்ப்பின்மை:**
- அதிகரிக்கும் உழைப்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கிராமங்களில் தொழில்கள் வளரவில்லை.
- மிகுதியான தொழிலாளர்களால் ஊரகப் பகுதிகளில் கூலி குறைவாகவே உள்ளது.
- **பணவீக்கம்:**
- விலை அதிகரிப்பதால் ஊரக மக்களின் வாங்கும் சக்தி குறையும் இது பின்தங்கிய நிலைக்கு காரணமாகும்.
- **குறைவான உற்பத்தி திறன்:**
- ஊரக தொழிலாளர்கள் மற்றும் பண்ணைகளின் உற்பத்தி திறன் குறைவாக உள்ளது.
- **பொதுத் துறைகளில் முதலீடு இன்மை:**
- மனித வளத்தை மேம்படுத்துவதற்கான பொதுத்துறை முதலீடு மிகவும் குறைவாக உள்ளது.
- **சமூக குறைபாடுகள்:**

  எழுத்தறிவின்மை, தொழில்நுட்ப அறிவின்மை, நம்பிக்கை குறைவு, பற்றுகள் மற்றும் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், பழைமையான தொழில்நுட்பங்கள்.
- **உள்கட்டமைப்பு சார்ந்த பிரச்சணைகள்:**

  நீர், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, தகவல் தொடர்பு, மருத்துவ வசதி, வங்கி மற்றும் காப்பீடு போன்ற வசதிகள் ஊரக பகுதிகளில் போதுமானதாக இல்லை.

89. **ஊரக வறுமையை நீக்குவதற்கான வழிமுறைகளை எழுதுக.**

**ஊரக வறுமையை நீக்குவதற்கான வழிமுறைகள்:**

- ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
- வறுமை ஒழிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- ஊரகப் பகுதிகளில் தொழிற்சாலைகளை தொடங்க சலுகைகள் வழங்கி ஊக்குவித்தல்.
- நீர்பாசன வசிதிகளை அதிகரித்தல், மேம்படுத்துதல்.
- தீவிர சாகுபடி முறைகளை அதிகரித்தல்.
- தொழிற்கல்வி, தொழில் நுட்ப கல்வி, சுயவேலை வாய்ப்புக்கான கல்வி வழங்குதல்.
- கிராம புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புக்கான பயிற்சி அளித்தல்.
- உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், மேம்படுத்துதல்.

90. **மக்கள் தொகை அடர்த்தி என்றால் என்ன?**

**மக்கள் தொகை அடர்த்தி:**

ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பளவில் வாழும் மக்களின் எண்ணிக்கையே மக்கள் தொகை அடர்த்தி.

91. **ஊரக வேலையின்மையை நீக்குவதற்கான வழிமுறைகளை எழுதுக.**

**ஊரக வேலையின்மையை நீக்குவதற்கான வழிமுறைகள்:**

- துணைத் தொழில்களை தொடங்க ஊக்கப்படுத்துதல்.
- கடன் வசதிகளை ஏற்படுத்தி தருதல்.
- நீர்பாசன வசிதிகளை அதிகரித்தல், மேம்படுத்துதல்.
- தீவிர சாகுபடி முறைகளை அதிகரித்தல்.
- உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், மேம்படுத்துதல்.
- தொழிற்கல்வி, தொழில் நுட்ப கல்வி, சுயவேலை வாய்ப்புக்கான கல்வி வழங்குதல்.
- ஊரக வேலை வாய்ப்பு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல்

92. **இரட்டை நஞ்சாக்கல் என்றால் என்ன?**

**இரட்டை நஞ்சாக்கல்:** • ஊரக மக்கள் நகரங்களுக்கு இடம் பெயர்வதால் ஒருபுறம் கிராமங்கள் காலியாகவும், மறுபுறம் நகரங்கள் நெரிசலாகவும் இருப்பதே இரட்டை நஞ்சாக்கல் – சுமாசர்.

- தற்போதைய வளர்ச்சி வகை முறை மிகவும் அபாயகரமானது என்று சுமாசர் "**சிறியது அழகு**" நூலில் விளக்கியுள்ளார்.

93. **மண்ட ஊரக வங்கி(RRB) பற்றி – குறிப்பு வரைக.**

**வட்டார ஊரக வங்கிகள்(RRB):**

- நரசிம்மன் குழுவின் பரிந்துரை படி வட்டார ஊரக வங்கிகள் 1975 **அக்டோபர்** 2 முதல் செயல்படத் தொடங்கின.
- சிறு – குறு விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள், கிராம கைவினைஞர்களுக்கு கடன் வழங்க RRB உருவாக்கப்பட்டன.
- சிறு – குறு, குடிசை தொழில்களுக்கு கடன், பிற உதவிகளை RRB வழங்குகிறது.
- மத்திய அரசு 50%, மாநில அரசு 15%, வழங்கும் வணிக வங்கி 35% மூலதனத்தை வழங்குவதன் மூலம் இவை உருவாக்கப்படுகின்றன.
- தற்போது இந்தியாவில் 64 வட்டார ஊரக வங்கிகள் செயல்படுகின்றன.
- பொருளாதாரத்தில் நலிவடைந்தோர்க்கு மட்டும் இவை கடன் வழங்குகிறது.
- இதன் வட்டிவீதம் கூட்டுறவு சங்கங்களின் வட்டி வீதத்தை போல் அமையும்.
- **உதாரணம்**: பாண்டியன் கிராம வங்கி, பல்லவன் கிராம வங்கி.

94. **SHG யின் பண்புகளை எழுதுக.**

**சுய உதவிக் குழுக்களின் (SHG) யின் பண்புகள்:**

- உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் இருப்பர்.
- பொதுவாக சுய உதவிக் குழுக்களில் 10 முதல் 20 பெண் உருப்பினர்கள் இருப்பர்.
- தமக்கென வடிவமைக்கப்பட்ட சட்டங்களையும், விதிமுறைகளையும் கொண்டுள்ளன.
- முடிவுகள் உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து ஆலோசித்து எடுக்கப்படும்.
- உறுப்பினர்களின் முழு பங்கேற்புடன் நிர்வாகம் அமையும் .
- உறுப்பினர்களின் சிறு சேமிப்பை அதிகரிக்க உதவுகின்றன.
- உறுப்பினர்களின் பரஸ்பர உதவி, சுய உதவி மூலம் பிரச்சனைகள் தீர்க்கப்படும்.

95. **MUDRA வங்கியின் நோக்கங்களை எழுதுக.**

**முத்ரா (MUDRA) வங்கியின் நோக்கங்கள்:**

- குறுங்கடன் வழங்குபவரையும் பெறுபவரையும் ஒழுங்குப்படுத்துதல்.
- குறுங்கடன் வழங்குவதில் நிலைத்த தன்மையை உருவாக்குதல்.
- சிறு நிதி நிறுவனங்களுக்கு நிதி மற்றும் கடன் வசதிகளை ஏற்படுத்தி தருதல்.
- சிறு நிதி நிறுவனங்களை பதிவு, ஒப்புதல், தர நிர்ணயம் செய்தல்.
- சிறு தொழில் கடன் உத்திரவாத திட்டம் தொடங்குதல்.
- கடன் வழங்குதல், பெறுதல், பகிர்ந்தளித்தலுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

## 11. தமிழ்நாட்டுப் பொருளாதாரம்

96. **தமிழ்நாட்டின் கனிம வளங்களைப் பற்றி குறிப்பு வரைக.**

**தமிழ் நாட்டின் கனிம வளங்கள்:**

- நெய்வேலி 87% மிகப்பெரிய பழுப்பு நிலக்கரி வளத்தை கொண்டுள்ளது.(NLC).
- சேலத்தில் – மாங்கனிசு, ஏற்காட்டில் – பாக்சைட், கஞ்சமலையில் – இரும்புத்தாது சுரங்கங்கள் அமைந்துள்ளன.
- மதுரை மாவட்டம் கரடிக்குட்டம் பகுதியில் மாலிப்டினம் தாது கிடைக்கிறது.
- காவிரி வடி நிலப்பகுதிகளில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு படிவுகள் காணப்படுகின்றன.
- தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஜிப்சம் கிடைக்கிறது.
- கன்னியாகுமரி கடற்கரை மணலில் இல்மனைட் மற்றும் ரூட்டைல் காணப்படுகிறது.
- டைட்டானியம், மேகனசைட், கிராபைட், கிரானைட், பாக்சைட் போன்ற சுரங்கத் திட்டங்கள் தமிழகத்தில் உள்ளன.

97. **தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியை விளக்குக.**

**தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி:**

- தமிழ்நாட்டின் GSDP 2016 –17 நிதியாண்டின் படி 207.8 பில்லியன் டாலர்.
- இது குவைத் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாகும்.
- வாங்கும் சக்தியின் அடிப்படையில் ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாகவும் உள்ளது.
- பிற நாடுகளின் GDP யோடு ஒப்பிட தமிழ்நாட்டின் GSDP அதிகமாகும்.
- **தமிழ்நாட்டின் GSDP ல் துறைகளின் பங்களிப்பு**

சேவைகள் துறை 63.7%, தொழில் துறை 28.5%, வேளாண்மை துறை 7.8%.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

98. **தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விளக்குக.**

**தமிழ்நாட்டின் ஜவுளித்துறை:**

- தமிழ்நாடு இந்தியாவின் மிகப் பெரிய ஜவுளி உற்பத்தி மையம்.
- 41% நூல் உற்பத்தியுடன் இந்தியாவின் நூல் கிண்ணமாக தமிழ்நாடு விளங்குகிறது.
- 35 மில்லியன் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்குகிறது.
- GDP யில் 4% பங்களிப்பையும் உற்பத்தித் துறையில் 14% பங்களிப்பையும் தருகிறது.
- ஏற்றுமதி வருவாயில் 35% ஜவுளி துறை மூலம் கிடைக்கிறது.
- 3 பில்லியன் டாலர் ஏற்றமதியுடன் பின்னலாடை நகரமாக திருப்பூர் விளங்குகிறது.
- மொத்த, சில்லரை ஆயத்த ஆடைகளுக்கான முக்கிய ஜவுளி சந்தையாக ஈரோடு மாவட்டம் உள்ளது.
- கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் கலப்புநூல், பட்டுநூல் உற்பத்தி ஆலைகள் உள்ளன.
- தமிழ்நாட்டின் நெசவு தலைநகரம் கரூர்.

99. **தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் ஏதேனும் இரண்டு உணவுப் பயிர்களின் உற்பத்தி திறனை ஒப்பிடுக.**

**உணவுப் பயிர்களின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகத்தின் நிலை:**

- நெல், தேங்காய், உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது.
- கரும்பு, சூரியகாந்தி, சோளம் உற்பத்தியில் மூன்றாம் இடத்தில் உள்ளது.
- மக்காச்சோளம், கம்பு, நிலக்கடலை, எண்ணெய் வித்துகள், பருத்தி உற்பத்தியில் முதல் இடத்தில் உள்ளது.

100. **சுற்றுலாத்துறை மேம்பாட்டின் செயல்பாடுகளை விவரி.**

**சுற்றுலாத்துறை மேம்பாட்டின் செயல்பாடுகள்:**

- தமிழ்நாடு சிறந்த சுற்றுலா மையமாக விளங்குகிறது.
- உள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் புகலிடமாக தமிழகம் திகழ்கிறது.
- தமிழ்நாட்டில் சுற்றலா துறையின் ஆண்டு சராசரி வளர்ச்சி 16 சதவீதமாகும்.
- இந்திய மாநிலங்களில் 25 கோடி சுற்றுலா பயணிகளுடன் தமிழநாடு முதலிடத்தில் உள்ளது.
- ஆண்டுதோறும் தமிழகத்திற்கு வருகைதரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 28 கோடி. உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 11 கோடி.
- தமிழ்நாடு சுற்றுலாத்துறை தமிழ்நாட்டின் சுற்றுலாவை மேம்படுத்துகிறது.

101. **தமிழ்நாட்டில் உள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?**

**தமிழ்நாட்டின் புதுப்பிக்கதக்க ஆற்றல் வளங்கள்:**

- **புனல் மின்சாரம்:**
- தமிழ் நாட்டில் 20 க்கும் மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளன.
- குந்தா மேட்டூர், மரவகண்டி, பார்சன் வேலி முக்கிய நீர் மின்நிலையங்களாகும்.
- **சூரிய சக்தி மின்சாரம்:**
- தென் தமிழகம் சூரிய மின் சக்தி திட்டங்களை செயல்படுத்த உகந்த மண்டலமாக உள்ளது.
- கிருஷ்ணகிரி, தர்மபுரி, சிவகங்கை மாவட்டங்களில் சூரிய மின் சக்தி நிலையங்கள் உள்ளன.
- **காற்றாலை மின்சாரம்:**
- தமிழ்நாடு அதிக அளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பை பெற்றுள்ளது.
- தமிழ்நாட்டின் முக்கிய காற்றாலை மின் நிலையங்கள் கயத்தாறு, ஆரல்வாய்மொழி, முப்பந்தல்.
- **அணு மின் நிலையங்கள்:**
- தமிழ்நாட்டின் முக்கிய அணுமின் நிலையங்கள் கல்பாக்கம், கூடங்குளம்.
- அணுக்களை பிளக்கும் போது வெளிப்படும் மிகுந்த வெப்பமே அணுசக்தி ஆற்றல்.

102. **சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டின் செயல்திறனை விளக்குக.**

**சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டின் செயல்திறன்:**

- இந்திய அளவில் சுகாதார குறியீட்டின் தமிழகத்தின் நிலை மூன்று.
- தமிழகத்தில் பச்சிளங் குழந்தைகளின் இறப்பு வீதம் மிக குறைவாக 14 என உள்ளது.
- தமிழக மக்களின் சராசரி ஆயுட்காலம் 70.6 ஆண்டுகள்.
- தமிழ்நாடு மூன்றடுக்கு உடல் நல அடிப்படை கட்டமைப்பை பெற்றுள்ளது. அவை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமூக நலமையங்கள்.

103. **பருவகால வேலையின்மை என்றால் என்ன?**

**பருவ கால வேலையின்மை:**

- வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மை **உதாரணம்: பனிக்கூழ்** மற்றும் **வேளாண்மை**.
- ஆண்டின் குறிப்பிட்ட பருவத்தில் மட்டும் வேலைவாய்ப்பு கிடைக்கும். • மற்ற காலங்களில் வேலை இருக்காது.

104. **மறைமுக வேலையின்மை என்றாக் என்ன?**

**மறைமுக வேலையின்மை:**

- தேவைக்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியில் இருக்கும் நிலை. **உதாரணம்:** வேளாண்மை.
- பணியில் இருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தி குறையாது.
- தொழிலாளரின் இறுதிநிலை உற்பத்தி திறன் பூஜ்யம்.
- உபரி வேலையாட்கள் நியமிக்கப்படுதலே மறைமுக வேலையின்மைக்கு காரணம்.
- இது குறை வேலையுடைமை என்றும் அழைக்கப்படுகிறது.

105. **அதிக பாலின விகிதம் கொண்ட மாவட்டங்கள் யாவை?**

**அதிக பாலின விகிதம் கொண்ட மாவட்டங்கள்:** நீலகிரி(1041). கன்னியாகுமரி(1031). நாகப்பட்டினம்(1025).





www.Padasalai.Net

106. **கணிதமுறையின் பொருளாதார பயன்பாடுகளை விவரி**

**கணிதமுறையின் பொருளாதார பயன்பாடுகள்:**

- பொருளியல் பிரச்சனைகளை சுருக்கமான வடிவில் வழங்கிட உதவுகிறது.
- பொருளியல் கருத்துகளை விளக்கிட பயன்படுகிறது.
- பொருளியல் ஆய்வில் அதிக எண்ணிக்கையிலான மாறிகளை உபயோகிக்க உதவுகிறது.
- பொருளாதார கொள்கைகளின் செயல்திறன், விளைவுகளை அளவிட உதவுகிறது.

107. **MS Excel Sheet செயல்படுத்துவதில் உள்ள நிலைகளை விளக்குக.**

**MS Excel Sheet செயல்படுத்துவதில் உள்ள நிலைகள்:**

- CLICK START ⟶ PROGRAM ⟶ MICRO SOFT EXCEL.
- DESKTOP இல் MS EXCEL ஐகானை இருமுறை கிளிக் செய்வதன் மூலம் செயல்படுத்தலாம்.

108. **சிறு நிறுவனங்கள் வரையறு.**

**சிறுநிறுவனங்கள்:**

தொழிற்சாலை மற்றும் உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் 25 இலட்சத்திற்கு அதிகமாகவும் ஐந்து கோடிக்கு மிகாமலும் உள்ள நிறுவனங்களே சிறுநிறுவனங்கள்.

109. **ஒரு நிறுவனத்தின் வருவாய் சார்பு $R = 600q - 0.03q^2$ மற்றும் செலவு சார்பு $c = 150q + 60000$ எனில் அந்த நிறுவனத்தின் சராசரி வருவாய் சார்பு , சராசரி செலவு சார்பு, இறுதிநிலை வருவாய் சார்பு, மற்றும் இறுதிநிலை செலவு சார்பு ஆகியவற்றை காண்க.**

**தீர்வு:**

$TR = 600q - 0.03q^2$

1) சராசரி வருவாய் சார்பு $(AR) = \frac{TR}{Q}$

$$= \frac{600q - 0.03q^2}{q}$$

$$= \frac{600q}{q} - \frac{0.03q^2}{q} = 600q^{(1-1)} - (0.03)q^{(2-1)}$$

$$= 600q^0 - 0.03q^1$$

$$\therefore AR = 600 - 0.03q$$

$TC = 150q + 60000$

2) சராசரி செலவு சார்பு $(AC) = \frac{TC}{Q}$

$$= \frac{150q + 60000}{q}$$

$$= \frac{150q}{q} + \frac{60000}{q} = 150q^{(1-1)} + \frac{60000}{q}$$

$$= 150q^0 + \frac{60000}{q}$$

$$\therefore AC = 150 + \frac{60000}{q}$$

3) இறுதிநிலை வருவாய் சார்பு $(MR) = \frac{d(TR)}{dq}$

$$= 600q - 0.03q^2$$

$$= 600q^{(1-1)} - (2 \times 0.03)q^{(2-1)}$$

$$= 600q^0 - 0.06q^1$$

$$\therefore MR = 600 - 0.06q$$

4) இறுதிநிலை செலவு சார்பு $(MC) = \frac{d(TC)}{dq}$

$$= 150q + 60000$$

$$= 150q^{(1-1)} + 0$$

$$= 150q^0 + 0$$

$$\therefore MC = 150$$

110. **$16x - 4 = 68 + 7x$ என்றால் தேவை அளவு $x$ மதிப்பினை தீர்க்க.**

**தீர்வு**

16x – 4 = 68 + 7x

16x –7x = 68 + 4

9x = 72

$x = \frac{72}{9} = 8$

∴ விடை x = 8

111. **ஆசியாவின் டெட்ராய்டு என்று அழைக்கப்படும் நகரம் எது? ஏன்?.**

- ஆசியாவின் டெட்ராயிடு என்று சென்னை அழைப்படுகிறது.
- சென்னை மிகப்பெரி வாகன உதிரி பாகங்கள் தயாரிப்புக்கான இடமாக விளங்குகிறுது.



www.Padasalai.Net

113. **கிராமர் விதியை பயன்படுத்தி கொடுக்கப்பட்டுள்ள நேர்கோட்டு சமன்பாடுகளை தீர்க்க.**

சமன்பாடுகள்: 1) $x_1 - x_2 + x_3 = 2$ 2) $x_1 + x_2 - x_3 = 0$ 3) $-x_1 - x_2 - x_3 = -6$

**தீர்வு:**

**சமன்பாடுகளின் அணி வடிவம்**

$$\begin{bmatrix} 1 & -1 & 1 \\ 1 & 1 & -1 \\ -1 & -1 & -1 \end{bmatrix} \begin{bmatrix} x_1 \\ x_2 \\ x_3 \end{bmatrix} = \begin{bmatrix} 2 \\ 0 \\ 6 \end{bmatrix}$$

$$\Delta = \begin{vmatrix} 1 & -1 & 1 \\ 1 & 1 & -1 \\ -1 & -1 & -1 \end{vmatrix}$$

$$\Delta = 1[(1 \times -1) - (-1 \times -1)] - (-1)[(1 \times -1) - (-1 \times -1)] + 1[(1 \times -1) - (-1 \times 1)]$$
$$= 1[(-1) - (1)] + 1[-1 - (1)] + 1[-1 - (-1)]$$
$$= 1[-1 - 1] + 1[-1 - 1] + 1[-1 + 1]$$
$$= 1[-2] + 1[-2] + 1[0] = -2 - 2 + 0 = -4$$

$\therefore \Delta = -4$

$$\Delta x_1 = \begin{vmatrix} 2 & -1 & 1 \\ 0 & 1 & -1 \\ -6 & -1 & -1 \end{vmatrix}$$

$$\Delta x_1 = 2[(1 \times -1) - (-1 \times -1)] - (-1)[(0 \times -1) - (-6 \times -1)] + 1[(0 \times -1) - (-6 \times 1)]$$
$$= 2[(-1) - (1)] + 1[0 - (6)] + 1[0 - (-6)]$$
$$= 2[-1 - 1] + 1[-6] + 1[6] = 2[-2] - 6 + 6 = -4 - 6 + 6 = -10 + 6$$

$\therefore \Delta x_1 = -4$

$$\Delta x_2 = \begin{vmatrix} 1 & 2 & 1 \\ 1 & 0 & -1 \\ -1 & -6 & -1 \end{vmatrix}$$

$$\Delta x_2 = 1[(0 \times -1) - (-6 \times -1)] - 2[(1 \times -1) - (-1 \times -1)] + 1[(1 \times -6) - (-1 \times 0)]$$
$$= 1[0 - (6)] - 2[(-1) - (1)] + 1[-6 - 0]$$
$$= 1[-6] - 2[-1 - 1] + 1[-6]$$
$$= 1[-6] - 2[-2] + 1[-6] = -6 + 4 - 6 = -8$$

$\therefore \Delta x_2 = -8$

$$\Delta x_3 = \begin{vmatrix} 1 & -1 & 2 \\ 1 & 1 & 0 \\ -1 & -1 & -6 \end{vmatrix}$$

$$\Delta x_3 = 1[(1 \times -6) - (-1 \times 0)] - (-1)[(1 \times -6) - (-1 \times -0)] + 2[(1 \times -1) - (-1 \times 1)]$$
$$= 1[(-6) - (0)] + 1[-6 + 0] + 2[-1 + 1)]$$
$$= 1[-6] + 1[-6] + 2[0]$$
$$= -6 - 6 + 0 = -2 - 2 + 0 = -4$$

$\therefore \Delta x_3 = -4$

$$x_1 = \frac{\Delta x_1}{\Delta} = \frac{-4}{-4} = 1$$

$$x_2 = \frac{\Delta x_2}{\Delta} = \frac{-8}{-4} = 2$$

$$x_3 = \frac{\Delta x_3}{\Delta} = \frac{-12}{-4} = 3$$

∴ விடைகள்: $x_1 = 1$
$x_2 = 2$
$x_3 = 3$

www.Padasalai.Net

114. **ஒரு நிறுவனத்தின் மொத்த செலவு சார்பு $TC = 5 + x^2$ ஆகும் . $x = 10$ என்ற அளவில் மொத்த செலவினை காண்க.**

**தீர்வு:** $TC = 5 + x^2$ . $x = 10$ எனில்

$= 5 + 10^2$

$= 5 + (10 \times 10)$

$= 5 + 100$

∴ விடை $(TC) = 105$

115. $TC = 2.5q^3 - 13q^2 + 50q + 12$ **எனில் இறுதிநிலை செலவு சார்பு, சராசரி செலவு சார்பு ஆகியவற்றைக் காண்க.**

**தீர்வு:**

$TC = 2.5q^3 - 13q^2 + 50q + 12$

**இறுதிநிலை செலவு சார்பு** $(MC) = \frac{d(TC)}{dq}$

$TC = 2.5q^3 - 13q^2 + 50q + 12$

$\frac{d(TC)}{dq} = 3 \times 2.5\, q^{(3-1)}\ 2 \times 13q^{(2-1)} + 1 \times 50q^{(1-1)} + 0$

$= 7.5q^2 - 26q^1 - 50\, q^0 + 0$

∴ விடை $(MC) = 7.5q^2 - 26q - 50$

**சராசரி செலவு சார்பு** $(AC) = \frac{TC}{q}$

$TC = 2.5q^3 - 13q^2 + 50q + 12$

$= \frac{2.5q^3 - 13q^2 + 50q + 12}{q}$

$= 2.5q^{(3-1)} - 13q^{(2-1)} + 50q^{(1-1)} + \frac{12}{q}$

$= 2.5q^2 - 13q^1 + 50q^0 + \frac{12}{q}$

∴ விடை ∴ $AC = 2.5q^2 - 13q + 50 + \frac{12}{q}$

116. **ஊரக தொழிற்சாலைகள் என்றால் என்ன? உ_தாரணம் தருக.**

**ஊரக தொழிற்சாலைகள்**:

- ஊரகப் பகுதிகளில் ஊரக மக்களால் நடத்தப்படும் தொழிற்சாலைகளே ஊரக தொழிற்சாலைகள்.
- ஊரக தொழிற்சாலைகள் உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்களையும், திறன்களையும் பயன்படுத்துகின்றன.
- ஊரக தொழிற்சாலைகளை தொடங்கி நடத்த சிறிய அளவு மூலதனமே தேவை.

**ஊரக தொழிற்சாலைகளின் வகைகள்**:

- குடிசை தொழில்கள். • காதி – கிராம தொழில்கள். • குறு – சிறு தொழில்கள்.
- வேளாண்மை சார்ந்த தொழில்கள்.

117. **ஊரக வேலையின்மைக்கான காரணங்கள் யாவை?**

- வேளாண்மையில் குறிப்பிட்ட பருவத்தில் மட்டமே வேலைவாய்ப்பு கிடைக்கிறது.
- வேளாண்மை செயல்பாடுகளில் இயந்திரங்களை பயன்படுத்துவதால் வேலைவாய்ப்பு குறைகிறது.
- வேளாண்சாரா துறைகளில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதில்லை.
- நிதி கட்டமைப்பு வசதிகள் கிராமங்களில் குறைவாக உள்ளதால் கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு போன்ற துணைத்தொழில்களை தொடங்க முடிவதில்லை.
- வேளாண்மையில் உள்ள உபரி தொழிலாளர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க முடிவதில்லை.
- நகர்புறங்களில் விரிவடைந்து வரும் தனியார்துறை மூலதனச்செறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றன.
- இந்திய பல்கலைக் கழகங்களில் இருந்து உருவாக்கப்படும் பட்டதாரிகள் எண்ணிக்கை தரமின்றி அதிகரித்து வருகிறது.
- அரசு கிராம மக்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் சுய வேலைவாய்ப்புக்கான பயிற்சி அளிப்பதில் உள்ள மந்த தன்மை.

118. **முத்ரா(MUDRA) வங்கி பற்றி குறிப்பு வரைக.**

- முத்ரா வங்கியின் முதல் கிளையை இந்திய பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்கள் புது டெல்லியில் 2015 ஏப்ரல் 8 ஆம் நாள் தொடங்கி வைத்தார். **MUDRA – Micro Units Development and Refirmance Agency.**

**முத்ரா வங்கியின் சிறப்பியல்புகள்**: • முத்ரா வங்கி என்பது ஒரு தனிப்பட்ட வங்கி அல்ல அது மத்திய அரசின் ஒரு திட்டம்.

- முத்ரா வங்கி அனைத்து வங்கிகளின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- முத்ரா வங்கி சிட்பி வங்கியின் துணை அமைப்பாக செயல்படும். பின்னர் தன்னாட்சி பெறும்.
- முதரா வங்கியின் தொடக்க மூலதனம் 20,000 கோடி ரூபாய்.
- முத்ரா வங்கி இந்திய அரசின் பொதுத்துறை நிறுவனம் அகும்.

**பணிகள்**:• சிறு, குறு நிதி நிறுவனங்களுக்கும் வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கும் கடன் வழங்குதல்.

- குறுநிதி நிறுவனங்களை ஒழுங்கப்படுத்துதல்.
- சிறு, குறு தொழில்களுக்கு ரூ.50 ஆயிரம் முதல் 10 இலட்சம் வரை வங்கிக்கடன் வழங்குதல்.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

## +1 பொருளியல்

### 5– MARK *மற்றும் பிற வினா விடைகள்*

1. **பொருளியலின் தன்மைகள் மற்றும் எல்லைகளை விவாதி.**

**பொருளியலின் தன்மைகள்**:

• **செல்வ இலக்கணம்**: **(ஆடம் ஸ்மித்)**

· பொருளியல் செல்வத்தை பற்றிய அறிவியல்.

· செல்வத்தை அடைதல், பயன்படுத்துதல், அதிகரித்தல் மற்றும் பகிர்வு செய்தல் சார்ந்த செயல்முறை அறிவியல்.

• **பொருள்சார் நல இலக்கணம்**: **(ஆல்பிரட் மார்ஷல்)**

· பொருளியல் ஒரு பக்கம் செல்வத்தை பற்றியும், அதனை விட முக்கியமாக மற்றொரு பக்கம் மனிதனை பற்றியும் ஆய்வு செய்யும் இயல்.

· சாதாரன மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி பொருளியல் ஆராய்கிறது.

· பொருள்சார் நலனை அடைவதன் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை ஆய்வு செய்யும் இயல்.

• **பற்றாக்குறை இலக்கணம்**:**(இலயனல் ராபின்ஸ்)**

· விருப்பங்களோடும் கிடைப்பருமை உள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளை பற்றி பயிலக்கூடிய அறிவியலே பொருளியல்.

• **வளர்ச்சி இலக்கணம்**:**(பால்.ஏ.சாமுவேல்சன்)**

· மனிதனும் சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பணத்தை பயன்படுத்தாமலோ மாற்று வழிகளில் பயன்படக் கூடிய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து அவற்றை தற்காலத்திலும் எதிர்காலத்திலும் மக்களிடையேயும் சமுதாய குழுக்களிடையேயும் நுகர்வுக்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதை தெரிவு செய்யும் இயலாகும்.

**பொருளியலின் எல்லைகள்**:

• **பொருளியல் இயல்புரை மற்றும் நெறியுரை அறிவியல்**:

· பொருளியல், பிரச்சனைகளை உண்மை, அதன் காரணங்களின் மூலம் ஆராய்கிறது.

· நீதிநெறி, அரசியல், சமூகம், பண்பாடு அடிப்படையில் பொருளியல், பிரச்சனைகளை ஆராய்கிறது.

· எனவே பொருளியல் இயல்புரை மற்றும் நெறியுரை அறிவியலாகும்.

• **பொருளியல் கலை மற்றும் அறிவியல்**:

· பொருளியல் பிரச்சனைகளுக்கான காரண – விளைவுகளுக்கு இடையே உள்ள உறவுகளை ஆராய்வதால் கலை மற்றும் அறிவியலாக விளங்குகிறது.

• **பொருளியல் சமூக அறிவியல்**:

· பொருளாதாரத்தில் உள்ள அமைப்புகள், தனிமனிதர்கள் மற்றும் குழுக்களின் நடத்தைகளில் பொருளியல் கவனம் செலுத்துவதால் சமூக அறிவியலாக விளங்குகிறது.

• பொருளியல் **விருப்பங்கள் – முயற்சிகள் – உற்பத்தி – பரிமாற்றம் – பகிர்வு – நுகர்வு** ஆகியவற்றை மையமாக கொண்டது.

• பொருளியல் பற்றைக்குறை மற்றும் விருப்பங்களை தெரிவு செய்யும் அறிவியலாக விளங்குகிறது.

• பகுத்தறிவுள்ள அல்லது சாதாரண மனிதனின் நடவடிக்கைகளே பொருளியலின் பாடப்பொருள்.

• மனிதனின் செல்வம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே பொருளியலின் பாடப்பொருளாகும்.

*2.* **நுன்பொருளியலின் முக்கியத்துவங்கள் யாவை?**

**நுன்பொருளியலின் முக்கியத்துவங்கள்**:

· பொருளாதாரத்தின் செயல்பாட்டை அறிந்து கொள்ள உதவுகிறது.

· பொருளாதார கொள்கைகளுக்கான கருவிகளை தருகிறது.

· பொருளாதார நலனின் நிலையை ஆராய்கிறது.

· வளங்களை திறம்பட பயன்படுத்த உதவுகிறது.

· பன்னாட்டு வாணிபத்தில் பயன்படுகிறது.

· வளங்களை உத்தம அளவில் பங்கிட உதவுகிறது.

· விலைநிர்ணயம் செய்ய உதவுகிறது.

· பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு உதவுகிறது.

*3.* **ஏங்கலின் விதியினை வரையறு.**

**ஏங்கலின் விதி**:

உணவுப் பண்டங்களுக்காக செலவிடப்படும் செலவின் சதவீதம் மொத்த செலவு அதிகரிக்கும் போது குறையும்.

*4.* **சமநிலை என்றால் என்ன? வகைகள் யாவை?**

**சமநிலை**: சமநிலை என்பது மாற்றமில்லா நிலையை அடைவது – ஸ்டிக்லர்.

**சமநிலையின் வகைகள்**: · தனிச் சமநிலை, · பொதுச் சமநிலை

5. **பொதுப் பண்டங்கள் என்றால் என்ன? உதாரணம் தருக.**

**பொதுப் பண்டங்கள்**: பொருளுக்கான விலையை கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் அனைவரின் நுகர்வுக்காக கிடைக்கக் கூடிய பண்டங்களே பொதுப் பண்டங்கள்.

பொதுப் பண்டங்களை நுகர்வதில் போட்டி இருக்காது. யாரும் யாரையும் விலக்க முடியாது.

**உதாரணம்**: தேசிய பாதுகாப்பு மற்றும் சட்டங்கள்.

www.Padasalai.Net

6. **பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுப்படுத்துக.**

• **செல்வ இலக்கணம்**:(ஆடம் ஸ்மித்)

- பொருளியல் செல்வத்தை பற்றிய அறிவியல்.
- செல்வத்தை அடைதல், பயன்படுத்துதல், அதிகரித்தல் மற்றும் பகிர்வு செய்தல் சார்ந்த செயல்முறை அறிவியல்.
- ஒவ்வொரு மனிதனும் சுய நன்மைக்காகவே உழைக்கிறான்.
- புலனாகா உந்து சக்தி அவனை வழிநடத்திச் செல்லும்.
- பொருள்சார் செல்வம் என்ற ஒன்றுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.
- செல்வமே இறுதியானது என கருதப்பட்டது.

• **பொருள்சார் நல இலக்கணம்**: (ஆல்பிரட் மார்ஷல்)

- பொருளியல் ஒரு பக்கம் செல்வத்தை பற்றியும், அதனை விட முக்கியமாக மற்றொரு பக்கம் மனிதனை பற்றியும் ஆய்வு செய்யும் இயல்.
- சாதாரன மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி பொருளியல் ஆராய்கிறது.
- பொருள்சார் நலனை அடைவதன் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை ஆய்வு செய்யும் இயல்.
- மனிதன் முதலில் நலத்தையே மேம்படுத்த முயல்கிறான் செல்வத்தை அல்ல.
- பொருளியல் ஒரு சமூக அறிவியல்.
- பொருள்சார் நலனுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

• **பற்றாக்குறை இலக்கணம்**: (இலயனல் ராபின்ஸ்)

- விருப்பங்களோடும் கிடைப்பருமை உள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளை பற்றி பயிலக்கூடிய அறிவியலே பொருளியல்.
- மனித விருப்பங்கள் எண்ணற்றவை. • வளங்கள் பற்றாக்குறையானவை.
- வளங்களை மாற்று வழிகளில் பயன்படுத்தலாம்.
- விருப்பங்கள் சம முக்கியத்துவம் கொண்டவை அல்ல.
- தேவைகளை தேர்வு செய்யும் அறிவியலே பொருளியல்.
- பற்றாக்குறையும் தெரிவுசெய்தலும் பொருளியலின் மைய கருத்தாகும்.
- பொருளியல் விலை தீர்மானம் பற்றிய அறிவியல்.
- மருத்துவர், ஆசிரியர் போன்ற பொருள் சாரா சேவைகளும் பொருளியல் நடவடிக்கைகளே.

• **வளர்ச்சி இலக்கணம்**: (பால்.ஏ.சாமுவேல்சன்)

- மனிதனும் சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பணத்தை பயன்படுத்தாமலோ மாற்று வழிகளில் பயன்படக் கூடிய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து அவற்றை தற்காலத்திலும் எதிர்காலத்திலும் மக்களிடையேயும் சமுதாய குழுக்களிடையேயும் நுகர்வுக்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதை தெரிவு செய்யும் இயலாகும்.
- மனித விருப்பங்கள் எண்ணற்றவை. • வளங்கள் பற்றாக்குறையானவை.
- காலம் சேர்க்கப்படுவதால் இயக்கத் தன்மையுடன் உள்ளது.
- பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்கியதாக உள்ளது.
- பொருளியல் ஒரு சமூக அறிவிலாகும்.
- பண்டமாற்று பொருளாதாரத்திற்கும் பொருந்தக்கூடியது.

7. **பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறையின் படிநிலைகளை விளக்குக.**

• **பகுத்தாய்வு முறை**:

பொதுக் கருத்தில் இருந்து தனிக் கருத்தை பெறுவதே பகுத்தாய்வு முறை.

**பகுத்தாய்வு முறையின் படிநிலைகள்**:

• பிரச்சனைகளை துல்லியமாக அறிதல்.

• தொழில்நுட்ப கருத்துகளை வரையறுத்தல், அனுமானங்களை உருவாக்குதல்.

• கருதுகோள்களை அமைத்தல்.

• உற்றுநோக்குதல், விவரங்களை சேகரித்தல், சரிபார்த்தல்.

• முடிவுகளை உறுதிப்படுத்துதல். • உதாரணம்: தேவைவிதி

• **தொகுத்தாய்வு முறை**: தனிக் கருத்தில் இருந்து பொதுக் கருத்தை பெறுவதே தொகுத்தாய்வு முறை.

**தொகுத்தாய்வு முறையின் படிநிலைகள்**:

• புள்ளிவிவரங்களை சேகரித்தல், ஒழுங்கப்படுத்துதல் மூலம் பொது முடிவுக்கு வருதல்.

• விவரங்களை உற்றுநோக்குவதன் மூலம் பொது முடிவுக்கு வருதல்.

• உத்தேச அனுமானங்களின் மூலம் விவரங்களை பொதுமைப்படுத்தி கருதுகோள்களை உருவாக்குதல்.

• கருதுகோள்களை சரிபார்த்தல்.

• பொதுமுடிவுகளை பெறுதல்.

• உதாரணம்: ஏங்கலின் நுகரவு செலவு விதி.



www.Padasalai.Net

8. **பொருளியலின் பல்வேறு பிரிவுகளை விளக்குக.**
**பொருளியலின் பிரிவுகள்**

• **நுகர்வு**:
· பொருளியல் நடவடிக்கைகளின் துவக்கப் புள்ளியாக நுகர்வு விளங்குகிறது.
· பண்டங்கள், பணிகளை பயன்படுத்துவதே நுகர்வு. பயன்பாட்டின் அழிவு.
· மனித விருப்பங்கள், தேவைவிதி மற்றும் நுகர்வு விதிகளை விளக்கும் பகுதி.

• **உற்பத்தி**:
· உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றும் செயல்பாடே உற்பத்தி. பயன்பாட்டின் ஆக்கம்.
· உற்பத்திக் காரணிகளின் இயல்புகள், உற்பத்தி சார்புகள், அளிப்பு விதி பற்றி கற்பிக்கிறது.


• **பரிமாற்றம்**:
· பண்டங்களுக்கு பண்டங்களை அல்லது பணத்திற்கு மாற்றப்படும் செயல்பாடே பரிமாற்றம்.
· அங்காடி அமைப்புகள், வணிகம், விலைத் தீர்மானித்தலோடு தொடர்புடைய பகுதியாகும்.

• **பகிர்வு**:
· நாட்டு வருமானத்தை நான்கு உற்பத்திக் காரணிகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படுவதே பகிர்வு.
· வாரம், கூலி, வட்டி, இலாபம் பற்றியும் அவற்றின் கோட்பாடுகளையும் விளக்கும் பகுதி.

• **பொதுநிதி**:
· பொதுநிதி அரசின் பொருளாதார பணிகளை ஆராய்கிறது.
· பொதுவருவாய், பொதுசெலவு, பொதுக்கடன், நிதிநிர்வாகம், கூட்டரசு நிதி பற்றிய பகுதி.

9. **உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சனைகளை விவரி.**
**உற்பத்தி வாய்ப்பு வளைகோடு**:
வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் தொழில்நுட்ப நிலையில் சமுதாயத்தால் தேர்வு செய்யப்படும் இரு பண்டங்களின் பல வரிசைகளை காட்டும் வளைகோடு.
**அடிப்படை பொருளியல் பிரச்சனைகள்**:
எந்த பொருளை உற்பத்தி செய்வது? எவ்வளவு உற்பத்தி செய்வது? எப்படி உற்பத்தி செய்வது?
யாருக்காக உற்பத்தி செய்வது?
**எடுகோள்கள்**:
· இரண்டு பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்ய முடியும்.
· தொழில்நுட்பம் நிலையானது. · காலம் மாறாது.
· உற்பத்தி வளங்கள் இடம் பெயரும் · முழுவேலைவாய்ப்பு நிலவும்.

| உற்பத்தி வாய்ப்புகள் | உணவு உற்பத்தி | துணி உற்பத்தி |
|---|---|---|
| A | 0 | 15 |
| B | 3 | 14 |
| C | 5 | 12 |
| D | 7 | 5 |
| E | 8 | 0 |




**வரைபட விளக்கம்**:
· சமுதாயத்தின் முடிவு ஒவ்வோரு மாற்றுப் பொருளின் செலவை ஒப்புநோக்கி அமையும்.
· ஒரு மாற்றுப் பண்டத்தின் தெரிவு மற்றொன்றை இழப்பதால் ஏற்படும் வாய்ப்பு செலவுக்கு உட்பட்டதாகும்.
· உட்பகுதியில் உள்ள $P_0$ புள்ளி பொருளாதாரத்தின் திறனற்ற நிலையை காட்டும்.
· வெளிப்புறம் உள்ள P புள்ளி பொருளாதாரத்தில் வளங்களின் பற்றாக்குறையை உணர்த்தும்.
• $P_3$ என்ற புளியில் இரண்டு பொருள்களில் ஒன்றை நிலைபெறச் செய்து ஒரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்கலாம். அல்லது ஒரே சமயத்தில் இரண்டின் உற்பத்தியையும் அதிகரிக்கலாம்.
**உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் பயன்கள்**:
· உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டில் பல வாய்ப்புகள் இருப்பதால் தெரிவு சார்ந்த பிரச்சனைகள் ஏற்படாது.
· பண்டங்களின் தெரிவு மற்றும் வளங்களை பங்கீடு செய்வதில் உதவுகிறது.
· வளங்களின் பற்றாக்குறையினால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வை தருகிறது.
· மைய பிரச்சனைகளுக்கான தீர்வை வழங்குகிறது.
· வரையறுக்கப்பட்ட வளங்களின் வழியே சமுதாயத்திற்கு உகந்த, எந்த பொருளை ? எவ்வளவு ? உற்பத்தி செய்வது என்பதை தீர்மானிக்க உதவுகிறது.
· எதை? எவ்வளவு? உற்பத்தி செய்வது என்பதற்கான தீர்வு உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் எந்த பகுதியை தேர்வுசெய்வது என்பதில் உள்ளது.

10. **நுகர்வோர் பண்டங்கள் – மூலதனப் பண்டங்கள் வேறுபடுத்துக.**

**நுகர்வோர் பண்டங்கள்**:

- நேரடியாக மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்களே நுகர்வுப் பண்டங்கள்.
- **உதாரணம்**: தொலைக்காட்சி, ஊர்திகள், மின்விசிறி.

**மூலதனப் பண்டங்கள்**:

- நுகர்வுப் பண்டங்களை தாயரிக்க உதவும் பண்டங்களே மூலதனப் பண்டங்கள்.
- மூலதனப் பண்டங்கள் நேரடியாக மனித விருப்பத்தை நிறைவு செய்யாது.
- வியாபார நோக்கில் பொருட்களை உற்பத்தி செய்யும் பண்டங்களே மூலதனப் பண்டங்கள்.
- **உதாரணம்**: தொழிற்சாலை இயந்திரங்கள்.

11. **தேவைவிதி மற்றும் அதன் விதிவிலக்குகளை விவரி.**

**தேவை விதி**:

- விலை குறைய தேவை அதிகரிக்கும்.

விலை அதிகரிக்க தேவை குறையும்.

*மற்றவை மாறாமல் இருக்கம் போது.*

| தேவை அட்டவணை | |
|---|---|
| விலை | தேவை |
| 5 | 1 |
| 3 | 3 |
| 1 | 5 |

**இலக்கணம்**:

விலையும் தேவையும் எதிகணிய தொடர்பை கொண்டுள்ளன – **பெர்கூசன்**

**எடுகோள்கள்**:


பணத்தின் இறுதிநிலை பயன்பாடு மாறாது. • பதிலீட்டுப் பண்டங்கள் இல்லை.

- பண்டத்தின் தரம், சுவை, நிறம் மாறாது. • பண்டத்தின் தேவை தொடர்ச்சியானது.
- நுகர்வோரின் வருமானம், சுவை, பழக்கவழக்கங்கள் மாறாது.

**வரைபட விளக்கம்**:

- தேவைக்கோடு (DD) இடமிருந்து வலமாக கீழ்நோக்கி சரிந்து செல்கிறது.
- விலை குறைந்தால் தேவை விரிவடையும்,

  விலை அதிகரித்தால் தேவை சுருங்கும் என்பதை காட்டுகிறது.




**தேவைவிதியின் விதிவிலக்குகள்**:

- **வெப்ளன் விளைவு**:
- சில பண்டங்களின் விலை உயரும் போது சமுதாய அந்தஸ்து,
  பகட்டு மதிப்புக்காக அதிக அளவில் வாங்குவர். **உதாரணம்**: வைரைஆபரணங்கள்

- **கிப்பன் முரண்பாடு**:
- ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் தாழ்ந்தரக பண்டங்களே கிஃபன் பண்டங்கள்.
- ஏழைகள் தாழ்ந்தரக பண்டங்களின் விலை குறையும் போது அவற்றை குறைவாக வாங்குவர்.
- விலை கூடும் போது அதிகம் வாங்குவர். **உதாரணம் – கம்பு, கேழ்வரகு, சோளம்.**

- **அறியாமை**: அதிக விலையுள்ள பண்டங்களே தரமானவை என்ற எண்ணத்தில்
  விலை அதிகமாக உள்ள பண்டத்தை அதிக அளவில் வாங்குவர்.

- **ஊக விளைவு**: ஒரு பண்டத்தின் விலை உயரும் போது மேலும்
  விலை உயரும் என்ற என்ற எதிர்பார்பால் அதிகமாக வாங்கப்படும். **உதாரணம்**: தங்கம்.

- **பற்றாக்குறை**: போர், நோய்தொற்று போன்ற சூழ்நிலைகளில் பண்டங்களுக்கு
  பற்றாக்குறை ஏற்படும் என்ற பயத்தில் விலை உயர்ந்தாலும் அதிக அளவில் வாங்குவர்.

12. **குறுக்குத் தேவை நெகிழ்ச்சி என்றால் என்ன?**

**குறுக்குத் தேவை நெகிழ்ச்சி**: ஒரு பண்டத்தின் விலை மாற்றத்தால் மற்றொரு பண்டத்தின் தேவையில் ஏற்படும் பதில் மாற்ற விகிதமே குறுக்கு தேவை நெகிழ்ச்சி.

**குறுக்குத் தேவை நெகிழ்ச்சி** $(E_C) = \frac{X \text{ பண்டத்தின் தேவை மாற்ற விழுக்காடு}}{Y \text{ பண்டத்தின் விலை மாற்ற விழுக்காடு}}$

- **XY** முழு பதிலீட்டுப் பண்டங்கள் எனில் $E_C = \alpha$
- **XY** உடனுறு பண்டங்கள் எனில் $E_C$ = எதிர்மறை .
- **XY** உறவற்றவை எனில் $E_C = 0$

13. **விளம்பரத் தேவை நெகிழ்ச்சி என்றால் என்ன?**

- **விளம்பரத் தேவை நெகிழ்ச்சி**: ஒரு பண்டத்தின் விளம்பர செலவில் ஏற்படும் மாற்றத்தால் அதன் தேவையில் ஏற்படும் பதில் மாற்ற விகிதமே விளம்பரத் தேவை நெகிழ்ச்சி.

**விளம்பரத் தேவை நெகிழ்ச்சி** $(E_A) = \frac{\text{பண்டத்தின் தேவை மாற்ற விழுக்காடு}}{\text{விளம்பரச் செலவின் மாற்ற விழுக்காடு}}$.

14. **சமநோக்கு வளைகோட்டின் தொகுதி என்றால் என்ன?**

**சமநோக்கு வளாகோட்டின் தொகுதி**: இரண்டு பண்டங்களுக்கான வெவ்வேறு நிலையான பயன்பாட்டை விளக்கும் பல சமநோக்கு வளைகோடுகளை கொண்ட தொகுப்பு.

15. **நுகர்வு என்பதன் பொருள் யாது?**

**நுகர்வு**: மக்கள் தங்களது விருப்பங்களை நிறைவு செய்ய பண்டங்கள், பணிகளை பயன்படுத்துவதே நுகர்வு.

www.Padasalai.Net

16. **குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விளக்குக.**


**குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி**:

**இலக்கணம்**: ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற போது ஒவ்வோரு கூடுதல் அலகில் இருந்து கிடைக்கும் பயன்பாடு குறையும் – மார்ஷல்.

**எடுகோள்கள்**:
- பணத்தின் இறுதிநிலை பயன்பாடு மாறாது.
- பதிலீட்டுப் பண்டங்கள் இல்லை.
- பண்டத்தின் தரம், சுவை, நிறம் மாறாது.
- பண்டத்தின் தேவை தொடர்ச்சியானது.
- நுகர்வோரின் வருமானம், சுவை, பழக்கவழக்கங்கள் மாறாது.

**விளக்கம்**: • அதிக பசியோடு இருக்கும் நபர் 7 ஆப்பிள் பழங்களை தொடர்ச்சியாக நுகர்கிறார்.
- முதல் ஆப்பில் பழத்தை நுகர அவர் 20 அலகுகள் அதிக பயன்பாட்டை பெறுகிறார்.
- இரண்டாவது ஆப்பிள் பழத்தை நுகர பசியின் தீவிரம் குறைவதால் முன்பை விட குறைவாக 15 அலகுகள் பயன்பாட்டை பெறுகிறார்.
- மூன்றாவது ஆப்பிள் பழத்தை நுகர அவருக்கு கிடைக்கும் பயன்பாடு 10 அலகுகள்.
- தொடர்ந்து அவர் ஆப்பிள் பழங்களை நுகர ஐந்தாவது பழத்தில் அவருக்கு கிடைக்கும் பயன்பாடு பூஜ்யம்.
- இதற்கு மேலும் அவர் பழங்களை நுகர்ந்தால் பயன்பாட்டின்மை ஏற்படும்.
- இறுதிநிலை பயன்பாடு எதிர் மறையாக மாறும் மொத்த பயன்பாடு குறைய தொடங்கும்.

| நுகர்வு அலகுகள் (ஆப்பிள்) | மொத்த பயன்பாடு (TU) | இறுதிநிலை பயன்பாடு (MU) |
|---|---|---|
| 1 | 20 | 20 |
| 2 | 35 | 15 |
| 3 | 45 | 10 |
| 4 | 50 | 5 |
| 5 | 50 | 0 |
| 6 | 45 | –5 |
| 7 | 35 | –10 |




**வரைபட விளக்கம்**:
- இறுதிநிலை பயன்பாடு குறையும் போதும் பூஜியத்தை விட அதிகமாக இருக்கும் வரை மொத்த பயன்பாடு அதிகரிக்கும்.
- இறுதிநிலை பயன்பாடு பூஜியம் எனில் மொத்த பயன்பாடு உச்ச நிலையில் இருக்கும்.
- இறுதிநிலை பயன்பாடு எதிர்கணியம் எனில் மொத்த பயன்பாடு குறையும்.

**திறனாய்வு**:
- பயன்பாட்டை அளவிட முடியாது.
- நீண்டகாலம் பயன்படும் பண்டங்களுக்கு பொருந்தாது.
- பகுக்கமுடியாத பண்டங்களுக்கு பொருந்தாது.
- எடுகோள்கள் உண்மைக்கு புறம்பானவை.

17. **வருமானத் தேவை நெகிழ்ச்சி என்றால் என்ன?**
- **வருமானத் தேவை நெகிழ்ச்சி**: நுகர்வோரின் வருமான மாற்றத்தால் தேவையில் ஏற்படும் பதில் மாற்ற விகிதமே வருமானத் தேவை நெகிழ்ச்சி.
- **வருமானத் தேவே நெகிழ்ச்சி** $(E_Y) = \frac{\text{பண்டத்தின் தேவை மாற்ற விழுக்காடு}}{\text{நுகர்வோரின் வருமான மாற்ற விழுக்காடு}}$
- பெரும்பாலான பண்டங்களுக்கு வருமானத் தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்கு அதிகம்.
- வருமானமும் தேவையும் நேர்விகிதத்தில் மாறும்.

18. **தேவை வளைகோடு இடம் பெயர்வது குறிப்பு வரைக.**

**தேவை வளைகோடு இடம்பெயர்தல்**: (தேவை உயர்வு – குறைவு)
- விலை தவிர்த்த தேவையை தீர்மானிக்கும் பிற காரணிகளில் ஏற்படும் மாற்றம் தேவைக் கோட்டை இடம்பெயர செய்யும்.
- விலை மாற்றம் இல்லாத போது நுகர்வோரின் வருமானம் அதிரித்தால் தேவை உயரும். தேவைக் கோடு வலது பக்கம் இடம் பெயரும்.
- விலை மாற்றம் இல்லாத போது நுகர்வோரின் வருமானம் குறைந்தால் தேவை குறையும் தேவைக்கோடு இடது பக்கம் இடம் பெயரும்.

19. **தேவையை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**

**தேவையை தீர்மானிக்கும் காரணிகள்**:
- பண்டத்தின் விலை.
- நுகர்வோரின் வருமானம்
- மக்கள் தொகை
- காலநிலை மாற்றம்.
- நுகர்வோரின் சுவை, பழக்கவழக்கங்கள்
- வரிகள் மற்றும் மானியம்.
- எதிர்பார்ப்புகளில் மாற்றம்.
- சேமிப்பில் மாற்றம்.
- வணிக நிலை.
- விளம்பரம்.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

20. **<u>சம இறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக.</u>**

**<u>சம இறுதிநிலை பயன்பாட்டு விதி</u>**: ஒரு மனிதன் பல வகையிலும் பயன்படுத்தக் கூடிய ஒரு பொருளை பெற்றிருப்பின் அதனை அதன் பலவகை பயன்களிடையே இறுதிநிலை பயன்பாடு ஒரே அளவில் சமமாக இருக்கும் படி பகிர்ந்தளிப்பார்.

**<u>எடுகோள்கள்</u>**:


- பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு மாறாது.
- பதிலீட்டுப் பண்டங்கள் இல்லை.
- பண்டத்தின் தரம், சுவை, நிறம் மாறாது.
- பண்டத்தின் தேவை தொடர்ச்சியானது.
- நுகர்வோரின் வருமானம், சுவை, பழக்கவழக்கங்கள் மாறாது.

**<u>விளக்கம்</u>**:

நுகர்வோர் ₹. 14 ஐ வருமானமாக கொண்டுள்ளார். அவர் முழு வருமானத்தையும் ஆப்பிள், ஆரஞ்சு பழங்களை வாங்க செலவிடுகிறார். ஆப்பிளின் விலை ₹.2 . ஆரஞ்சின் விலை ₹.1

நுகர்வோர் 5 அலகு ஆப்பிள்களையும், 4 அலகு ஆரஞ்சுகளையும் வாங்கி 100 + 50 = 150 அலகுகள் உச்ச பயன்பாட்டை பெறுவார்.

| பண்டங்களின் எண்ணிக்கை | ஆப்பிள் | | | ஆரஞ்சு | | |
|---|---|---|---|---|---|---|
| | TU | MU | $\frac{MU_A}{P_A}$ | TU | MU | $\frac{MU_O}{P_O}$ |
| 1 | 30 | 30 | 15 | 20 | 20 | 20 |
| 2 | 55 | 25 | 12.5 | 35 | 15 | 15 |
| 3 | 75 | 20 | 10 | 45 | 10 | 10 |
| 4 | 90 | 15 | 7.5 | *50* | *5* | *5* |
| 5 | *100* | *10* | *5* | 50 | 0 | 0 |
| 6 | 105 | 5 | 2.5 | 45 | –5 | –5 |




**<u>வரைபட விளக்கம்</u>**:

நுகர்வோர் ஆப்பிளுக்காக ₹. 10 ம், ஆரஞ்சுக்காக ₹. 4 ம் செலவிட்டு இரண்டின் இறுதிநிலை பயன்பாடும் சமமாகும் நிலையில் உச்ச பயன்பாட்டை பெறுவார். வரைபடத்தில் *AA1 = BB1* என்ற நிலையில் நுகர்வோர் உச்ச பயன்பாட்டபெறுவார்.

$$\frac{MU_A}{P_A} = \frac{MU_O}{P_O} \text{ அதாவது } \frac{10}{2} = \frac{5}{1}$$

**<u>திறனாய்வு</u>**:

- பயன்பாட்டை அளவிட முடியாது.
- நீண்டகாலம் பயன்படும் பண்டங்களுக்கு இவ்விதி பொருந்தாது.
- பகுக்கமுடியாத பண்டங்களுக்கு பொருந்தாது.
- எடுகோள்கள் உண்மைக்கு புறம்பானவை.

21. **<u>தேவையின் பண்புகள் யாவை?</u>**

**<u>தேவையின் பண்புகள்</u>**:

- **<u>விலை</u>**: தேவை எப்போதும் விலையை சார்ந்து அமையும்.
- **<u>காலம்</u>**: தேவை குறிப்பிட்ட காத்திற்குரியதாக இருக்கும்.
- **<u>சந்தை</u>**: தேவை விற்பவர், வாங்குபவர்கள் இணையக்கூடிய சந்தையை சார்ந்தது.
- **<u>அளவு</u>**: தேவை என்பது வாங்கும் திறனோடு பொருளை விரும்பி வாங்க முடிவு செய்த அளவு.

22. **<u>மூலதனம் என்றால் என்ன? மூலதனத்தின் பண்புகள் யாவை?</u>**

**<u>மூலதனம்</u>**: இயற்கையின் கொடை தவிர்த்த வருமானம் தரக்கூடிய பிறவகை செல்வங்களே மூலதனம் – மார்ஷல்.
மூலதனம் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திக் காரணி – போம்போவர்க்.

**<u>மூலதனத்தின் பண்புகள்</u>**:

- மூலதனம் மனித முயற்சியால் உருவாக்கப்பட்டது.
- மூலதனம் இடம் பெயரக்கூடியது.
- மூலதனம் செயலற்ற உற்பத்திக் காரணி.
- மூலதனத்தின் அளிப்பு நெகிழும் தன்மையுடையது.
- மூலதனத்திறக்கான தேவை தருவிக்கப்பட்டதாகும்.
- மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும்.
- மூலதனம் வருமானம் தரக்கூடியது.
- மூலதனம் தேய்வுறக்கூடியது.

23. **<u>நிதி மூலதனம் பற்றி குறிப்பு வரைக.</u>**

**<u>நிதி மூலதனம்</u>**:
- பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்ய தேவையான செல்வத்தை பணத்தால் மதிப்பிடுவதே நிதி மூலதனம்.
- நிதி மூலதனம் பொதுவாக கடன்கள், பங்கு விற்பனை மூலம் உருவாக்கப்படுகிறது.
- இதன் முதன்மை நோக்கம் இலாப நோக்கத்திற்காக செல்வத்தை குவித்து வைப்பது.

24. **<u>குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் விதிவிலக்குகள் யாவை?</u>**

**<u>குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் விதிவிலக்குகள்</u>**:

- பொழுது போக்குகள்.
- இசை வல்லுநர்கள்.
- குடிப் பழக்கம் உள்ளவர்கள்.
- வாசித்தல்.
- கருமிகள்.

25. **<u>சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் வேறு பெயர்கள் யாவை?</u>**

**<u>சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதிபயின் வேறு பெயர்கள்</u>**:

- பதிலீட்டு விதி.
- நுகர்வோரின் சமநிலை விதி.

www.Padasalai.Net



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

• காசனின் இரண்டாம் விதி. • உட்ச பட்ச திருப்தி விதி.

26. **தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகளை விளக்குக.**

**தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள்**:

• **விழுக்காட்டு முறை**:

தேவை மாற்ற விழுக்காட்டை விலைமாற்ற விழுக்காட்டால் வகுக்க கிடைக்கும் ஈவே விலைத் தேவை நெகிழ்ச்சி.

$$\text{விலைத் தேவை நெகிழ்ச்சி} = \frac{\text{தேவை மாற்ற விழுக்காடு}}{\text{விலை மாற்ற விழுக்காடு}} = e_p = \frac{\%\Delta q}{\%\Delta p}$$


• **புள்ளிமுறை**:

நேர் தேவைக்கோட்டின் ஒரு குறிப்பிட்ட புள்ளியின் கீழ் பகுதியை மேல் பகுதியால் வகுக்க கிடைக்கும் ஈவே விலைத் தேவை நெகிழ்ச்சி.

$$\text{புள்ளி தேவை நெகிழ்ச்சி} = \frac{\text{தேவைக் கோட்டின் கீழ் பகுதி}}{\text{தேவைக் கோட்டின் மேல்பகுதி}}$$

AE என்ற தேவைக் கோட்டின் நீளம் = 8செ.மீ

**புள்ளி முறை வரைபடம்**




• **மொத்த செலவு முறை**:

ஒரு பண்டத்தின் விலை மாறும் போது நுகர்வோரின் மொத்த செலவில் ஏற்படும் மாற்றத்தை கொண்டு விலைத் தேவை நெகிழ்ச்சியை அளவிடலாம்.

| விலை | தேவை | மொத்த செலவு | தேவை நெகிழ்ச்சி |
|---|---|---|---|
| 150 | 3 | 450 | $e_p > 1$ |
| 125 | 4 | 500 | $e_p = 1$ |
| 100 | 5 | 500 | |
| 75 | 6 | 450 | $e_p < 1$ |

| விலைக்கும் மொத்த செலவிற்கும் உள்ள உறவு | விலைத் தேவை நேகிழ்ச்சி |
|---|---|
| எதிர்மறை | மிகை தேவை நெகிழ்ச்சி |
| மொத்த செலவு மாறாத போது. | அலகுத் தேவை நெகிச்சி |
| நேர்மறை | குறைத் தேவை நெகிழ்ச்சி |

27. **மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விவரி.**

**மாறும் விகித விளைவு விதி**: (குறுகியகால உற்பத்திச் சார்பு)(Law of Variable Proportions)

பிற உள்ளீடுகள் மாறாமல் இருக்கும் போது ஒரே ஒரு உள்ளீட்டை மட்டும் அதிகரித்து உற்பத்தியை பெருக்க முயன்றால் மொத்த உற்பத்தி முதலில் வளர்வீதத்தில் உயர்ந்து செல்லும் பின்பு நிலையாக இருக்கும் இறுதியில் குறைந்து செல்லும்.


**எடுகோள்கள்**: • ஒரே ஒரு உற்பத்திக் காரணி மட்டும் உயர்த்தப்படும். • உள்ளீடுகளின் விலை மாறாது.

• மற்ற உற்பத்திக் காரணிகள் மாறாது. • உற்பத்திக் காரணிகளின் விகிதம் மாறும்.

• காலம் குறுகியது. • தொழில்நுட்பம் மாறாது.

• உற்பத்தி பரும அலகுகளால் அளவிடப்படும்.

• மாறும் உற்பத்திக் காரணிகள் ஒரே தன்மை உடையவை.




**முதல் நிலை**:

• TP வளர் வீதத்தில் அதகரிக்கும். AP அதிகரித்து செல்லும்.

• MP அதிகரித்து சென்று உச்சத்தை அடைந்து பின் குறைய தொடங்கும்.

**இரண்டாம் நிலை**:

• TP குறைந்து செல் வீதத்தில் அதிகரித்து உச்சநிலையை அடையும்.

• AP உச்ச நிலையை அடைந்த பிறகுகுறைய தொடங்கும்.

• AP யின் உச்சநிலையில் AP = MP

• MP குறைந்து சென்று பூஜ்ஜியத்தை அடையும்.

**மாறும் விகித விளைவு விதி அட்டவணை**

| மாறும் உள்ளீடுகள் | TP | MP | AP | நிலை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 2 | 2 | I |
| 2 | 6 | 4 | 3 | |
| 3 | 12 | 6 | 4 | |
| 4 | 16 | 4 | 4 | II |
| 5 | 18 | 2 | 3.6 | |
| 6 | 18 | 0 | 3 | III |
| 7 | 16 | −2 | 2.28 | |

**மூன்றாம் நிலை**:

• TP குறைய தொடங்கி தொடர்ந்து குறையும்.

• AP குறைந்து செல்லும் ஆனால் பூஜ்யத்தை விட அதிகமாக இருக்கும்.

• MP எதிர்கணியமாகும்.

www.Padasalai.Net



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.


26. **விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக.**

**விகித அளவு விளைவு விதி**: **(நீண்டகால உற்பத்திச் சார்பு)**
**(Law of Returns to Scale)**

நீண்ட காலத்தில் அனைத்து உள்ளீடுகளையும் ஒரே விகிதத்தில் அதிகரிக்கும் போது வெளியீட்டில் ஏற்படும் மாற்றங்களை விளக்குவதே விகித அளவு விளைவு விதி.

**எடுகோள்கள்**
- தொழில்நுட்பம் மாறாது. • தொழில் அமைப்பு மாறாது.
- மற்ற அனைத்துக் காரணிகளும் ஒரே விதத்தில் மாறும்.
- உற்பத்தி பரும அலகுகளால் அளவிடப்படும்.
- பொருள் சந்தையில் நிறைவுப்போட்டி நிலவும்.

**விகித அளவு விளைவு விதியின் மூன்று நிலைகள்**:
- **வளர்ந்து செல் விகித அளவு விளைவு விதி**:
அனைத்து உள்ளீடுகளையும் 1 சதவீதம் உயர்த்தும் போது வெளியீடு 1 சதவீதத்திற்கு மேல் உயரும்.
- **மாறா விகித அளவு விளைவு விதி**:
அனைத்து உள்ளீடுகளையும் 1 சதவீதம் உயர்த்தும் போது வெளியீடும் 1 சதவீதம் உயரும்.
- **குறைந்து செல் விகித அளவு விளைவு விதி**:
அனைத்து உள்ளீடுகளையும் 1 சதவீதம் உயர்த்தும் போது வெளியீடு 1 சதவீதத்திற்கு குறைவாக உயரும்.




**வரைபட விளக்கம்**:
- உழைப்பு மற்றும் மூலதனத்தை 1 ல் இருந்து 2 என **ஒரு மடங்கு** உயர்த்த உற்பத்தி 1 ல் இருந்து 3 என **இரண்டு மடங்கு** வளர் வீதத்தில் ( **a – b** ) அதிகரிக்கிறது.
- உழைப்பு மற்றும் மூலதனத்தை 2 ல் இருந்து 4 என **இரு மடங்கு** உயர்த்த உற்பத்தி 3 ல் இருந்து 6 என **இரண்டு மடங்கு** மாறா வீதத்தில் ( **b – c** ) அதிகரிக்கிறது.
- உழைப்பு மற்றும் மூலதனத்தை 4 ல் இருந்து 8 என **நான்கு மடங்கு** உயர்த்த உற்பத்தி 6 ல் இருந்து 8 என **இரண்டு மடங்கு** குறைவான வீதத்தில் ( **c – d** ) அதிகரிக்கிறது.

27. **உழைப்பின் சிறப்பியல்புகள் யாவை?**

**உழைப்பின் சிறப்பியல்புகள்**:
- உழைப்பு இடம் பெயரக் கூடியது.
- உழைப்பு செயல் உற்பத்திக் காரணி.
- உழைப்பு பல வகைப்படும்.
- உழைப்பு அழியக்கூடியது, சேமித்து வைக்க முடியாது.
- உழைப்பை உழைப்பாளியிடம் இருந்து பிரிக்க முடியாது.
- தனி உழைப்பாளரின் பேரம் பேசும் ஆற்றல் குறைவு.
- உழைப்பாளரின் அளிப்பையும் திறமையையும் சார்ந்து கூலி அமையும்.
- உழைப்பாளர் உற்பத்திக்கு காரணமாகவும் பொருளை பயன்படுத்துபவராகவும் உள்ளார்.
- உழைப்பு இடங்களுக்கு இடையேயும் தொழில்களுக்கு இடையேயும் மெதுவாக நகரும்.

28. **தேவை என்பதன் பொருள் யாது?**

**தேவை பொருள்**:
வாங்கும் திறனுடன் கூடிய விருப்பத்தையும் வாங்கிட வேண்டும் என்ற இறுதி முடிவையும் உள்ளடக்கியதே தேவை.

29. **சம உற்பத்தி வளைகோடு என்றால் என்ன?**

**சம உற்பத்தி வளைகோடு**:
இரண்டு காரணிகளின் பல இணைப்புக் கலவைகளை பயன்படுத்தி பெறுகின்ற ஒரே அளவு உற்பத்தியைக் காட்டும் வளைகோடு.

30. **சம அளவு உற்பத்திக் கோட்டின் இலக்கணம் யாது?**

**சம அளவு உற்பத்திக் கோட்டின் இலக்கணம்**
அனைத்து சாத்தியமான உற்பத்திக் கலவைகளைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பரும அளவு உற்பத்தியை பெறுவதாகும் – **பெர்கூஸன்.**

31. **அளிப்பை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**

**அளிப்பை தீர்மானிக்கும் காரணிகள்**:
- பொருளின் விலை • பிற பண்டங்களின் விலை • உற்பத்திக் காரணிகளின் விலை.
- விலை பற்றிய எதிர்பார்ப்பு. • தொழில்நுட்பம். • இயற்கை காரணிகள்.
- புதிய கட்சா பொருட்கள் கண்டுபிடிப்பு. • வரிகள் மற்றும் சலுகைகள். • நிறுவனத்தின் நோக்கம்.






www.Padasalai.Net


32. **<u>சம அளவு உற்பத்திக் கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரி.</u>**

**<u>சம அளவு உற்பத்திக் கோட்டின் பண்புகள்</u>**:


· **<u>இடமிருந்து வலப் புறமாக கீழ் நோக்கி சரிந்து செல்லும்</u>**:
உற்பத்தியாளர் ஒரே அளவு உற்பத்தியை நிலை நிறுத்த உழைப்பை அதிகரித்து மூலதனத்தை குறைப்பதால் சம உற்பத்தி கோடு கீழ்நோக்கி சரிந்து செல்கிறது.





· **<u>தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்</u>**:
மூலதனத்திற்கு பதிலாக உழைப்பை பதிலீடு செய்யும் போது இறுதிநிலை தொழில்நுட்ப பதிலீட்டு வீதம் குறைந்து செல்வதால் சம உற்பத்தி கோடு தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.





· **<u>ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்ளாது</u>**:
C புள்ளியில் சமமற்ற இருவேறு உற்பத்தி புள்ளிகள் சமமாகிவிட்டது.
இது ஒரு போதும் சாத்தியம் இல்லை.
சம உற்பத்தி கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்ளாது.




· **<u>சம உற்பத்தி கோடுகள் X அச்சையோ Y அச்சையோ தொடாது</u>**:
$IQ_1$ ல் A புள்ளியில் உழைப்பு மட்டும் பயன்படுத்தப் பட்டுள்ளது.
$IQ_2$ ல் B புள்ளியில் மூலதனம் மட்டும் பயன்படுத்தப் பட்டுள்ளது.
மூலதனம் அல்லது உழைப்பை மட்டும் பயன்படுத்தி உற்பத்தி செய்வது இயலாத செயல்.




· **<u>உயர் சம உற்பத்திக் கோடு உயர் உற்பத்தி அளவை காட்டும்</u>**:
சம உற்பத்திக் கோடு மேல் நோக்கி செல்ல செல்ல அதிக உற்பத்திக் காரணிகள் பயன்படுத்தப் படுவதையும் அதிக உற்பத்தியையும் காட்டுவதாக அமையும்.




www.Padasalai.Net

33. **அகச் சிக்கனங்கள் மற்றும் புறச் சிக்கனங்களை விவரி.**

I. **அகச் சிக்கனங்கள்**:

தனி ஒரு நிறுவனத்தின் பல செயல்களால் அந்த நிறுனத்திற்கு உள்முகமாக விளையும் நன்மைகளே அகச் சிக்கனங்கள்.

- **அகச் சிக்கனங்களின் வகைகள்**:
- **நிதிச் சிக்கனங்கள்**: பெரிய நிறுவனங்கள் பங்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன பெருக்கத்தை ஏற்படுத்த முடியும்.
- **தொழில்நுட்ப சிக்கனங்கள்**: பேரளவு முதலீடு அமையும் போது நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் ஆராய்ச்சி வளர்ச்சியினால் உற்பத்தி திறன், தரம் மேம்படும்.
- **மேலாண்மைச் சிக்கனங்கள்**:பேரளவு உற்பத்தியினால் உருவாகும் வேலைப்பகுப்பு முறை மேலாண்மையை எளிதாக்கும்.
- **உழைப்புச் சிக்கனங்கள்**: வேலைப்பகுப்பு முறை உழைப்பின் தரம் மற்றும் திறனை மேம்படுத்தி உற்பத்தி திறனை அதிகரிக்கச் செய்யும்.
- **சந்தை சார்ந்த சிக்கனங்கள்**: பேரளவு உற்பத்தியில் ஈடுபடும் போது மூலப்பொருள்களை குறைந்த விலையில் வாங்க முடியும்.
- **சந்தையில் தொடர்ந்திருப்பதன் சிக்கனங்கள்**:
  பல வகையான பொருட்களை பேரளவில் உற்பத்தி செய்யும் போது ஒரு பொருள் சந்தையில் தோல்வியுற்று நட்டம் ஏற்பட்டாலும் அதனை எளிதில் ஈடு செய்ய முடியும்.

II. **புறச் சிக்கனங்கள்**:

நிறுவனத்திற்கு வெளியே ஏற்படும் மாற்றங்களால் உற்பத்தி முறைகளில் ஏற்படும் மேம்பாடுகளே புறச்சிக்கனங்கள். இது அனைத்து நிறுவனங்களுக்கும் கிடைக்கும்.


- **புறச்சிக்கனங்களின் வகைகள்**:
- மேம்பட்ட போக்குவரத்து வசதிகள்.
- வங்கி செயல்பாடு சார்ந்த வசதிகள்.
- நகரியல் வளர்ச்சி.
- தகவல் மற்றும் தொலைதொடர்பு வளர்ச்சி.

34. **பல்வேறுபட்ட விலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்ககு இடையேயான தொடர்பை விளக்குக.**

I. **மாறாத விலையில் (நிறைவுப் போட்டியில்) AR மற்றும் MR கோடுகளுக்கு இடையே உள்ள தொடர்பு**:

- நிறைவுப் போட்டியில் விலை (சராசரி வருவாய்) மாறாமல் நிலையாக இருக்கும்.
- எனவே இறுதிநிலை வருவாயும் நிலையாக இருந்து சராசரி வருவாய்க்கு சமமாக அமையும்.
- AR மற்றும் MR கோடுகள் ஒரே படுகிடை கோடாக OX அச்சுக்கு இணையாக அமையும்.


| விற்பனை அலகு (Q) | விலை (P) | மொத்த வருவாய் (TR) | சராசரி வருவாய் (AR) | இறுதிநிலை வருவாய் (MR) |
|---|---|---|---|---|
| 1. | 10 | 10 | 10 | 10 |
| 2. | 10 | 20 | 10 | 10 |
| 3. | 10 | 30 | 10 | 10 |
| 4. | 10 | 40 | 10 | 10 |
| 5. | 10 | 50 | 10 | 10 |
| 6. | 10 | 60 | 10 | 10 |




II. **மாறும் விலையில் (நிறை குறை போட்டியில்) AR மற்றும் MR கோடுகளுக்கு இடையே உள்ள தொடர்பு**:

- விலையை குறைத்தால் மட்டுமே ஒரு நிறுவனம் அதிக பொருட்களை விற்க முடியும்.
- எனவே விலை (AR) குறைந்து கொண்டே செல்லும்.
- AR குறைய MR குறையும். AR யை விட MR கூடுதலாக குறையும்.
- AR கோட்டின் கீழ் MR கோடு அமையும்.


| விற்பனை அலகு (Q) | விலை (P) | மொத்த வருவாய் (TR) | சராசரி வருவாய் (AR) | இறுதிநிலை வருவாய் (MR) |
|---|---|---|---|---|
| 1. | 10 | 10 | 10 | 10 |
| 2. | 9 | 18 | 9 | 8 |
| 3. | 8 | 24 | 8 | 6 |
| 4. | 7 | 28 | 7 | 4 |
| 5. | 6 | 30 | 6 | 2 |
| 6. | 5 | 30 | 5 | 0 |
| 7. | 4 | 28 | 4 | −2 |




www.Padasalai.Net

35. **குறுகியகால செலவு கோடுகளை வரைபடத்துடன் விளக்குக.**

- **சராசரி மாறாச் செலவு**: $(AFC) = \frac{TFC}{Q}$
- TFC நிலையாக இருக்கும் போது உற்பத்தி அதிகரிக்கும் எனில் AFC குறையும், கிழ்நோக்கி சரிந்து செல்லும்.
- AFC செவ்வக அதிபர வளைகோடாகும் X அச்சையோ Y அச்சையோ தொடாது.




- **சராசரி மாறும் செலவு**: $(AVC) = \frac{TVC}{Q}$
- AVC வளைகோடு உற்பத்தி அதிகரிக்கும் போது தொடக்கத்தில் குறைந்து செல்லும்.
- குறிப்பிட்ட உற்பத்தியில் AVC குறைந்தபட்ச மதிப்பை அடையும்.
- மேலும் உற்பத்தி அதிகரிக்கும் எனில் AVC அதிகரித்து செல்லும்.
- மாறும் விளைவு விதியின் இயக்கத்தினால் AVC வளைகோடு U வடிவில் அமையும்.
- **சராசரி செலவு**: $(AC) = \frac{TC}{Q}$
- AFC, AVC வளைகோடுகளின் தன்மைகளை சார்ந்து AC வளைகோடு அமையும்.
- AC வளைகோடு உற்பத்தி அதிகரிக்கும் போது தொடக்கத்தில் குறைந்து செல்லும்.
- குறிப்பிட்ட உற்பத்தியில் AC குறைந்தபட்ச மதிப்பை அடையும்.
- மேலும் உற்பத்தி அதிகரிக்கும் எனில் AC அதிகரித்து செல்லும்.
- மாறும் விளைவு விதியின் இயக்கத்தினால் AC வளைகோடு U வடிவில் அமையும்.
- **இறுதிநிலைச் செலவு**: $(MC) = \frac{\Delta TC}{\Delta Q}$
- மொத்த செலவு கோட்டின் சாய்வே இறுதிநிலைச் செலவு.
- MC வளைகோடு உற்பத்தி அதிகரிக்கும் போது மாறும் காரணிகளின் சிறப்பான செயல்பாட்டின் காரணமாக குறைந்து செல்லும்.
- குறிப்பிட்ட உற்பத்தியில் MC குறைந்தபட்ச மதிப்பை அடையும்.
- மேலும் உற்பத்தி அதிகரிக்கும் எனில் MC அதிகரித்து செல்லும்.
- மாறும் விளைவு விதியின் இயக்கத்தினால் MC வளைகோடு U வடிவில் அமையும்.

36. **மொத்த செலவு சார்பு $(TC) = 10 + Q^3$, $Q = 5$ எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.**

**தீர்வு**

$TC = 10 + Q^3$,
$TFC = 10$,
$TVC = Q^3$
$Q = 5$ எனில்

∴ விடை TFC = 10

2. $AC = \frac{TC}{Q}$

$(TC) = \frac{10+Q^3}{Q}$,

Q = 5 எனில்

$\frac{10}{Q} + \frac{Q^3}{Q}$

$= \frac{10}{2} + Q^2$

$= 2 + (5 \times 5)$

$= 2 + 25 = 27$

∴ விடை AC = 27

3. $AVC = \frac{TVC}{Q}$

$= \frac{Q^3}{Q} = Q^{(3-1)} = Q^2$

Q = 5 எனில்

$AVC = 5 \times 5$

∴ விடை AVC = 25

4. $AFC = \frac{TFC}{Q}$

$= \frac{10}{Q}$

Q = 5 எனில்

$= \frac{10}{5} = 2$

∴ விடை AFC = 2





www.Padasalai.Net

37. **நிறைவுப் போட்டியின் இயல்புகளை விளக்கவும்.**

**நிறைவுப் போட்டியின் இயல்புகள்**:

- **எண்ணற்ற வாங்குவோர் விற்போர்**:
நிறைவுப் போட்டி அங்காடியில் கணக்கிட முடியாத அளவுக்கு வாங்குவோரும் விற்போரும் உள்ளனர்.
எவரும் விலை மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. அனைவரும் விலை ஏற்பவர்.
- **ஓரியல்பான பண்டங்கள் மற்றும் ஒரே விலை**:
உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பண்டங்களும் அளவு, தரம், சுவை, நிறம் போன்றவற்றில் ஒருமைத் தன்மையுடைய முழு பதிலிகளாகும்.
- **உட்புகுதல், வெளியேறுதலில் தடையில்லை**:
அதிக இலாபம் கிடைக்கும் போது புதிய நிறுவனங்கள் தொழிலில் நுழையவும், நட்டம் ஏற்படும் போது தொழிலை விட்டு வெளியேறவும் தடையில்லை.
- **அங்காடி நிலைப் பற்றி முழுமையான அறிவு**:
விற்போரும், வாங்குவோரும் பண்டத்தின் விலை, தரம், தன்மை போன்ற அங்காடி நிலை பற்றிய அனைத்து விவரங்களையும் முழுமையாக அறிந்திருப்பர்.
- **உற்பத்தி காரணிகளின் முழுமையான இடப்பெயர்ச்சி**:
உற்பத்தி காரணிகள் தம் விருப்பப்படி இடம் விட்டு இடம் மற்றும் தொழில் விட்டு தொழில் இடம் பெயரும்.
- **போக்குவரத்து செலவு இல்லை**:
போக்குவரத்து செலவு இல்லை. எனவே அங்காடி முழுவதிலும் ஒரே விலை நிலவும்.
- **அரசின் தலையீடு இல்லை**:
அரசு அங்காடி செயல்பாட்டில் தலையிடாது.
நுகர்வோர், விற்போர், உற்பத்திக் காரணிகள் இடையே கூட்டுத் தன்மை இல்லை.
தேவை, அளிப்பு சக்திகளின் தன்னிச்சையான செயல்பாட்டால் விலை தீர்மானிக்கப்படும்.

38. **சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.**

**சில்லோர் முற்றுரிமை:** மிகச் சில நிறுவனங்கள் ஒரே மாதிரியான அல்லது வித்தியாசமான பண்டங்களை உற்பத்தி செய்யும் நிலையே சில்லோர் முற்றுரிமை.

**சில்லோர் முற்றுரிமையின் பண்புகள்**:

- **பெரிய நிறுவனங்கள்:** மிகச் சில பெரிய நிறுவனங்கள் அங்காடி முழுவதும் உற்பத்தி மற்றும் தேவையை கட்டுப்படுத்தும்.
- **நிறுவனங்கள் ஒன்றையொன்று சார்ந்திருத்தல்:** ஒரு நிறுவனத்தின் விலை, உற்பத்தி அளவை தீர்மானிக்கும் முடிவுகள் போட்டி நிறுவனங்களின் முடிவை சார்ந்து அமையும்.
- **குழுச் செயல்பாடு:** சில்லோர் முற்றுரிமை நிறுவனங்கள் அனைத்தும் தமக்குள் ஒற்றுமையுடன் கூட்டுறவாக செயல்பட வேண்டியதை உணர்ந்திருக்கும்.
- **விளம்பரச் செலவு:** சில்லோர் முற்றுரிமை நிறுவனங்கள் விளம்பரம் அல்லது உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தி விற்பனையை அதிகரிக்கும்.
- **பண்டத்தின் தன்மை:**
- நிறைவு சில்லோர் முற்றுரிமையில் ஒரே விதமான பொருள் உற்பத்தி செய்யப்படும்.
- நிறை குறை சில்லோர் முற்றுரிமையில் பல விதமான பொருள்கள் உற்பத்தி செய்யப்படும்.
- **மாறாத விலை:** சில்லோர் முற்றுரிமையில் எதிராளிகளின் போட்டி பற்றிய அச்சத்தால் விலை மாறாமல் இருக்கும்.

39. **முதன்மைச் செலவு என்றால் என்ன?**

- **முதன்மைச் செலவு**: உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடக் கூடிய செலவுகளுடன் நிர்வாக செலவுகளையும் சேர்க்க கிடைப்பதே முதன்மைச் செலவு.
- **முதன்மைச் செலவு (PC)** = *மாறும் செலவுகள்* + *நிர்வாக செலவுகள்*

40. **மிதக்கும் செலவு என்றால் என்ன?**

**மிதக்கும் செலவு**:

- வியாபரா நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புடைய செலவுகலே மிதக்கும் செலவுகள்.
- கச்சாப் பொருளுக்கான செலவு இதில் சேராது.
- ஒரு நிறுவனத்தின் அன்றாட வியாபார நடவடிக்கைகளுக்கு மிக அவசியமான செலவுகளே மிதக்கும் செலவுகள்.

41. **சராசரி செலவு என்றால் என்ன?**

**சராசரி செலவு**:

- மொத்த செலவை உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களில் எண்ணிக்கையால் வகுக்க கிடைக்கும் ஈவே சராசரி செலவு.
- உற்பத்தியின் ஒரு அலகிற்கான செலவே சராசரி செலவு $(AC) = \frac{TC}{Q}$

42. **நிலம் என்பதன் பொருள் யாது?**

**நிலம்**: • இயற்கை மனிதனுக்கு இலவசமாக அளித்திருக்கும் வளங்கள் அனைத்தும் பொருளியலில் நிலம் எனப்படும்.
• மனிதனால் உருவாக்கப்படாத அனைத்துப் பொருட்களும் பொருளியலில் நிலம் எனபடும்.

43. **சராசரி உற்பத்தி என்றால் என்ன?**

• **சராசரி உற்பத்தி**: மொத்த உற்பத்தியை உற்பத்திக் காரணிகளின் எண்ணிக்கையால் வகுக்க கிடைக்கும் ஈவே சராசரி உற்பத்தி. • **சராசரி உற்பத்தி** $(AP) = \frac{TP}{N}$ • **TP =** மொத்த உற்பத்தி. **N =** உள்ளீடுகளின் மொத்த எண்ணிக்கை





www.Padasalai.Net

44. **மிக நீண்ட காலம் குறிப்பு வரைக.**

**மிக நீண்ட காலம்**:
- ஒரு நாட்டின் முழு பொருளாதாரமும் மிகப் பெரிய அளவில் மாற்றம் பெறும்.
- பழைய மற்றும் அது சார்ந்த பொருட்கள் அங்காடியில் இருக்காது.
- புதிய தொழில்நுட்பம், புதிய உற்பத்தி முறைகள் அறிமுகம் செய்யப்படும்.
- நவீன நாகரீகத்திற்கு ஏற்ப பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.

**உதாரணம்**:
- குறுந்தகடுகளின் அறிமுகம் ஒலிநாடவின் பயன்பாட்டை அகற்றியது.
- விரலிகளின் அறிமுகம் குறுந்தகடுகளின் பயன்பாட்டை குறைத்துள்ளது.

45. **அளிப்பை தீர்மானிக்கும் காரணிகளை யாவை?**

**அளிப்பை தீர்மானிக்கும் காரணிகள்**:
- **பொருளின் விலை**: அளிப்பை தீர்மானிக்கும் மிக முக்கிய காரணி விலை.பொருளின் விலை உயர்ந்தால் அளிப்பு உயரும்.
- **பிற பண்டங்களின் விலை**: ஒரு பொருளின் அளிப்பு பிற பொருட்களின் விலையை சார்ந்து அமையும். சர்க்கரையின் விலை உயர்வு நெல்லின் அளிப்பை குறைக்கும்.
- **காரணிகளின் விலை**: உற்பத்திக் காரணிகளின் விலை அதிகரிக்கும் போது உற்பத்தி செலவு அதிகரிக்கும் அளிப்பு குறையும்.
- **வருங்கால விலை பற்றிய எதிர்பார்ப்பு**: வருங்காலத்தில் விலை உயரும் என எதிர்பார்க்கபடும் எனில் நிகழ்கால அளிப்பு குறையும்.
- **வரிகள் – சலுகைகள்**: அரசு வழங்கும் சலுகைகள் மற்றும் மானியங்கள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து அளிப்பை அதிகரிக்கும்.
- **இயற்கை காரணிகள்**: பருவநிலை, மழை அளவு, தட்ப வெப்பநிலையால் அளிப்பு பாதிக்கப்படும்.

46. **மொத்த உற்பத்தி என்றால் என்ன?**
- **மொத்த உற்பத்தி**: ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்திக் காரணிகளின் கலவையை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் மொத்த அளவே மொத்த உற்பத்தி.
- இறுதிநிலை உற்பத்திகளின் கூட்டுத் தொகையே மொத்த உற்பத்தி.

47. **ஐசோகுவான்ட் பெயர் காரணம் தருக?**
- ஐசோகுவான்ட் என்பது கிரேக்க மொழி சொல். சம உற்பத்தி கோடு என்பது அதன் பொருள்.
- **ஐசோ** என்பதன் பொருள் **சமம்**. **குவான்ட்** என்பதன் பொருள் – **அளவு.**

48. **சமூக செலவு என்றால் என்ன?**

**சமூக செலவு**: ஒரு நிறுவனம் பண்டத்தை உற்பத்தி செய்வதால் சமுதாயத்தில் உள்ள மக்கள் ஏற்றுக்கொள்ளும் தியாகங்கள், இன்னல்கள் மற்றும் பிற செலவுகளுமே சமூக செலவு.
- சமூகச் செலவுகள் வெளிச் செலவுகள் என்றும் அழைக்கப்படுகிறது.
- நிறுவனங்கள் ஏற்படுத்தம் காற்று மாசு, நீர் மாசு, ஒலி மாசுகளால் மக்களுக்கு ஏற்படும் நோய்களுக்கான மருத்துவச் செலவு.

49. **அகச் சிக்கனமின்மைகள் என்றால் என்ன?**

**அகச் சிக்கனமின்மைகள்**: ஒரு நிறுவனம் உத்தம அளவு நிலைக்கு மேலும் தொடர்ந்து விரிவடைந்து செல்லும் போது அந்த நிறுவனத்திற்கு உள்முகமாக விளையும் தீமைகளே அகச் சிக்கனமின்மைகள்.

**உதாரணம்**: மேலாண்மை இடர்கள், முடிவுகள் எடுப்பதில் காலதாமதம், சராசரி செலவு அதிகரித்தல்.

50. **புறச் சிக்கனமின்மைகள் என்றால் என்ன?**

**புறச் சிக்கனமின்மைகள்**: நிறுவனத்திற்கு வெளியே நிகழும் நிகழ்வுகள் காரணமாக நிறுவனங்களுக்கு விளையும் இடையூறுகளே புறச் சிக்கனமின்மைகள்.

51. **விலைபேதம் காட்டுதல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**

**விலைபேதம் காட்டுதல் :** முற்றுமை நிறுவனம் ஒரே மாதிரியான பண்டங்களை நுகர்வோர் பலரிடையே வெவ்வேறு விலைகளில் விற்பது.

**விலைபேதம் காட்டுதலின் வகைகள்**
- **தனிநபர் பேதம் :** பல விதமான விலைகளை பல நபர்களிடம் பெறுவது.
  உதாரணம்: இரயில் கட்டணங்கள், திரையரங்கு கட்டணங்கள்.
- **இட பேதம் :** ஒரு பொருளுக்கு பல்வேறு இடங்களில் பல்வேறு விலைகளை தீர்மானித்தல்.
  ஒரே மாதிரியான புத்தகத்தை உள்நாட்டில் அதிக விலையிலும் வெளிநாட்டில் குறைவான விலையிலும் விற்பனை செய்தல்.
  **உதாரணம்**: குவித்தல்.
- **பயன் அடிப்படையில் பேதம்**:
  ஒரு பண்டத்தினை பயன்படுத்தும் அளவின் அடிப்படையில் விலையை பெறுதல்.
  **உதாரணம்**: மின் கட்டணம்.

52. **உழவர் கடன் அட்டைத் திட்டம் பற்றி குறிப்பு வரைக.**

**உழவர் கடன் அட்டைத் திட்டம் (KKC)**: • கடன் பெறுகின்ற ஒரு விவசாயியின் தகுதிக்கு ஏற்ப கடன் மிக எளிதாக மற்றும் சரியான நேரத்தில் வழங்குவதற்கான ஒரு ஏற்பாடாகும்.
- 1998 ஆம் ஆண்டு இந்தியாவின் மைய வங்கி மற்றும் நபார்டு வங்கியால் தொடங்கப்பட்டது.
- விவசாயிகள் கடனுக்காக முறைசாரா வங்கிகளை சார்ந்திருப்பதை குறைப்பதே இதன் நோக்கம்.
- இந்த கடன் அட்டையை பிராந்திய, கிராமபுற, கூட்டறவு மற்றும் பொதுத் துறை வங்கிகள் வழங்குகின்றன.
- அரசு இதனை மின் தகவல் அட்டையாக வழங்க அறிவுறுத்தியுள்ளது.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.


www.Padasalai.Net

**53. <u>காலத்தின் அடிப்படையில் அங்காடியின் வகைகளை விளக்குக.</u>**

- **<u>மிகக் குறுகியகாலம்</u>: (அங்காடி காலம்)**
- தேவைக்கு ஏற்ப அளிப்பில் எவ்வித மாற்றமும் செய்ய முடியாத காலம்.
- அளிப்பு கோடு செங்குத்தாக நெகிழ்ச்சியற்று இருக்கும்.
- விலையை தீர்மானிப்பதில் தேவையின் ஆதிக்கம் அதிகம்.
- **<u>உதாரணம்</u>**: காய்கறிகள், பழங்கள், முட்டை, பால், இறைச்சி.
- **<u>குறுகிய காலம்</u>**:
- தேவைக்கு ஏற்ப அளிப்பில் குறிப்பிட்ட அளவு மாற்றத்தை அதிகரிக்க வாய்ப்பு உள்ள காலம்.
- அளிப்பு வளைகோடு சற்று நெகிழ்ச்சியுடையதாக இருக்கும்.
- மாறும் காரணிகளின் மாற்றத்தினால் அளிப்பை சற்று அதிகரித்து தேவையை ஈடுசெய்ய முடியும்.
- விலையை தீர்மானிப்பதில் அளிப்பும் தேவையும் சமபங்கு பெறும்.
- **<u>நீண்டகாலம்</u>**:
- தேவைக்கு ஏற்ப அளிப்பை முழுமையாக அதிகரிக்க வாய்ப்பு உள்ள காலம்.
- அளிப்பு வளைகோடு நெகிழ்ச்சியுடையதாக தட்டையாக இருக்கும்.
- அனைத்துக் காரணிகளும் மாறும்.
- விலையை தீர்மானிப்பதில் அளிப்பின் ஆதிக்கம் அதிகம்.

**54. <u>முற்றுரிமையில் விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுவதை விளக்குக.</u>**

**<u>முற்றுரிமையில் விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுதல்</u>**:





- AR தேவைக்கோடு கீழ் நோக்கி சரிந்து செல்லும்.
- AR கோட்டின் கீழ் MR கோடு அமையும்.
- AC, MC வளைகோடுகள் U வடிவில் அமையும்.
- MC யை விட MR அதிகமாக இருக்கும் வரை நிறுவனம் தொடர்ந்து உற்பத்தியில் ஈடுபடும்.
- MC = MR எனில் நிறுவனம் சமநிலை பெறும்.
- AC < AR எனில் நிறுவனம் இலாபம் பெறும்.
- முற்றுரிமை நிறுவனத்தின் நோக்கம் உச்ச இலாபம் பெறுதல்.

**<u>வரைபட விளக்கம்</u>**:

- MC கோடு MR கோட்டை கீழிருந்து வெட்டும் E புள்ளியில் நிறுவனம் சமநிலை பெறும்.
- சமநிலை உற்பத்தி = OM. • சமநிலை விலை = OP.
- சராசரி வருவாய் = QM. • சராசரி செலவு = RM.
- ஒரு பொருளுக்கான இலாபம் = RQ.
- ∴ நிறுவனம் பெறும் மொத்த இலாபம் RQ X OM = PQRS நிழலிடப்பட்ட பகுதி.

**55. <u>முற்றுரிமை போட்டியில் விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுவதை விளக்குக.</u>**

**<u>முற்றுரிமையில் விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுதல்</u>**:




- AR தேவைக்கோடு நெகிழ்ச்சியுடையதாய் கீழ் நோக்கி சரிந்து செல்லும்.
- AR கோட்டின் கீழ் MR கோடு அமையும்.
- AC, MC வளைகோடுகள் U வடிவில் அமையும்.
- MC யை விட MR அதிகமாக இருக்கும் வரை நிறுவனம் தொடர்ந்து உற்பத்தியில் ஈடுபடும்.
- MC = MR எனில் நிறுவனம் சமநிலை பெறும்.
- AC < AR எனில் நிறுவனம் இலாபம் பெறும்.
- முற்றுரிமைப்போட்டி நிறுவனத்தின் நோக்கம் இலாபம் பெறுதல்.

**<u>வரைபட விளக்கம்</u>**:

- MC கோடு MR கோட்டை கீழிருந்து வெட்டும் E புள்ளியில் நிறுவனம் சமநிலை பெறும்.
- சமநிலை உற்பத்தி = OM. • சமநிலை விலை = OP.
- சராசரிவருவாய் = QM. • சராசரி செலவு = RM.
- ஒரு பொருளுக்கான இலாபம் = RQ.
- ∴ நிறுவனம் பெறும் மொத்த இலாபம் RQ X OM = PQRS நிழலிடப்பட்ட பகுதி.

**56. <u>போட்டியின் அடிப்படையில் அங்காடிகளின் வகைகள் யாவை?</u>**

**<u>போட்டியின் அடிப்படையில் அங்காடிகளின் வகைகள்</u>**:

- நிறைவுப் போட்டி.
- நிறைகுறைப் போட்டி.

**<u>நிறைகுறைப் போட்டியின் வகைகள்</u>**:

- முற்றுரிமை(ஒருவர்). • இருவர் முற்றுரிமை(இருவர்). • சில்லோர் முற்றுரிமை(சிலர்).
- முற்றுரிமைப் போட்டி(பலர்). • இருமுக முற்றுரிமை.

www.Padasalai.Net




ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

57. **<u>நிறைவுப் போட்டியில் விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுதலை வரைபடத்துடன் விளக்குக.</u>**

**<u>நிறைவுப்போட்டியில் விலை மற்றும் உற்பத்தியளவு தீர்மானிக்கப்படுதல்</u>**:

- நிறைவுப் போட்டியில் நிறுவனம் விலை ஏற்பவர்.
- விலை நிலையாக இருக்கும் எனவே AR = MR இரண்டும் ஒரே நேர்கோட்டில் அமையும்.
- MC = MR எனில் நிறுவனம் சமநிலை பெறும்.
- MC கோடு MR கோட்டை கீழிருந்து வெட்டும்.
- AC, MC வளைகோடுகள் U வடிவில் அமையும்.
- AC யின் தாழ்ந்த புள்ளியில் MC கீழிருந்து வெட்டி செல்லும்.

**<u>வரைபடம்</u>**:




**<u>முதல்பகுதி</u>: (தொழிற்சாலை)**

தேவைக்கோடும் அளிப்புகோடும் வெட்டும் $E_0$ புள்ளியில் தொழிற்சாலை சமநிலை பெறும்.

தொழிற்சாலையின் சமநிலை உற்பத்தி $= OQ$ தொழிற்சாலையின் சமநிலை விலை $= OP$

**<u>இரண்டாம் பகுதி</u>: (நிறுவனம் 1 – இலாபம்)**

- MC கோடு MR கோட்டை கீழிருந்து வெட்டும் E புள்ளியில் நிறுவனம் சமநிலை பெறும்.
- சமநிலை உற்பத்தி = OM. • சமநிலை விலை = OP.
- சராசரிவருவாய் = EM. • சராசரி செலவு = RM.
- ஒரு பொருளுக்கான இலாபம் = RE.
- ∴ நிறுவனம் ஈட்டும் பெறும் இலாபம் RE X OM = PERS நிழலிடப்பட்ட பகுதி.

**<u>மூன்றாம் பகுதி</u>: ( நிறுவனம் – 2 – நட்டம் )**

- MC கோடு MR கோட்டை கீழிருந்து வெட்டும் $E_1$ புள்ளியில் நிறுவனம் சமநிலை பெறும்.
- சமநிலை உற்பத்தி= $OM_1$ • சமநிலை விலை = $OP_1$
- சராசரிவருவாய் = $E_1M_1$ • சராசரி செலவு = $R_1M_1$
- ஒரு பொருளுக்கான நட்டம் = $R_1E_1$
- ∴ நிறுவனம் பெறும் மொத்த நட்டம் $R_1E_1 \times OM_1 = P_1E_1R_1S_1$ கோடிடப்பட்ட பகுதி.

58. **<u>வாங்குவோர் முற்றுரிமை என்றால் என்ன?</u>**

**<u>வாங்குவோர் முற்றுரிமை</u>**:

- ஒரு அங்காடியில் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்க ஒருவர் மட்டம் இருப்பதே வாங்குவோர் முற்றுரிமை.
- வாங்குபவர் அங்காடியில் மிகுந்த சக்தியுடன் செயல்படுவார்.
- வாங்கும் முற்றுரிமையாளன் அங்காடியின் தேவை பக்கத்தில் மிகுந்த ஆதிக்கத்துடன் இருப்பார்.

59. **<u>இருவர் முற்றுரிமை என்றால் என்ன?</u>**

**<u>இருவர் முற்றுரிமை</u>**:

- தனிப்பட்ட இரு விற்பனையாளர்களை மட்டும் கொண்ட அங்காடி அமைப்பே இருவர் முற்றுரிமை.
- இரு விற்பனையாளரும் தனித்து செயல்படுவர்.
- இருவரும் விலை மற்றும் உற்பத்தியை மாற்றும் சுதந்திரம் பெற்று இருப்பர்.
- ஒரு விற்பனையார் தன் நடவடிக்கையால் எதிராளி பாதிக்கப்படவில்லை எனக் கருதுவார்.

60. **<u>ஒரு நிறுவனம் சமநிலை அடைவதற்கான நிபந்தனைகள் யாவை?</u>**

**<u>நிறுவனம் சமநிலை அடைவதற்கான நிபந்தனை</u>**

- இறுதிநிலைச் செலவு சராசரி செவுக்கு சமாக இருக்க வேண்டும். MC = MR
- MC கோடு MR கோட்டை கீழிருந்து வெட்டிச் செல்ல வேண்டும்.

61. **<u>இருமுக முற்றுரிமை என்றால் என்ன?</u>**

**<u>இருமுக முற்றுரிமை</u>**:

- ஒரே ஒரு உற்பத்தியாளர் மற்றும் ஒரே ஒரு வாங்குபர் மட்டும் உள்ள அங்காடி அமைப்பு.
- முற்றுரிமை மற்றும் வாங்குவோர் முற்றுரிமை இணைந்த அங்காடி அமைப்பு.

62. **<u>விலையை நிர்ணயிப்பவர் யார்?</u>**

அங்காடியில் தனது பண்டத்திற்கு விலையை நிர்ணயம் செய்யும் சக்தியை பெற்றவர்.

www.Padasalai.Net



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.


63. **இறுதிநிலை உற்பத்தி திறன் பகிர்வுக் கோட்பாட்டை விளக்குக.**

**இறுதிநிலை உற்பத்தி திறன் பகிர்வுக் கோட்பாட்டு**:
ஒவ்வொரு உற்பத்திக் காரணியும் அதன் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கு சமமாக ஊதியம் பெறும்.

**எடுகோள்கள்**:
- நிறைவுப்போட்டி நிலவுகிறது.
- காரணிகள் அனைத்தும் ஒரே தன்மையுடையவை.
- காரணிகளை ஒன்றக்கொன்று பதிலீடு செய்யலாம்.
- தொழிலநுட்பம் மாறாது.
- நிறுவனத்தின் நோக்கம் உச்ச இலாபம் பெறுதல்.

**விளக்கம்**:
- உற்பத்தியாளர் காரணிகளின் விலை அதன் இறுதிநிலை வருவாய் உற்பத்திக்கு சமமாகும் வரை தொடர்ந்து காரணியை பணியில் அமர்த்துவார்.
- காரணியின் விலை அதன் இறுதிநிலை உற்பத்திக்கு சமம் எனில் உற்பத்தியாளர் உச்ச இலாபம் பெறுவார்.

**வரைபட விளக்கம்**:
- MRP = இறுதிநிலை வருவாய் உற்பத்தி.
- ARP = சராசரி வருவாய் உற்பத்தி.
- AFC = காரணியின் சராசரி செலவு.
- MFC = காரணியின் இறுதிநிலை செலவு.
- நிறைவுப் போட்டியில் AFC = MFC இரண்டும் ஒரே நேர்கோட்டில் அமையும்.
- வரைபடத்தில் Q புள்ளியில் MFC = MRP எனவே நிறுவனம் காரணி அங்காடியில் சமநிலை பெறும்.
- Q புள்ளியில் ON அலகு காரணிகளை OP விலையில் நிறுவனம் பணியில் அமர்த்தும்.
- Q புள்ளியில் MFC = MRP = ARP = AFC எனவே காரணிகள் சுரண்டப்படுவதில்லை.





**குறைபாடுகள்**:
- காரணிகள் அனைத்தும் ஒருமைத் தன்மையுடன் இருக்காது.
- காரணிகளை ஒன்றுக்கொன்று பதிலீடு செய்ய முடியாது.
- குறுகிய காலத்திற்கு இந்த கோட்பாடு பொருந்தாது.

64. **நிறைகுறை போட்டியில் இறுதிநிலை உற்பத்தி திறன் பகிர்வு கோட்பாடு விளக்குக.**

**இறுதிநிலை உற்பத்தி திறன் பகிர்வு கோட்பாடு:**
ஒவ்வொரு உற்பத்திக் காரணியும் அதன் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கு சமமாக ஊதியம் பெறும்.

**விளக்கம்**: · உற்பத்தியாளர் காரணிகளின் விலை அதன் இறுதிநிலை வருவாய் உற்பத்திக்கு சமமாகும் வரை தொடர்ந்து காரணியை பணியில் அமர்த்துவார்
.· காரணியின் விலை அதன் இறுதிநிலை உற்பத்திக்கு சமம் எனில் உற்பத்தியாளர் உச்ச இலாபம் பெறுவார்.

**வரைபட விளக்கம்**:
- MRP = இறுதிநிலை வருவாய் உற்பத்தி.
- ARP = சராசரி வருவாய் உற்பத்தி.
- AFC = காரணியின் சராசரி செலவு.
- MFC = காரணியின் இறுதிநிலை செலவு.
- Q புள்ளியில் உற்பத்தியாளர் உச்ச இலாபத்தை பெறுவார்.
- NQ காரணியின் மூலம் கிடைத்த சராசரி வருவாய்.
- NR காரணிக்கு செய்த சராசரி செலவு.
- ஒவ்வோரு அலகு காரணியும் RQ அளவு சுரண்டப்படுகிறது.
- ON பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் அளவு.
- உற்பத்தியாளர் காரணியை சுண்டிய அளவு RQ X ON = PQRS.




65. **நீர்மை விருப்பம் என்பதன் இலக்கணம் தருக.**

**நீர்மை விருப்பம்**: மற்ற வடிவத்தை காட்டிலும் விருப்பத்திற்கு ஏற்ப ரொக்கமாக வைத்திருக்கும் ரொக்க பண அளவே நீர்மை விருப்பம்.

66. **வட்டி என்பதன் பொருள் தருக.**

**வட்டி**: அங்காடியில் மூலதனத்தை பயன்படுத்திக் கொள்வதற்காக கொடுக்கப்படும் வெகுமிதயே வட்டி.

67. **இறுதிநிலை வருவாய் உற்பத்தி என்றால் என்ன?**

**இறுதிநிலை வருவாய் உற்பத்தி**: கூடுதலாக ஒரு உற்பத்திக் காரணியை பணியில் அமர்த்துவதால் மொத்த வருவாயில் ஏற்படும் நிகர மாற்றமே இறுதிநிலை வருவாய்உற்பத்தி. • $MRP = MPP \times MR$
- இறுதிநிலை பருப்பொருள் உற்பத்தியை இறுதிநிலை வருவாயினால் பெருக்க கிடைப்பது.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

68. **<u>ரிக்கார்டோவின் நில வாரக் கோட்பாட்டை விவரி.</u>**

**<u>ரிக்கார்டோவின் நில வாரக்கோட்பாடு</u>**:

**<u>வாரம்</u>**: நிலத்தின் உண்மையானதும் அழிக்க முடியாததுமான சக்திகளை பயன்படுத்திக் கொள்வதற்காக நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதே வாரம்.


**<u>எடுகோள்கள்</u>**:

- நிலம் வளத்தில் வேறுபட்டது.
- நிறைவுப்போட்டி நிலவும்.
- நிலத்தின் சக்திகளை அழிக்க முடியாது.
- நிலத்தின் வளம், அமைவிடத்தை பொருத்து வாரம் அமையும்.
- வேளாண்மைக்கு மட்டுமே நிலம் பயன்படுத்தப்படும்.
- அதிக வளம் உள்ள நிலம் முதலில் பயிரிடப்படும்.

**<u>எடுத்துக்காட்டு</u>**:

- புதிய தீவில் குடியேறும் மக்கள் முதலில் செழுமையான முதல் தர நிலத்தை (A) பயிரிட 40 மூட்டை நெல்விளைகிறது.
- மக்கள் தொகை அதிகரிக்க இரண்டாம் தர நிலம் (B) பயிரிடப்படும் அதன் விளைச்சள் 30 மூட்டை நெல்.
- மேலும் மக்கள் தொகை அதிகரிக்க மிக குறைந்த வளமுள்ள மூன்றாம் தர நிலம் (C) பயிரடப்படும். அதன் விளைச்சல் 20 மூட்டை நெல்
- மூன்றாம் தர நிலத்தின் உற்பத்தி செலவு அதன் உற்பத்தி மதிப்புக்கு சமமாக இருக்கும்.

| நிலத்தின் தரம் | உற்பத்தி நெல் மூட்டைகளில் | வாரம் (உபரி) நெல் மூட்டைகள் |
|---|---|---|
| A | 40 | 20 |
| B | 30 | 10 |
| C | 20 | 0 |




**<u>வரைபட விளக்கம்</u>**:

- X அச்சில் நிலத்தின் தரமும், Y அச்சில் நிலத்தின் உற்பத்தியும் காட்டப்பட்டுள்ளது.
- A, B தர நிலங்கள் வாரம் பெறுகின்றன.
- வரைபடத்தில் கோடிடப்பட்ட பகுதி பொருளாதார வாரமாகும்.
- இங்கு மூன்றாம் தர நிலம் (C) வாரமில்லா இறுதி நிலை நிலமாகும்.

**<u>குறைபாடுகள்</u>**:

- குடியேறிய மக்கள் முதலில் வளமான நிலத்தையை பயிரிட்டனர் என்பதற்கு ஆதாரம் இல்லை.
- வாரம் விலையில் சேராது என்பது தவறு. வாரம் விலையில் சேரும்.
- நிலத்தின் சக்திகளை அழிக்க முடியும்.

64. **<u>கீன்ஸின் நீர்மை விருப்ப வட்டிக் கோட்பாட்டை விளக்குக.</u>**

**<u>கீன்ஸின் நீர்மை விருப்ப வட்டிக்கோட்பாடு</u>**:


- **<u>வட்டி பொருள்:</u>**
  நீர்மைத் தன்மையை குறிப்பிட்ட காலத்திற்கு விட்டுக் கொடுப்பதற்காக வழங்கப்படும் வெகுமதியே வட்டி.
- **<u>நீர்மை விருப்பம்:</u>**
  மக்கள் தங்களது சொத்தின் ஒரு பகுதியை ரொக்க பணமாக வைத்திருக்க விரும்புவதே நீர்மை விருப்பம்.

**<u>பணத் தேவைக்கான (நீர்மை விருப்பத்திற்கான) நோக்கங்கள்</u>**:

- **<u>பேர (பரிமாற்ற) நோக்கம்</u>**: மக்கள் தங்களது அன்றாட செலவுகளை மேற்கொள்ள பணத்தை ரொக்கமாக கையில் வைத்திருக்க விரும்புதல். $M_T = f(Y)$
- **<u>முன்னேச்சரிக்கை நோக்கம்</u>**: எதிர்பாராத செலவுகளை மேற்கொள்ள பணத்தை ரொக்கமாக கையில் வைத்திருக்க விரும்புதல். $M_P = f(Y)$
- **<u>ஊக வணிக நோக்கம்</u>**: முதலீட்டுச் சந்தையில் பங்கு பத்திரங்களை வாங்கி விற்பதன் மூலம் இலாபம் பெறும் நோக்கில் பணத்தை ரொக்கமாக கையில் வைத்திருக்க விரும்புதல். $M_S = f(I)$

**<u>வரைபட விளக்கம்</u>**:

- பணத்திற்கான தேவைக்கோடு LP பணத்திற்கான அளிப்புக் கோடு MS யை வெட்டும் E புள்ளியில் சமநிலை வட்டிவீதம் I தீர்மானிக்கப்படுகிறது.
- பணத்தின் அளிப்பு மாறாமல் இருக்கம் போது பணத்திற்கான தேவை $LP_1$ என அதிகரித்தால் வட்டிவீதம் $I_1$ என அதிகரிக்கும்.




**<u>திறனாய்வு</u>**:

- குறுகிய கால வட்டிவீதம் பற்றி மட்டுமே விளக்கப்பட்டுள்ளது.
- பல்வேறு வட்டிவீதங்கள் சந்தையில் நிலவுவதை விளக்க தவறிவிட்டது.
- நீர்மை விருப்பத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

65. **கடன்நிதி வட்டிக் கோட்பாட்டை விளக்குக.**

**கடன்நிதி வட்டிக் கோட்பாடு:**

- கடன் நிதியை பயன்படுத்திக் கொள்ள வழங்கப்படும் வெகுமதியே வட்டி.

**கடன் நிதிக்கான தேவை (LD):**

- **முதலீட்டுக்கான தேவை** (I): நிறுவனங்களுக்கு முதலீட்டுப் பண்டங்களை வாங்க அதிக அளவில் கடன்நிதி தேவைப்படுகிறது.
- **நுகர்வுத் தேவை** (C): தனி நபர்களுக்கு பண்டங்கள், பணிகளை நுகர்வுக்காக வாங்க கடன்நிதி தேவைப்படுகிறது.
- **பதுக்குவதற்கான தேவை** (H): மக்கள் பணத்தை பயன்படுத்தாமல் பல காரணங்களுக்காக ரொக்கமாக கையில் வைத்திருக்க கடன்நிதி தேவைப்படுகிறது.

**கடன் நிதிகளின் அளிப்பு (LS):**


- **சேமிப்பு** (S): சேமிப்பில் இருந்து கடன்நிதிப் பெறப்படுகிறது.
- **வங்கிக் கடன்** (BC): வணிக வங்கிகளின் கடன் உருவாக்கம் மூலம் கடன் நிதி அளிக்கப்படுகிறது.
- **பதுக்கியதை மீட்டல்** (DH): பதுக்கிய பணத்தை வெளிக் கொண்டுவந்து பயன்படுத்துதல்.
- **முதலீடு செய்யாதிருத்தல்** (DI): இயந்திரங்கள் தேய்மானம் அடையும் போது அதற்கு போதுமான நிதி ஒதுக்காமல் இருத்தல்.
- கடன்நிதிக்கான அளிப்பு LS = S + BC + DH + DI வட்டிவீதத்தோடு நேரடி தொடர்புடையது.
- கடன்நிதிக்கான தேவை LD = I + C + H வட்டிவீதத்தோடு எதிர்மறை தொடர்புடையது.

**வரைபட விளக்கம்:**

- மொத்த கடன்நிதிக்கான அளிப்புக்கோடு (LS) மொத்த கடன் நிதிக்கான தேவைக்கோடு (LD) யை வெட்டும் E புள்ளியில் சமநிலை வட்டிவீதம் OR தீர்மானிக்கப்படும்.

**திறனாய்வு:**

- சேமிப்பு, முதலீடு போன்ற உண்மைக் காரணிகளை வங்கிக்கடன், நீர்மை விருப்பம் ஆகிய பணக்காரணிகளுடன் தொடர்புபடுத்துதல் கடினம்.
- வருமான அளவு தெரியாமல் கடன்நிதியை தீர்மானிக்க முடியாது.




66. **எச்ச உரிமை கூலிக் கோட்பாட்டை விவரி.**

**எச்ச உரிமை கூலிக் கோட்பாடு – வாக்கர்.**

- எச்ச உரிமை கூலிக் கோட்பாட்டை வழங்கியவர் வாக்கர் (அமெரிக்கா).
- வாக்கர் அரசியல் பொருளாதாரம் (1875) என்ற நூலில் இதனை விளக்கினார்.
- நிலம், மூலதனம், அமைப்பு போன்ற உற்பத்திக் காரணிகளுக்கு வெகுமதிகளை வழங்கியது போக எஞ்சியுள்ள பகுதியே கூலி – வாக்கர்.
- வாரம், வட்டி, இலாபம் ஆகியவற்றை வழங்கிய பிறகு எஞ்சியிருப்பதே கூலி.

**குறைபாடுகள்:**

- தொழிற் சங்கங்களின் பங்கினை இக்கோட்பாடு விளக்க தவறிவிட்டது.
- உழைப்பின் தேவைப் பக்கம் புறக்கனிக்கப்பட்டுள்ளது.
- எஞ்சியிருப்பதை பெறுவது தொழில் முனைவோர் தான் உழைப்பாளர் அல்ல.





www.Padasalai.Net

67. **கூலிநிதிக் கோட்பாட்டை விளக்குக.**

**கூலி நிதிக் கோட்பாடு – J.S.மில்**

- கூலி நிதிக் கோட்பாட்டை முதலில் கூறியவர் **ஆடம்ஸ்மித்,** வளமை படுத்தியவர் **J.S.மில்**.
- உற்பத்தியாளர்கள் உழைப்பாளிகளுக்கு கூலி வழங்க வைத்திருக்கும் மூலதனத்தன் பகுதியே கூலி நிதி.
- கூலி நிதியின் அளவு நிலையானது. கூலி நிதியோடு கூலி நேர்மறை தொடர்புடையது.
- கூலி உழைப்பளர்களின் எண்ணிக்கையுடன் எதிர்மறை தொடர்புடையது.
- உழைப்பாளரின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது கூலி குறையும்.
- உழைப்பாளரின் எண்ணிக்கை குறையும் எனில் கூலி அதிகரிக்கும்.

- உழைப்பாளியின் சராசரி கூலி $= \frac{\text{மொத்த கூலிநிதி}}{\text{உழைப்பாளரின் எண்ணிக்கை}}$

68. **நிலையற்ற தன்மை தாங்கும் இலாப கோட்பாட்டை விளக்குக.**

**நிலையற்ற தன்மை தாங்கும் இலாப கோட்பாடு – நைட்**

- நிச்சயமற்ற தன்மைகளை தாங்குவதற்கான வெகுமதியே இலாபம்.
- **காப்பீடு இடர்பாடுகள்:**
- சில இடர்பாடுகளை கணக்கிட்டு அளவிட முடியும்.
- **உதாரணம்:** தீ விபத்து, வெள்ளம், கொள்ளை. கலவரம்
- இவைகளுக்கு எதிராக காப்பீடு செய்வதன் மூலம் இழப்பீட்டை பெற முடியும்.
- **காப்பீடற்ற இடர்பாடுகள்:**
- சில இடர்பாடுகளை கணக்கிட்டு அளவிட முடியாது.
- **உதாரணம்:** போட்டி, சந்தை நிலை, தொழில்நுட்ப மாற்றம், அரசின் கொள்கைகள்.
- இவைகளுக்கு எதிராக காப்பீடு செய்ய முடியாது.
- எதிர்பார்க்க முடியாத, கணக்கிட்டு அளவிட முடியாத மற்றும் காப்பீடு செய்ய முடியாத நிலையற்ற தன்மையின் சுமைகளை தாங்குவதற்கான வெகுமதியே இலாபம் – **நைட்.**

69. **இந்திய பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விளக்குக.**

**இந்திய பொருளாதாரத்தின் வலுவான அம்சங்கள்:**

- **இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரம்:**
- இந்தியா கலப்பு பொருளாதார முறையினை பின்பற்றுகிறது.
- அரசுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்படுவதே கலப்பு பொருளாதாரம்.
- **வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது:**
- இந்தியாவில் சுமார் 60% மக்கள் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களை வாழ்வாதரமாக கொண்டுள்ளனர்.
- இந்தியாவில் 17% GDP வேளாண்மை துறையில் இருந்து கிடைக்கிறது.
- **வளர்ந்து வரும் சந்தை:**
- இந்தியா வேகமாக வளர்ந்து வரும் சந்தையாக மாறி இருக்கிறது.
- இந்தியா குறைந்த முதலீட்டில் அதிகமான வளர்ச்சி சாத்தியங்களை கொண்டுள்ளது.
- **வளர்ந்துவரும் பொருளாதாரம்:**
- உலக நாடுகளின் GDP யில் இந்தியா ஏழாவது இடத்தை பெற்றுள்ளது.
- வாங்கும் சக்தியில் மூன்றாம் இடத்தை பெற்றுள்ளது.
- விரைவான பொருளாதார வளர்ச்சியின் காரணமாக G 20 நாடுகளில் இந்தியா உள்ளது.
- **வேகமாக வளரும் பணிகள் துறை:**
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பணிகள் துறையின் பங்கு அதிகரித்துள்ளது.
- தகவல் தொழில்நுட்பம், BPO போன்ற தொழில்நுட்ப சேவைகள் அதிக வளர்ச்சியை பெற்றுள்ளது.
- **மக்கள் தொகை பகுப்பு:**
- இந்திய மனித வளம் அதிக அளவு இளைஞர்களை பெற்றுள்ளது.
- இந்திய இளைஞர்களின் திறமையினால் பொருளாதார வளர்ச்சி உச்சத்தை எட்டியுள்ளது.
- **நகரப் பகுதிகளின் விரைவான வளர்ச்சி:**
- இந்தியாவின் மேம்பட்ட போக்குவரத்து, தகவல் தொடர்பு, கல்வி மற்றும் சுகாதார வசதிகள் நகரபகுதிகளின் வளர்ச்சியை விரைவுபடுத்துகின்றன.
- **நிலையான பேரளவு பொருளாதாரம்:**
- உலக நாடுகளில் இந்தியா ஒரு நிலைத்த பேரளவு பொருளாதார நாடாகும்.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து வருகிறது.
- **பேரளவு உள்நாட்டு நுகர்ச்சி:**
- பொருளாதார வளர்ச்சியினால் மக்களின் வாழ்க்கை தரம், வாழ்க்கை முறை வளர்ச்சியடைந்துள்ளது.
- உள்நாட்டு நுகர்வு பொருட்களை வாங்குவது அதிகரித்து வருகிறது. உள்நாட்டு தொழில்கள் வளர்ச்சியடைந்துள்ளன.
- **வேகமாக வளரும் பொருளாதாரம்:**
- இந்தியப் பொருளாதாரம் அதிக நிலையான வளர்ச்சியினை கொண்டது.
- GDP யின் வேகமான வளர்ச்சி வேகமாக வளரும் நாடுகளுக்கிடையே இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது என்பதை நிருபிக்கிறது.





www.Padasalai.Net

70. **வாழ்நாள் எதிர்பார்ப்பு – குறிப்பு வரைக.**

**வாழ்நாள் எதிர்பார்ப்பு:**
- பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் அளவே வாழ்நாள் எதிர்பார்ப்பு.
- 2011 ன் படி இந்தியாவில் வாழ்நாள் எதிர்பார்ப்பு 63.5 வருடங்கள்.
- தற்போது இந்தியாவில் இறப்பு விகிதம் குறைந்ததால் வாழ்நாள் எதிர்பார்ப்பு காலம் அதிகரித்து வருகிறது.
- மற்றநாடுகளுடன் ஒப்பிடும் போது இந்தியாவில் வாழ்நாள் எதிர்பார்ப்பு குறைவாக உள்ளது.
- இறப்பு விகிதம் அதிகமாக இருக்கும் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு குறைவாக இருக்கும்.
- இறப்பு விகிதம் குறைவாக இருக்கம் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கும்.

71. **காந்திய பொருளாதார கருத்துகளை விவரி.**

**காந்திய பொருளாதார கருத்துகள்:**
- **கிராம குடியரசு:**
- உண்மையாக இந்தியா வாழ்வது நகரங்களிலோ புற நகரங்களிலோ இல்லை கிராமங்களில்.
- கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும்.
- **மக்கள் தொகை:**
- காந்தி செயற்கையான குடும்ப கட்டுப்பாடு முறைகளை எதிர்த்தார்.
- மக்கள் தொகையை கட்டுப்படுத்த சுயகட்டுப்பாடு, பிரம்மச்சாரியமே சிறந்தது என்று கூறினார்.
- **இயந்திரங்கள்:**
- காந்தி இயந்திரங்களை மிகப்பெரிய பாவம் என்று வர்ணித்தார்.
- இயந்திர மயமாதலை எதிர்த்த காந்தி அதன் தீமைகள் நம் இணக்கமான வாழ்வை முடிவுக்கு கொண்டுவரும் எனக் கூறினார்.
- இயந்திரங்களின் தீமைகள் மக்களுக்கு உணர்த்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.
- **உணவுப் பிரச்சனை:** • உணவுப் பொருட்களின் மீதான எந்த ஒரு கட்டுப்பாட்டையும் காந்தி எதிர்த்தார். அவை செயற்கை கட்டுப்பாடுகளை உருவாக்கும் என எச்சரித்தார்.
- **அறக்கட்டளை கோட்பாடு:** • தற்போதைய முதலாளித்துவ முறையை மாற்றி சமத்துவ சமூகத்தை உருவாக்குவதே காந்தியின் அறக்கட்டளை கோட்பாடாகும்.
- **மது விலக்கு:** • முழுமையான மதுவிலக்கை காந்தி வலியுறுத்தினார்.
- மது நமக்கு எந்த விதத்திலும் துணை செய்யாது மாறாக நோயை தரும்.
- இந்தியா குடிகாரர்களின் நாடாக இருப்பதை விட ஏழைகளின் நாடாக இருப்பதே மேல் – காந்தி.
- **தொழில்மயமாதல்:**
- தொழில்மயமாதல் மனித இனத்தின் சாபக்கேடு, நாட்டின் திறன்களை முழுவதும் சுரண்டுவதை தொழில்மயம் சார்ந்துள்ளது என கருதினார்.
- **உழைப்பு:**
- மனிதன் தனக்குத் தேவையான உணவை தன் உழைப்பால் பெறவேண்டும்.
- மனித உழைப்பு என்பது உடல் உழைப்பு என்பது காந்தியின் கருத்து.
- **உற்பத்தி பரவலாக்கம்:**
- உற்பத்தி பரவலாக்கப்பட வேண்டும், அநேக இடங்களில் சிறிய அளவில் உற்பத்தி நடைபெற வேண்டும்.
- வீடுகளில் உற்பத்தி நடைபெற வேண்டும் என்பது காந்தியின் கருத்து.

72. **பொருளாதார முன்னேற்ற கருத்துகளில் ஜவஹர்லால் நேருவின் பங்கை வெளிக்கொணர்க.**

**நேருவின் பொருளாதார கருத்துகள்:**
- **ஜனநாயகம் மற்றும் மதச்சார்பின்மை:**
- ஜனநாயகத்தை உறுதியாக நம்பியவர் நெரு.
- பேச்சுரிமை, குடிமக்கள் உரிமை, வாக்குரிமை, சட்டத்தின் வழி ஆட்சி ஆகியவற்றை நேரு நம்மினார்.
- மதசார்பின்மை இந்தியாவுக்கு நேரு அளித்த சிறப்பான பங்களிப்பு.
- **திட்டமிடுதல்:**
- திட்டமிடுதலை இந்தியாவில் அறிமுகப்படுத்தியவர் நேரு.
- ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைக்கு திட்டமிடுதல் அவசியம்.
- திட்டமிடுதலின் சாரம் என்பது என்பது மனித சக்தி வளங்கள், பணம் ஆகியவற்றை சிறந்த வழியில் பயன்படுத்துவதை குறிக்கும்.
- அறிவியல், ஆராய்ச்சி, தொழில்நுட்பம், தொழில்மயமாதல் மூலம் ஒரு நாடு தன்னை தானே வளர்ச்சியடைய செய்து தற்சார்பினை அடையும்.
- இந்திய தொழில்நுட்ப கழகம் நேரு பிரதமாராக இருந்த போது தொடங்கப்பட்டது.
- அறிவியல் மனப்பான்மையை வலியுறுத்தினார்.
- **ஜனநாய சமதர்மம்:**
- இந்தியாவிற்கு நேருவின் மிகப் பெரிய பங்களிப்பு சமதர்மம்.
- நேரு இந்தியாவை சமதர்ம சமூகமாக கட்டமைக்க விரும்பினார்.
- நேருவின் சமதர்மம் என்பது ஜனநாய சமதர்மமாகும்

73. **பிறப்பு வீதம் என்றால் என்ன?**

**பிறப்பு வீதம்:** ஒரு வருடத்தில் ஆயிரம் தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை.

74. **இறப்பு விகிதம் என்றால் என்ன?**

**இறப்பு விகிதம்:** ஆயிரம் மக்கள் தொகைக்கு இறப்பவர்களின் எண்ணிக்கையே இறப்பு விகிதம்.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

75. **இந்திய கனிம வளங்களின் முக்கியத்துவத்தை விவரி.**

**இந்திய கனிம வளங்கள்:**

• **இரும்புத்தாது:**
• ஹேமடைட், மேக்னடைட் இரும்புத் தாதுக்கள் இந்தியாவில் அதிக அளவில் கிடைக்கிறது.
• ஹேமடைட் அதிகமாக கிடைக்கும் இடங்கள் சத்திஸ்கர், ஜார்கண்ட், ஒடிசா, கோவா, கர்நாடகா.
• மேக்னடைட் கர்நாடகாவின் மேற்கு கடற்கரையில் அதிகம் கிடைக்கிறது.

• **நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி:**
• நிலக்கரி உற்பத்தியில் உலகில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
• வங்காளம், ஜார்கண்ட் மாநிலங்களில் அதிக அளவில் நிலக்கரி கிடைக்கிறது.
• தமிழ்நாட்டில் பழுப்பு நிலக்கரி நெய்வேலியில் அதிகமாக கிடைக்கிறது.

• **அலுமியத்தாது (பாக்சைட்) :**
• பாக்சைட் அலுமினியம் தயாரிக்கப் பயன்படும் முக்கியமான தாது.
• பாக்சைட் ஆந்திர பிரதேசம், ஒடிசாவின் கிழக்கு கடற்கரையிலும் செறிந்து காணப்படுகிறது.

• **மைக்கா:**
• மின் தடுப்பானக பயன்படும் மைக்கா தாள் உற்பத்தியில் இந்தியா உலகில் முதலிடத்தில் உள்ளது.
• பெக்காமைட் ஆந்திர பிரதேசம், ஜார்கண்ட், பீகார், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.

• **தங்கம்:** • இந்தியாவில் குறைந்த அளவே தங்கம் கிடைக்கிறது.
• இந்தியாவின் மூன்று முக்கிய தங்க சுரங்கங்கள் • கோலார் தங்கவயல் (கோலார் – கர்நாடகா)
• ஹட்டி தங்க வயல் (ரெய்சூர் – கர்நாடகா) • ராம்கிரி தங்கவயல் (அனந்தபூர் – ஆந்திரபிரதேசம்).

• **கச்சா எண்ணை:**
• இந்தியாவில் அஸாம், மற்றும் குஜராத்தின் பல இடங்களில் கச்சா எண்ணை எடுக்கப்படுகிறது.
• அஸாமில் கச்சா எண்ணை கிடைக்கும் பகுதிகள் டிக்பாய், பாடர்பூர், நாகர்காட்டிகா, காசிம்பூர், பள்ளியரியா.
• குஜராத்தில் கச்சா எண்ணை கிடைக்கும் பகுதிகள் காம்பே வளைகுடா, அங்கலேஸ்வர், காலோல்.

• **வைரம்:**
• மத்திய பிரதேசத்தில் பன்னாவிலும் ஆந்திர பிரதேசத்தில் ராமல்ல கோட்டா, நாராயணபேட், ராய்ப்பூர், இம்பர்லி மற்றும் கிருஷ்ணா நதி படுகையிலும் வைரம் கிடைக்கிறது.
• ஒடிஷாவில் நியுபடா, கர்நாடகாவில் ரெய்சூர், சட்டிஸ்கரில் பாஸ்டர் பகுதிகளில் வைரம் கிடைக்கிறது.

76. **பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.**

**பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கு:**

• **வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்:** சிறு தொழில்கள் இயந்திரங்களை விட அதிக அளவில் தொழிலாளர்களை பயன்படுத்துவதால் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கின்றன.
• **சமமான மண்டல வளர்ச்சி:** சிறு தொழில்கள் பின்தங்கிய மற்றும் கிராமப் பகுதிகளில் அமைவதால் சமமான மண்டல வளர்ச்சிக்கு உதவுகிறது.
• **உள்ளூர் வளங்களை பயன்படுத்துதல்:** சிறு தொழில்கள் உள்ளூர் வளங்களை முழுமையாக பயன்படுத்தி. குடும்பத்திறன்களை வளர்க்க உதவுகிறது.
• **மூலதன பயன்பாடு முழுமை பெறுதல்:** மூலதனம், காத்திருப்பு காலம் மற்றும் இடர்பாடுகள் சிறு தொழில்களில் மிகவும் குறைவாக இருப்பதால் மூலதனப் பயன்பாடு உத்தம அளவில் இருக்கும்.
• **ஏற்றுமதி அதிகரித்தல்:** சிறு தொழில்கள் கைவினை பொருட்களை வளர்த்தெடுத்து ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்து அந்நியச் செலாவணியை ஈட்டி தருகிறது.
• **பேரளவு தொழில்களுக்கு உதவுதல்:** சிறு தொழில் நிறுவனங்கள் பேரளவு தொழிற்சாலைகளுக்கு தேவையான உதிரி பாகங்களை உற்பத்தி செய்து உதவுகின்றன.
• **தொழில்முனைவோரை ஊக்குவித்தல்:** வேலை தேடுவோருக்கு சுய வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலம் சிறுதொழில்கள் தொழில்முனைவோரை ஊக்குவிக்கிறது.
• **நுகர்வோர் தேவைகளை நிறைவு செய்தல் :** சிறு தொழில் நிறுவனங்கள் நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்து குறைந்த விலையில் நுகர்வோருக்கு வழங்குகின்றன.
• **தேசிய வருமானம் அதிகரித்தல்:** பல்வேறு வழிகளில் சிறுதொழில்கள் தேசியவருமானம் தனிநபர், தலா வருமானத்தை அதிகரிக்க செய்து மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துகின்றன.

77. **நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக.**

**நிதி ஆயோக்:** • **National Institution for Transforming India.** (இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம்)
• இந்திய பிரதமரே நிதி ஆயோக்கின் தலைவர். • மத்திய அமைச்சர்கள் இதன் உறுப்பினர்கள்.
• திட்டக்குழுவிற்கு மாற்றாக **2015 ஜனவரி 1** ல் இது அமைக்கப்பட்டது. • துணைத் தலைவரே இதன் நிர்வாகத் தலைவர்
• இந்திய அரசின் திட்டங்களையும் கொள்கைகளையும் கண்காணிக்கும் அறிவு மையமே நிதி ஆயோக்.
• நீடித்த நிலையான வளர்ச்சியை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைத்து செயல்படுத்த அமைக்கப்பட்டது.
• தேசிய சர்வதேச பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நடைமுறை கொள்கைகளை உருவாக்கி செயல்படுத்தும்.

78. **தமிழ் நாட்டில் விமான நிலையங்கள் உள்ள இடங்கள் யாவை?**

• **தமிழ்நாட்டில் பன்னாட்டு விமான நிலையங்கள் உள்ள இடங்கள்:** சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி.
• **தமிழ்நாட்டில் உள்நாட்டு விமான நிலையங்கள் உள்ள இடங்கள்:** தூத்துக்குடி, சேலம், மதுரை.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

79. **வணிக வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை?**
**வணிக வங்கிகள் தேசியமயமாக்கப் பட்டத்தற்கான காரணங்கள்**:
- சமூக நலத்தை அடைதல்.
- கிராமப்புற மக்களிடையே வங்கி செயல்பாடுகளை ஊக்குவித்தல்.
- கிராம மற்றும் பின்தங்கிய பகுதிகளில் வங்கி கிளைகளை தொடங்கி வளர்ச்சியடைய செய்தல்.
- தனியாரிடம் இருந்த வணிக வங்கிகள் அரசு திட்டங்கள், சமூக நலத்திற்கு உதவிகள் செய்ய தவறின.
- வட்டாரங்களுக்கிடைய இருந்த ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்.
- வங்கி தொழிலில் தனியார் முற்றுரிமையை தவிர்த்தல்.
- வேளாண்மை, சிறு – குடிசை தொழில்களுக்கு தேவையான கடன்களை சுலபமாக வழங்குதல்.
- பொது சேமிப்பு சமூக விரோத செயல்களுக்கு பயன்படுவதை தடுத்தல்.
- அதிகாரமும் சொத்தும் ஒரே இடத்தில் குவிதலை தடுத்தல்.

80. **வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதை சுருக்கமாக எழுதுக.**
- 1969 ஜூலை 19 இல் 50 கோடிக்கு மேல் வைப்புத் தொகை கொண்ட 14 வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.
- 1980 ஏப்ரல் 15 இல் 200 கோடிக்கு மேல் வைப்புத் தொகை கொண்ட 6 வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

81. **சிறு பிளவு ஆண்டு குறிப்பு வரைக?**
**சிறு பிளவு ஆண்டு**(1951)
- 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1.33 இல் இருந்து 1.25 ஆக குறைந்து.
- எனவே 1951 ஆம் ஆண்டு சிறு பிளவு ஆண்டு என அழைக்கப்படுகிறது.

82. **பாலின விகிதம் – பற்றி குறிப்பு வரைக.**
**பாலின விகிதம்**:
- ஆயிரம் ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையே பாலின விகிதம்.
- இந்தியாவின் பாலின விகிதம் 2011 ன் படி 940.
- 2011 ன் படி பாலின விகிதம் மிக குறைவாக உள்ள மாநிலம் ஹரியான (877)
- 2011 ன் படி பாலின விகிதம் அதிகமாக உள்ள மாநிலம் கேரளா (1084).

83. **மக்கள் தொகை அடர்த்தி – குறிப்பு வரைக.**
**மக்கள் தொகை அடர்த்தி**:
- ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையே மக்கள் தொகை அடர்த்தி.
- 2011 படி இந்தியாவின் மக்கள் தொகை அடர்த்தி 382.
- மக்கள் தொகை அடர்த்தி மிக குறைவாக உள்ள மாநிலம் அருணாச்சல பிரதேசம் (17 நபர்கள்).
- மக்கள் தொகை அடர்த்தி அடர்த்தி அதிகமாக உள்ள மாநிலம் பீகார் (1102 நபர்கள்).

82. **புதுப்பிக்க கூடிய ஆற்றல் வளங்கள் என்றால் என்ன?**
**புதுப்பிக்க கூடிய ஆற்றல் வளங்கள்**:
- மீண்டும் மீண்டும் உருவாக்கப்படக் கூடிய ஆற்றல் மூலங்களே புதுப்பிக்க கூடிய ஆற்றல் வளங்கள்.
இவை தீர்ந்து போகாதவை. **உதாரணங்கள்**: சூரிய ஆற்றல், காற்றாற்றல், கடலலை ஆற்றல், புவி வெப்ப சக்தி, உயிரி சக்தி.

83. **எழுத்தறிவு விகிதம் பற்றி குறிப்பு வரைக.**
**எழுத்தறிவு விகிதம்**:
- மொத்த மக்கள் தொகையில் எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை விகிதம்.

**2011 ன் படி இந்தியாவின் எழுத்தறிவு பற்றிய விவரங்கள்**:
- இந்தியாவின் ஒட்டுமொத்த எழுத்தறிவு விகிதம் 74.04
- இந்தியாவில் அதிக எழுத்தறிவு விகிதம் பெற்ற மாநிலங்கள்
கேரளா (94), மிசோரம் (91.3) கோவா (88.7).
- இந்தியாவில் குறைவான எழுத்தறிவு விகிதம் பெற்ற மாநிலம் பீகார் (61.8).
- சராசரியாக இந்தியாவில் ஆறில் ஒருவர் மட்டுமே எழுத்தறிவு பெற்றவர்.

84. **பசுமைப் புரட்சி என்றால் என்ன?**
**பசுமைப் புரட்சி**:
1960 க்கு பிறகு இந்திய வேளாண்மையில் செயல்படுத்தப்பட்ட வீரிய ஒட்டு விதைகள், புதிய தொழில்நுட்பம், மேம்பட்ட வேளாண்மை செயல்முறைகள், ஒருங்கிணைந்த நீர்பாசன வளர்ச்சி திட்டங்களின் விளைவால் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற செயல்பாடுகளே பசுமைப் புரட்சி.

85. **இரண்டாவது பசுமைப் புரட்சிக்கான தேவைகள் யாவை?**
**இரண்டாவது பசுமைப் புரட்சிக்கான தேவைகள்**:
- உற்பத்தியை அதிகரிக்க மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை அறிமுகம் செய்தல்.
- மரபணு மாற்ற விதைகளை சந்தைப்படுத்த தனியார் துறையின் பங்கேற்பை உறுதி செய்தல்.
- பாசன வசதிகளை துரிதப்படுத்துவதிலும், நீர் ஆதாரங்களை நிர்வகிப்பதிலும் அரசு முக்கிய பங்கு வகித்தல்.
- நதிநீர் இணைப்பு மூலம் உபரி நீரை பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு பகிர்ந்தளித்தல்.

86. **குறு உற்பத்தி நிறுவனங்கள் – வரையறு.**
**குறு உற்பத்தி நிறுவனம்**: தொழிற்சாலை மற்றும் உற்பத்தி உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் 25 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் அது குறு உற்பத்தி நிறுவனமாகும்.





www.Padasalai.Net

87. **இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை விவரி.**
**இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகள்**:

| திட்டம் | நோக்கம் / மாதிரி | வளர்ச்சி இலக்கு | பெற்ற இலக்கு | செயல்பாடுகள் |
|---|---|---|---|---|
| முதல் ஐந்தாண்டுத்திட்டம் (1951– 1956).. | வேளாண்மையை முன்னேற்றுதல். ஹாரேட் டாமர் மாதிரி. | 2.1 | 3.6 | மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல். |
| இரண்டாம் ஐந்தாண்டுத்திட்டம் (1956 – 1961) | விரைவான தொழில்மயமாதல். மஹல நோபிஸ் மாதிரி. | 4.5 | 4.1 | அடிப்படை மற்றும் கனரக தொழில் வளர்ச்சி. |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961 –1966.) | சுதந்திரமான பொருளாதாரம், சுய முன்னேற்றம். காட்கில் திட்டம். | 5.6 | 2.2 | தோல்விக்கான காரணம் சீன – இந்திய போர். |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (1969 –1974) | நிலையான வளர்ச்சி, தற்சார்பு அடைதல். | 5.7 | 3.3 | 14 வணிக வங்கிகள் நாட்டுடைமை. பசுமை புரட்சி. |
| ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974 –1979) | வறுமை ஒழிப்பு மற்றும் சமூகநீதி டி.பி. தார் தயாரித்தார். | 4.4 | 4.8 | இருபது அம்ச திட்டம். குறைந்த பட்ச தேவைகள் திட்டம். |
| ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் (1980 –1985) | வறுமை ஒழிப்பு மற்றும் தற்சார்பு | 5.2 | 5.7 | நபார்டு வங்கி தொடக்கம். |
| ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் (1985 –1990) | தன்னிறைவு பொருளாதாரம். வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் | 5.0 | 6.0 | தனியார் துறைக்கு முன்னுரிமை. |
| எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1992 –1997) | வேலைவாய்ப்பு, கல்வி, சமூகநலம். | 5.6 | 6.8 | புதிய பொருளாதார கொள்கை. |
| ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் (1997 –2002) | சமூகநீதியுடன் கூடிய சமமான வளர்ச்சி | 7.0 | 5.6 | வேலைவாய்ப்பை அதிகரிக்க பொது, நிலையான விலையுடன் வளர்ச்சி |
| பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (2002 –2007) | சமத்துவம் மற்றும் சமூகநீதி. தலா வருமானத்தை இரண்டு மடங்கு உயர்த்துதல். | 8.0 | 7.2 | இலாபகரமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல். |
| பதினொறாவது ஐந்தாண்டுத் திட்டம் (2007 – 2012) | விரைவான அதிகமான உள்ளடக்கிய வளர்ச்சி | 8.1 | 7.9 | சுற்றுச்சூழல் நிலைத்த தன்மை. கல்வி மற்றும் திறன் மேம்பாடு. |
| பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (2012 –2017) | விரைவான அதிகமான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி | 8 | 7.8 | பாலின மற்றும் சமூக இடைவெளியை நீக்குதல். |

88. **பசுமைப் புரட்சி என்றால் என்ன? அதன் சாதனைகள் யாவை?**
**பசுமைப் புரட்சி**:
1960 க்கு பிறகு இந்திய வேண்மையில் செயல்படுத்தப்பட்ட வீரிய ஒட்டு விதைகள், புதிய தொழில்நுட்பம், மேம்பட்ட வேளாண்மை செயல்முறைகள், ஒருங்கிணைந்த நீர்பாசன வளர்ச்சி திட்டங்களின் விளைவால் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற செயல்பாடுகளே பசுமைப் புரட்சி.
**பசுமைப் புரட்சியின் சாதனைகள்**:
- கோதுமை மற்றும் நெல் போன்ற பயிர்களின் உற்பத்தி பல மடங்கு பெருகியது.
- அதிக விளைச்சல் தரக்கூடிய நெல், கோதுமை, மக்காச்சோளம். சோளம் ஆகிய பயிர்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.
- வணிகப் பயிர்களான கரும்பு, பருத்தி, சணல், உருளை கிழங்கு மற்றும் எண்ணை வித்துகளின் உற்பத்தியை அதிகரித்தது.
- பசுமைப் புரட்சி வேளாண்மை கருவிகளை உற்பத்தி செய்யும் தொழில்கள் வளர நேரடி காரணமாக அமைந்தது.
- கிராம மக்களுக்கு அதிக வேலைவாய்ப்பை வழங்கியதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தியது.
- பலவகை பயிர்வளர்ப்பு முறை மற்றும் வேதி உரங்கள் பயன்பாடு அதிகரித்தது.
- வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலம் நிதி ஆதாரங்கள் வழங்கப்பட்டன.
- பசுமைப் புரட்சியின் மறு பெயர்கள் புதிய வேளாண் யுத்தி, புதிய வேளாண் தொழில் நுட்பம், விதை – உரங்கள் – தண்ணீர் தொழில்நுட்பம்.

89. **நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் – வரையறு.**
**நடுத்தர உற்பத்தி நிறுவனம்**: தொழிற்சாலை மற்றும் உற்பத்தி உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் ஐந்து கோடிக்கு அதிகமாகவும் பத்துக் கோடிக்கு மிகாமலும் இருந்தால் அது நடுத்தர உற்பத்தி நிறுவனம்.

90. **சுழல் திட்டம் குறிப்பு வரைக.**
**சுழல் திட்டம்**:
- 1978 –79 ஆம் ஆண்டு சுழல்திட்டம் தொடங்கப்பட்டது.
- ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் நீக்கப்பட்ட பிறகு சுழல் திட்டம் தொடங்கப்பட்டது.
- ஜப்பன் திட்டம் என்று அழைக்கப்பட்டது,
- சிறு, குடிசை தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கியது.

91. **சிறு உற்பத்தி நிறுவனங்கள் – வரையறு.**
**சிறு உற்பத்தி நிறுவனம்**: தொழிற்சாலை மற்றும் உற்பத்தி உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் 25 இலட்சத்திற்கு அதிகமாகவும் ஐந்து கோடிக்கு மிகாமலும் இருந்தால் அது சிறு உற்பத்தி நிறுவனம்.



www.Padasalai.Net

90. **2015 – 2020 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி – இறக்குமதிக் கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.**

**2015 – 2020 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி – இறக்குமதிக் கொள்கையின் சிறப்பியல்புகள்**:

- புதிய அயல்நாட்டு வாணிபக் கொள்கை 2015 ஏப்ரல் 1 ல் அறிமுகம் செய்யப்பட்டது.
- **நோக்கங்கள்**: • ஏற்றுமதி சூழல்களை மேம்படுத்துதல். • உற்பத்தியை அதிகரிக்கச் செயதல். • இந்தியாவில் தயாரிப்பு, • மின்னணு இந்தியா.

**சிறப்பியல்புகள்**:

- ஏற்றுமதி உதவிகளை குறைத்து இந்திய பொருட்களை ஊக்குவிக்க **இந்திய தயாரிப்பு** என்ற கருத்து உருவாக்கப்பட்டது.
- டிஜிட்டல் இந்தியா முறைப்படி வரித்தாக்கல், முத்திரைத்தாள் கட்டணம் செலுத்த கைபேசி செயலியை உருவாக்குதல்.
- பட்டயக் கணக்காளர், கணக்கு காசாளர்களால் மின்னணு முறையில் கையொப்பமிடப்பட்ட ஆவணங்களை தயாரித்தல்.
- ஏற்றுமதி, இறக்குதியாளர்கள் தங்களது சுயவிவர ஆவணங்களின் அசல் நகல்களை மீண்டும் மீண்டும் ஒப்படைக்க வேண்டிய அவசியமில்லை.
- பாதுகாப்பு, இராணுவக் கிடங்கு, விண்வெளி, அணுசக்தி போன்ற கோரிக்கைகளுக்கு கால அளவு 24 மாதங்கள்.
- உலக வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கை இருமடங்காக உயர்த்துதல்.

91. **தொழிற் கொள்கை தொடர்பாக இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்குக.**

**தொழிற் கொள்கை தொடர்பாக இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்**:

- **தொழில் உரிம விலக்களித்தல்**:
- 1991 ஆம் ஆண்டு புதிய தொழிற் கொள்கை தொழிலுக்கு உரிமம் பெறுவதில் இருந்து விலக்களித்தது.
- சிவப்பு நாடா முறை, மெத்தனம் மற்றும் காலதாமதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.
- **தொழில் துறையில் உள்ள ஒதுக்கீட்டை நீக்குதல்**:
- அணுசக்தி, சுரங்கம், இரயில்வே துறைகள் மட்டும் அரசுக்கு ஒதுக்கப்பட்டன.
- மற்ற துறைகளின் கட்டுபாடுகள் நீக்கப்பட்டு தனியாருக்கு திறந்து விடப்பட்டன.
- **பொதுத்துறை சார்பான சீர்திருத்தங்கள்**:
- நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைத்தல்.
- திறமையாக இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு தன்னாட்சி வழங்குதல்.
- முதலீட்டுக் குறைப்புக் கொள்கை மூலம் பொதுத்துறையை மாற்றி அமைத்தல்.
- **முற்றுரிமை வாணிப கட்டுப்பாட்டுச் சட்டத்தை ஒழித்தல்**:
- முற்றுரிமை வாணிப கட்டுப்பாட்டுச் சட்டம் நீக்கப்பட்டது.
- பொருளாதார போட்டிகளை கண்காணிக்க 2010 ல் போட்டிக்குழு அமைக்கப்பட்டது.
- இது தனியார் துறையில் போட்டியை ஏற்படுத்தவும் வெளிநாட்டு நிறுவனங்களை ஈர்க்கவும் உதவியது.
- **அயல் நாட்டு முதலீட்டுக் கொள்கை**:
- வெளிநாட்டு நேரடி முதலீடு, வெளிநாட்டு தொகுப்பு முதலீடு மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்பம் போன்றவைகளுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளித்தல்.
- 1991 ல் 51 சதவீத பங்குகள் வரை அயல்நாட்டு நேரடி முதலீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன் அளவு பின்னர் 74 சதவீதமாகவும், பின்னர் 100 சதவீதமாகவும் மாற்றப்பட்டது.
- பன்னாட்டு முதலீடு ஊக்குவிப்பு வாரியம் அமைக்கப்பட்டது.

87. **திட்ட விடுமுறை காலம் குறிப்பு வரைக.**

- திட்ட விடுமுறை காலம் 1966 –1969 • இக்காலத்தில் ஓராண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.
- வேளாணமை, வேளாண்மை சார்ந்த துறைகள் மற்றும் தொழில்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- இந்தியா – பாகிஸ்தான் போர் மற்றும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டதின் தோல்வியே திட்ட விடுமுறைக்கான காரணம்.

88. **ஊரக கடன் சுமை பற்றி குறிப்பு வரைக.**

**ஊரக கடன் சுமை**: குறிப்பிட்ட காலத்தில் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் ஊரக மக்களின் கடன் சுமை அதிகரித்து செல்வதே ஊரக கடன் சுமை.

89. **குடிசை தொழில்களின் சிறப்பியல்புகள் யாவை?**

**குடிசை தொழில்களின் சிறப்பியல்புகள்**:

- குடிசை தொழில்கள் பொதுவாக குடும்ப உறுப்பினர்களை கொண்டே நடத்தப்படுகிறது.
- குடிசை தொழில்கள் பரம்பரையாக செய்துவரப்படும் மரபுவழித் தொழில்கள்.
- பொதுவாக குடிசை தொழில்கள் வேளாண்மையை சார்ந்துள்ளன.
- மின் சக்தியின் உதவியின்றி அல்லது குறைந்த மின் சக்தியின் உதவியுடன் நடத்தப்படுகிறது.
- குடிசை தொழில்கள் உழைப்பு செறிவு மிக்கவை.
- உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருள்களை பயன்படுத்துகின்றன.
- உள்ளூர் சந்தையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்கப்படுகின்றன.
- பிற தொழில்களுக்கு தேவையான உதிரி பாகங்களை தயாரித்து வழங்குகின்றன.
- **உதாரணம் –** பாய் பின்னுதல், கயிறு திரித்தல், கூடைமுடைதல், கீற்று பின்னுதல், பீடி சுருட்டுதல், மட்பாண்டம் செய்தல்.

90. **தொழில் உரிமம் விலக்கு என்பதன் பொருள் யாது?**

**தொழில் உரிமம் விலக்கு**: • அரசின் கட்டுப்பாடுகள் மற்றும் தொழில் தொடங்க உரிமம் பெறுதலை நீக்கதல்.

- சிவப்பு நாடா முறை, மெத்தனம் மற்றும் காலதாமதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.





www.Padasalai.Net

92. **ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை விவரி.**

**ஊரக பொருளாதாரத்தின் பண்புகள்:**

- **ஊரகம் ஒரு நிறுவனம்:** • கிராமம் முதன்மை நிறுவனமாக செயல்பட்டு அனைத்து தேவைகளையும் நிறைவு செய்கிறது.
- ஊரக மக்கள் அனைவரும் மனித நேயத்துடன் ஒற்றுமையுடன் உணர்வுப்பூர்வமாக இருப்பர்.
- **வேளாண்மையை சார்ந்திருத்தல்:** • இயற்கை, வேளாண்மை, வேளாண்மை சார்ந்த தொழில்களை ஊரக பொருளாதாரம் சார்ந்துள்ளது.• ஊரக மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்கள்.
- **வேலைவாய்ப்பு:**
- ஊரக வேலையின்மையின் பிரதான இயல்பு பருவகால வேலையின்மை மற்றும் மறைமுக வேலையின்மை.
- **மக்கள் தொகை அடர்த்தி:**
- மக்கள் தொகை அடர்த்தி கிராமங்களில் மிகவும் குறைவாக இருக்கும். • வீடுகள் கிராமம் முழுக்க பரவி காணப்படும்.
- **வறுமை** :- அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய முடியாத நிலையே வறுமை.
- 2011 – 2012 மதிப்பீட்டின் படி 22 கோடி மக்கள் கிராமங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கின்றனர்.
- **ஊரக மக்களின் வாழ்க்கை முறை:** • ஊரக மக்களின் வாழ்க்கை முறை மிகவும் எளிமையானது.
- ஊரக மக்கள் மூட நம்பிக்கைகள், பாரம்பரிய கலாச்சார நடைமுறைகளை சார்ந்துள்ளனர்.
- ஊரக மக்களின் வாழ்க்கை தரம் ஏழ்மை நிலையிலும் பரிதாபமாகவும் உள்ளது.
- **கடன் சுமைகள்:**
- ஒரு இந்திய உழவன் கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்து, கடனிலே இறந்து, கடனையே சந்ததிகளுக்கு விட்டுச்செல்கிறான். சர். மால்கம் டார்லிங்.
- கிராம மக்கள் கடன் சுமையால் தற்கொலைக்கு ஆளாகின்றனர்.
- **குடிபெயர்ச்சி:** • ஊரக மக்கள் வேலை தேடி நகரத்திற்கு இடம் பெயருகின்றனர்.
- பகைமை, அடிப்படை வசதிகள் இன்மை போன்ற காரணங்களால் கிராம மக்கள் இடம் பெயருகின்றனர்.
- **ஏற்றத்தாழ்வு:** • ஊரகப் பகுதிகளில் வருமானம், சொத்து, செல்வம் ஆகியவற்றின் பகிர்வில் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது.
- நிலம், கால்நடை மற்றும் பிற சொத்துக்கள் ஒரு சிலரிடமே குவிந்துள்ளது.
- **சார்ந்திருத்தல்:** • ஊரக மக்கள் நகரத்தில் வேலை செய்யும் தமது குடும்ப உறுப்பினர்களின் வருவாயையும், அரசின் சமூக உதவிகளையும் பெருமளவு சார்ந்துள்ளனர்.
- **இரட்டைத் தன்மை:** • வளர்ந்த மற்றும் பின் தங்கிய நிலை, ஏழை மற்றும் பணக்காரன் போன்ற முரண்பபடான இரட்டை தன்மை ஊரக பொருளாதாரத்தில் காணப்படுகிறது.
- **ஊரக வருமானம்:** • ஊரகப் பகுதிகளில் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் மிகவும் குறைவாக கிடைப்பதால் அவர்களின் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைவாக உள்ளது.

**ஊரக கடனுக்கான காரணங்களை ஆராயக.**

**ஊரக கடன் சுமைகள்:**

- ஒரு இந்திய உழவன் கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்து, கடனிலே இறந்து, கடனையே சந்ததிகளுக்கு விட்டுச்செல்கிறான். சர். மால்கம் டார்லிங்.
- கிராம மக்கள் கடன் சுமையால் தற்கொலைக்கு ஆளாகின்றனர்.

**ஊரக கடனுக்கான காரணங்கள்:**

- **உழவர்களின் ஏழ்மை நிலை:**
- வேளாண்மை செய்ய, நுகர்வு, குடும்ப விழா, திருவிழா மற்றும் பண்டிகைக்காக உழவர்கள் கடன் பெறுகின்றனர்.
- ஏழ்மை நிலை, கடன் மற்றும் கடனுக்கான வட்டி போன்றவை உழவர்களை கடன் கொடுப்பவர்களின் கட்டுப்பாட்டில் வைக்கிறது.
- **பருவமழை பொய்த்தல்:**
- அடிக்கடி பருவமழை பொய்த்து போவதால் உழவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.
- வாங்கிய கடனை செலுத்தவும் அதற்கான வட்டியை செலுத்தவும் புதிய கடனை பெறுகின்றனர். இதனால் கடன்சுமை மேலும் அதிகரிக்கிறது.
- விவசாயம் சிறக்கும் காலங்களில் விவசாய பண்டங்களில் விலை குறைவதால் உழவர்களின் வருமானம் குறைகிறது.
- **வழக்குகள்:**
- நிலம் தொடர்பான வழக்குகளுக்கு செலவிட உழவர்கள் அதிகம் கடன் பெறுகின்றனர்.
- வழக்குகள் நீண்டகாலம் இழுக்கப்பட்டு அவர்களின் சேமிப்பு மற்றும் சொத்துகள் அழிக்கப்படுகின்றன.
- **வட்டிக்கு கடன் தருவோர், அதிக வட்டிவீதம்:**
- உள்ளூரில் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் அதிக வட்டி வசூலிப்பதுடன் வட்டியை அசலுடன் சேர்த்து அதிகரித்துக் கொண்டே செல்வதால் உழவர்கள் கடனில் மூழ்கும் நிலை உள்ளது.
- வட்டியோடு கடனை திருப்பி செலுத்த இயலாத நிலையில் ஊரக மக்களிடையே தற்கொலைகள் போன்ற தீய விளைவுகள் ஏற்படுகிறது.
- **பிற காரணங்கள்:** • இந்தியாவின் நிதி கட்டமைப்பு பலவீனமாக இருத்தல். • வேளாண்மை கருவிகளை வாங்குதல்.
- பண்டிகை கொண்டாட்டங்கள். • திடீர் மருத்துவ செலவு. • மதுபான நுகர்வு. • குறைவான அங்காடி வசதிகள்.
- வேலைவாய்ப்புகளில் தேக்கநிலை. • குறைவான வருமானம் போன்றவை ஊரக கடன் சுமைக்கான பிற காரணங்களாகும்.



www.Padasalai.Net

93. **ஊரக பொருளாதாரத்தின் சிக்கல்களை ஆராய்க**

**ஊரக பொருளாதாரத்தின் பிரச்சனைகள்: (சிக்கல்கள்)**

• **மக்கள் தொடர்புடைய பிரச்சனைகள்:**

எழுத்தறிவின்மை, போதிய தொழில்நுட்ப அறிவின்மை, நம்பிக்கை குறைவு, பற்றுகள், குறைவான வாழ்க்கைத்தரம் போன்றவை மக்கள் தொடர்புடைய பிரச்சனைகள்.

• **வேளாண்மை தொடர்புடைய பிரச்சனைகள்:**

உள்ளீடுகள் கிடைக்காமை, அங்காடிப்படுத்தும் வசதிகள் குறைவு, பன்முகத் திறன் கொண்ட பணியாளர்கள் இன்மை, நிலங்கள் துண்டாடப்படுதல், உள்கட்டமைப்பு வசதிகள் இன்மை, விழிப்புணர்வு இன்மை முதலியவை வேளாண்மை தொடர்புடைய பிரச்சனைகள்.

• **உள் கட்டமைப்பு சார்ந்த பிரச்சனைகள்:**

ஊரக பகுதிகளில் உள் கட்டமைப்பு வசதிகளான நீர், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், தகவல் தொடர்பு, பண்டக சேமிப்பு வசதி, வங்கி, காப்பீடு போன்ற வசதிகள் போதுமானதாக இல்லை.

• **பொருளாதாரம் சார்ந்த பிரச்சனைகள்:**

• நலிவடைந்த தொழில்கள், குறைவான வருமானம், கடன் சுமை, செல்வ வருமான ஏற்றத்தாழ்வு.
• நவீன உள்ளீடுகளை பயன்படுத்த இயலாமை போன்றவை பொருளாதாரம் சார்ந்த பிரச்சனைகள்.

• **நிர்வாகம் சார்ந்த பிரச்சனைகள்:**

அரசியல் தலையீடு, ஊக்கமின்மை, ஆர்வமின்மை, குறைந்த கூலி, சிறந்த தலைமை இன்மை, வரவு – செலவு கணக்குகளை முறையாக பயன்படுத்தாமை ஆகியவை நிர்வாகம் சார்ந்த பிரச்சனைகள்.

• **தலைமை சார்ந்த பிரச்சனைகள்:**

தகுதியற்ற செயல்படாத நபர்கள் தலைமை பொறுப்பில் இருத்தல், சுய விருப்புடன் செயல்படும் தலைவர்கள், குறைந்த பேரசக்தி ஆற்றல், திறமையை மறுத்தல், அரசியல் தலைவர்களின் தலையீடு போன்றவை தலைமை சார்ந்த பிரச்சனைகள்.

• **சமூக மற்றும் கலாச்சாரம் சார்ந்த சிக்கல்கள்:**

• ஊரக பகுதிகளில் ஜாதிமுறை இன்றளவும் மாறாமல் உள்ளது.
• ஆதிக்க ஜாதியினர் பெருமளவு சொத்துக்களுடன் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக உள்ளனர்.
• வகுப்பு மற்றும் சாதி சார்ந்த சுரண்டல்கள் ஊரக பகுதிகளில் உச்சத்தில் உள்ளது.
• வறுமை, ஊட்டச்சத்து குறைவு, குழந்தை திருமணம், கலப்பு திருமணம், பெண்சிசு கொலை போன்றவை மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

94. **மக்கள் தொகையின் தரம் சார்ந்த சிறப்பியல்புகளை விவரி.**

**மக்கள் தொகையின் தரம் சார்ந்த சிறப்பியல்புகள்:**

• **மக்கள் தொகை அடர்த்தி:** • ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பளவில் வாழும் மக்களின் எண்ணிக்கை.
• தமிழகத்தின் மக்கள் தொகை அடர்த்தி 2011 ன் படி 555 .
• மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு இந்திய அளவில் 12 வது இடத்தில் உள்ளது.

• **நகரமயமாதல்:** • தமிழத்தின் நகரமயமாதலின் சராசரி அளவு 48.4
• இந்திய நகர மக்கள்தொகையில் தமிழகம் 9.61 சதவீதத்தை பெற்றுள்ளது.
• இந்திய மக்கள் தொகையில் 6 சதவீதத்தை தமிழநாடு பெற்றுள்ளது.

• **பாலின விகிதம்:** • சமச்சீர் பாலின விகிதம் பெண்களின் வாழ்வியல் மேம்பாட்டை குறிக்கும்.
• தமிழ்நாட்டின் பாலின விகிதம் 995.
• தமிழகம் பாலின விகிதத்தில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

• **குழந்தை இறப்பு விகிதம்:** • ஐந்து வயது பூர்த்தியடையும் முன் ஆயிரம் குழந்தைகளுக்கு இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையே குழந்தை இறப்பு விகிதம்.
• 2016 ஆம் ஆண்டில் தமிழகத்தின் குழந்தை இறப்பு விகிதம் 17.
• தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு வீதம் பிற மாநிலங்களை விட குறைவாக உள்ளது.

• **வாழ்நாள் எதிர்பார்பு காலம்:** • சராசரியாக ஒரு நபரின் எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் அளவே ஆயுட்காலம்.
• வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்திய மக்களின் சராசரி ஆயுட்காலம் குறைவாக உள்ளது.
• இந்திய மக்களின் சராசரி ஆயுட்காலம் 67. 9 ஆண்டுகள்.
• தமிழக மக்களின் சராசரி ஆயுட்காலம் 70.6 ஆண்டுகள்.

• **மகப்பேறு இறப்பு விகிதம்:** • ஒரு இலட்சம் மகப்பேறில் இறக்கும் தாய்மார்களின் எண்ணிக்கையே மகப்பேறு இறப்பு விகிதம்.
• இந்தியாவின் மகப்பேறு இறப்பு விகிதம் 159.
• தமிழகத்தின் மகப்பேறு இறப்பு விகிதம் 79.
• மகப்பேறு இறப்பு வீதத்தில் தமிழ்நாடு இந்திய அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

• **எழுத்தறிவு நிலை:**
• 2011 ன் படி தமிழ்நாட்டின் எழுத்தறிவு விகிதம் 80.33
• அதிக எழுத்தறிவு பெற்ற மாவட்டங்கள் கன்னியாகுமரி (92.4), மற்றும் சென்னை (90.33)

www.Padasalai.Net

95. **<u>தமிழ்நாட்டின் பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விளக்குக.</u>**

**<u>தமிழ்நாட்டின் ஆற்றல் வளங்கள்</u>:**

• **<u>புனல்(நீர்) மின் ஆற்றல்</u>:**
- தமிழ் நாட்டில் 20 க்கும் மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளன.
- பைகாரா, குந்தா, மேட்டூர், மரவகண்டி, பார்சன் வேலி, பரப்பிக்குளம், பாபநாசம், மேயார், ஆழியார், கோதையார், பெரியார், சுருளியார் போன்றவை முக்கிய நீர் மின்நிலையங்களாகும்.

• **<u>சூரிய சக்தி ஆற்றல்</u>:**
- தென் தமிழகம் சூரிய மின் சக்தி திட்டங்களை செயல்படுத்த உகந்த மண்டலமாக உள்ளது.
- திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி, சிவகங்கை மாவட்டங்களில் சூரிய மின் சக்தி நிலையங்கள் உள்ளன.

• **<u>காற்றாலை ஆற்றல்</u>:**
- தமிழ்நாடு அதிக அளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பை பெற்றுள்ளது.
- தமிழ்நாட்டின் முக்கிய காற்றாலை மின் நிலையங்கள் கயத்தாறு, ஆரல்வாய்மொழி, முப்பந்தல், நாங்குநேரி, கல்தான்பேட்டை, பனங்குடி.

• **<u>அணு மின் ஆற்றல்</u>:**
- தமிழ்நாட்டின் முக்கிய அணுமின் நிலையங்கள் கல்பாக்கம், கூடங்குளம்.
- அணுக்களை பிளக்கும் போது வெளிப்படும் மிகுந்த வெப்பமே அணுசக்தி ஆற்றல்.

• **<u>கடல் அலை ஆற்றல்</u>:**
- உயர் ஒத அலைகளின் சக்தியை கொண்டு விசை சுற்று கலன்களை சுழற்றி மின் ஆற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது.
- தூத்துக்குடி மாவட்டம் குலசேகரபட்டினம் என்ற இடத்தில் கடல் அலை மின்சக்தி நிலையம் உள்ளது.

• **<u>அனல் மின் ஆற்றல்</u>:**
- அனல் மின் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.
- டீசல் அனல் மின் உற்பத்தியில் 34 சதவீதத்திற்கும் மேலாக உற்பத்தி செய்து தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.
- தமிழ்நாட்டின் முக்கிய அனல்மின் நிலையங்கள் வட சென்னை, எண்ணூர், மேட்டூர், நெய்வேலி, தூத்துக்குடி.

96. **<u>தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.</u>**

**<u>தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து</u>:**

• **<u>சலை போக்குவரத்து</u>:**
- சாலை போக்குவரத்தில் தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டில் 28 தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன.
- தமிழ்நாட்டின் மொத்த சாலையின் நீளம் 1,67,000 கி.மீ
- தங்க நாற்கரத் திட்டத்தின் முனையாக தமிழ்நாடு உள்ளது.
- ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையம் சென்னை கோயம்பேட்டில் உள்ளது.
- தமிழ்நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய பேருந்து நிலையம் ஈரோட்டில் உள்ளது.
- தமிழ்நாடு மாநில போக்குவரத்து கழகங்கள் பேருந்துகளை இயக்குகின்றன.

• **<u>இரயில் போக்குவரத்து</u>:**
- தமிழ்நாட்டில் உள்ள இருப்பு பாதையின் மொத்த நீளம் 6693 கீ.மீ.
- தமிழ்நாட்டில் 690 இரயில் நிலையங்கள் உள்ளன.
- ஆறு பிரிவுகளை கொண்ட தெற்கு இரயில்வேயின் தலைமையிடம் சென்னை.
- சென்னையில் மேம்படுத்தப்பட்ட அதி விரைவு மெட்ரோ இரயில் போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் முக்கிய தொடர் வண்டி நிலையங்கள் சென்னை, கோயம்புத்தூர். ஈரோடு, மதுரை, சேலம், திருச்சி.

• **<u>வான்வழி போக்குவரத்து</u>:**
- இந்தியாவில் மும்பை, டெல்லியை அடுத்து மூன்றாவது பெரிய பன்னாட்டு விமான நிலையம் சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம்.
- தமிழ்நாட்டில் பன்னாட்டு விமான நிலையங்கள் உள்ள இடங்கள்: சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி.
- தமிழ்நாட்டில் உள்நாட்டு விமான நிலையங்கள் உள்ள இடங்கள்: சென்னை(காமராஜர்), தூத்துக்குடி, சேலம், மதுரை.
- வான்வழி போக்குவரத்து ஒவ்வொரு ஆண்டும் 18 சதவீதம் வளர்ச்சியடைகிறது.
- இத் துறையின் சிறப்பான செயல்பாட்டால் பயணிகள், சரக்கு போக்குவரத்து உன்னத வளர்சியை பெறுகின்றன.

• **<u>நீர் வழி போக்குவரத்து</u>:**
- தமிழ்நாடு 1076 கீ.மீ நீளம் உள்ள கடற்கரையை பெற்றுள்ளது.
- சென்னை இந்தியாவின் இரண்டாவது பெரிய செயற்கை துறைமுகமாகும்.
- சென்னை துறைமுகம் அனைத்து விதமான நிலக்கரி, கனிம போக்குவரத்துகளை கையாளுகிறது.
- தமிழ்நாட்டின் பெரிய துறைமுகங்கள் சென்னை, எண்ணூர், தூத்துக்குடி.
- தமிழ் நாட்டில் கடலூர், பாம்பன், இராமேஸ்வரம், குளச்சல், கன்னியாகுமரி, வாலிநோக்கம் என 23 சிறு துறைமுகங்கள் உள்ளன.
- நாகப்பட்டினம் நடுத்தர துறைமுகமாகும்.
- சிறு துறைமுகங்கள் ஆண்டுதோறும் 73 மில்லியன் மெட்ரிக்டன் சரக்குகளை கையாளுகிறது.
- சிறு துறைமுகங்கள் தமிழ்நாடு கடல்சார் மையத்தால் நிர்வாகம் செய்யப்படுகிறது.





www.Padasalai.Net

97. $P_d = 1600 - x^2$ , $P_s = 2x^2 + 400$ ஆகியவை தேவை மற்றும் அளிப்பு சமன்பாடுகள் எனில் சமநிலைப் புள்ளியில் நுகர்வோர் உபரி, உற்பத்தியாளர் உபரி மதிப்புகளை காண்க.

**தீர்வு**

$P_d = 1600 - x^2$

$P_s = 2x^2 + 400$

சமநிலை புள்ளி $= P_d = P_s$

$1600 - x^2 = 2x^2 + 400$

$1600 - 400 = 2x^2 + x^2$

$3x^2 = 1200$

$x^2 = \frac{1200}{3}$

$x^2 = 400$

$x^2 = 20 \times 20$

$\therefore X_0 = 20$

$P_d = 1600 - x^2$

$= 1600 - 20^2$

$= 1600 - 400 = 1200$

$\therefore P_0 = 1200$

நுகர்வோர் உபரி $(CS) = \left[\int_0^{X_0} P(x)d_x\right] - (X_0 \times P_0)$

$(CS) = \left[\int_0^{20} (1600 - x^2)d_x\right] - (20 \times 1200)$

$= \left[1600_X - \frac{X^{(2+1)}}{3}\right]_0^{20} - 24000$

$= \left[1600\,x - \frac{x^3}{3}\right] - 24000$

$= \left[(1600 \times 20) - \frac{20^3}{3}\right] - 24000$

$= \left[32000 - \frac{20 \times 20 \times 20}{3}\right] - 24000$

$= 32000 - \frac{8000}{3} - 24000$

$= 32000 - 2667 - 240000$

$= 32000 - 26647$

$\therefore$ நுகர்வோர் உபரி $(CS) = 5333$ அலகுகள்

உற்பத்தியாளர் உபரி $(PS) = (X_0 \times P_0) - \left[\int_0^{X_0} P(x)d_x\right]$

$= (20 \times 1200) - \left[\int_0^{20} (2x^2 + 400)d_x\right]$

$= 24000 - \left[\frac{2X^{(2+1)}}{3} + 400_X\right]_0^{20}$

$= \left[24000 - \frac{2x^3}{3} + 400x\right]$

$= 24000 - \left[\frac{2 \times 20^3}{3} + 400 \times 20\right]$

$= 24000 - \left[\frac{2 \times (20 \times 20 \times 20)}{3} + 400 \times 20\right]$

$= 24000 - \left[\frac{2 \times 8000}{3} + 8000\right]$

$= 24000 - \left[\frac{16000}{3} + 8000\right]$

$= 24000 - [5333 + 8000]$

$= 24000 - 13333 = 10667$

$\therefore$ உற்பத்தியாளர் உபரி $(CS) = 10667$ அலகுகள்

98. $P = 35 - 2X - X^2$ ஆகவும் தேவை என்பது X = 3 எனவும் அமையும் எனில் நுகர்வோர் உபரி என்ன?

**தீர்வு**

$P = 35 - 2X - X^2$

X = 3 எனில்

$= 35 - (2 \times 3) - (3)^2$

$= 35 - 6 - (3 \times 3)$

$= 35 - 6 - 9$

$= 35 - 15 = 20$

$X_0 = 20$

$P_0 = 3$

நுகர்வோர் உபரி $(CS) = \left[\int_0^{X_0} P(x)d_x\right] - (X_0 \times P_0)$

$(CS) = \left[\int_0^{3} (35 - 2x - x^2)d_x\right] - (20 \times 3)$

$= \left[35x - \frac{2x^{(1+1)}}{2} - \frac{X^{(2+1)}}{3}\right]_0^3 - 60$

$= \left[(35 \times 3) - \frac{2 \times 3^2}{2} - \frac{3^3}{3}\right] - 60$

$= \left[105 - \frac{2 \times (3 \times 3)}{2} - \frac{(3 \times 3 \times 3)}{3}\right] - 60$

$= 105 - (3 \times 3) - (3 \times 3) - 60$

$= 105 - 9 - 9 - 60 = 105 - 78 = 27$

$\therefore$ நுகர்வோர் உபரி $(CS) = 27$ அலகுகள்



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

99. வகைக்கெழு கணித முறையை பயன்படுத்தி தேவையின் சமன்பாடு $P = 60 - 0.2Q$ ஆக இருக்கும் போது 1) P = 0. 2) P = 20. 3) P = 40 என்றால் தேவை நெகிழ்ச்சி கெழு மதிப்பை காண்க.

தீர்வு

$P = 60 - 0.2Q$

$0.2Q = 60 - P$

சமன்பாட்டை 10 ஆல் பெருக்குக

$10(0.2Q) = 10(60 - P)$

$2Q = 600 - 10P$

$Q = \frac{600 - 10P}{2}$

$Q = 300 - 5P$

∴ தேவை சமன்பாடு Q = 300 – 5P

1. P = 0 எனில் தேவை நெகிழ்ச்சி கெழு

$(ed) = \left(\frac{p}{q}\right) \times \left(\frac{d(q)}{dp}\right)$

$Q = 300 - 5P$ சமன்பாட்டில் P = 0 என பிரதியிடுக.

$= 300 - 5(0)$

$\therefore Q = 300$

$\left(\frac{d(q)}{dp}\right) = \frac{d(300-5p)}{d(P)}$

$= 0 - (1 \times 5)P^{(1-1)} = -5\,P^0$

$\therefore \left(\frac{d(q)}{dp}\right) = -5$

$E_d = \frac{0}{300} \times (-5) = 0$

∴ P = 0 எனில் தேவை நெகிழ்ச்சி கெழு $(ed) = 0$

2. P = 20 எனில் தேவை நெகிழ்ச்சி கெழு

$(ed) = \left(\frac{p}{q}\right) \times \left(\frac{d(q)}{dp}\right)$

$Q = 300 - 5P$ சமன்பாட்டில் P = 20 என பிரதியிடுக.

$Q = 300 - 5(20) = 300 - 100 = 200$

$\therefore Q = 200$

$\left(\frac{d(q)}{dp}\right) = \frac{d(300-5P)}{d(P)} = 0 - (1 \times 5)P^{(1-1)} = -5\,P^0$

$\therefore \left(\frac{d(q)}{dp}\right) = -5 \quad E_d = \frac{20}{200} \times (-5)$

$= \frac{20}{200} \times (-5) = \frac{1}{10} \times (-5)$

$= (0.1) \times (-5) = -0.5$

∴ P = 20 எனில் தேவை நெகிழ்ச்சி கெழு $(ed) = -0.5$

3. P = 40 எனில் தேவை நெகிழ்ச்சி கெழு

$(ed) = \left(\frac{p}{q}\right) \times \left(\frac{d(q)}{dp}\right)$

$Q = 300 - 5(40) = 300 - 200 = 100$

$\therefore Q = 100$

$\left(\frac{d(q)}{dp}\right) = \frac{d(300-5p)}{d(P)}$

$= 0 - (1 \times 5)P^{(1-1)} = -5\,P^0$

$\therefore \left(\frac{d(q)}{dp}\right) = -5$

$E_d = \frac{40}{100} \times (-5)$

$= \frac{40}{100} \times (-5)$

$= (0.4) \times (-5) = -2$

∴ P = 40 எனில் தேவை நெகிழ்ச்சி கெழு $(ed) = -2$

www.Padasalai.Net

100. தேவைசார்பு $P_D = 25 - Q^3$ மற்றும் அளிப்பு சார்பு $P_S = 2Q + 1$ ஆகியன தரப்பட்டுள்ளன. தூயப்போட்டி நிலவும் போது நுகர்வோர் உபரி மற்றும் உற்பத்தியாளர் உபரி ஆகியவற்றை காண்க.($P_D$ = தேவை விலை , $P_S$ = அளிப்பு விலை)

தீர்வு

$P_d = 25 - Q^2$

$P_s = 2Q + 1$

சமநிலை புள்ளி = $P_d = P_s$

$25 - Q^2 = 2Q + 1$

$0 = 2Q + 1 + Q^2 - 25$

$0 = Q^2 + 2Q - 24$

$Q^2 - 6Q - 4Q - 24 = 0$

$Q(Q+6) - 4(Q+6) = 0$

$(Q+6)(Q-4) = 0$

$(Q = -6)$ , $(Q = 4)$

$(Q = -6)$ பொருளாதாரத்தில் பொருளற்றது

$\therefore Q = 4$

$P_0 = 9$ , $Q_0 = 4$

Q = 4 என இருக்கும் போது

$P_d = 25 - 4Q^2$

$= 25 - 4^2$

$= 25 - (4 \times 4) = 25 - 16 = 9$

$\therefore P_D = 9$

$P_s = 2Q + 1$

$= 2(4) + 1$

$= 8 + 1 = 9$

$\therefore P_S = 9$

நுகர்வோர் உபரி $(CS) = \left[\int_0^{Q_0} P(Q)d_Q\right] - (X_0 \times P_0)$

$(CS) = \left[\int_0^4 (25 - Q^2)d_Q\right] - (9 \times 4)$

$= \left[25_Q - \frac{Q^{(2+1)}}{3}\right]_0^4 - 36$

$= \left[(25 \times 4) - \frac{4^3}{3}\right] - 36$

$= \left[(100) - \frac{4 \times 4 \times 4}{3}\right] - 36$

$= \left[100 - \frac{64}{3}\right] - 36$

$= 100 - 23.33 - 36$

$= 100 - 57.33 = CS = 42.67$

$\therefore$ நுகர்வோர் உபரி $(CS)$ = 42.67அலகுகள்

உற்பத்தியாளர் உபரி $(PS) = (Q_0 \times P_0) - \left[\int_0^{Q_0} P(Q)d_Q\right]$

$= (9 \times 4) - \left[\int_0^4 (2Q + 1)d_x\right]$

$= 36 - \left[\frac{2Q^{(1+1)}}{2} + 1Q\right]_0^4$

$= 36 - \left[\frac{2Q^2}{2} + Q\right]$

$= 36 - \left[\frac{2 \times (4)^2}{2} + 4\right]$

$= 36 - \left[\frac{2 \times (4 \times 4)}{2} + 4\right]$

$= 36 - [16 + 4]$

$= 36 - [16 + 4]$

$= 36 - [20] = \therefore CS = 16$

$\therefore$ உற்பத்தியாளர் உபரி $(CS)$ = 16 அலகுகள்

101. <u>பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.</u>

<u>பொருளியல் துறையில் தகவல் தொழில் நுட்பங்களின் பயன்பாடுகள்:</u>

- புள்ளி விவரங்களை தொகுத்தல், ஒழுங்குற அமைத்தல், கையாளுதல், கணக்கிடுதல், முடிவுகளை காட்சிப்படுத்துதல் ஆகியவற்றில் பயன்படுகிறது.
- தொழில்நுட்ப சாதனங்களின் மூலம் பொருளியல் செயல்பாடுகளை வேகமாகவும் துல்லியமாகவும் மேற்கொள்ள முடியும்.
- பொதுவாக SPPS மற்றும் EXCEL தொகுப்புகள் பொருளியல் ஆய்வாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன.
- சில குறிப்பிட்ட பணிக்கென சில மென்பொருள்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- WORD PROCESSOR, SPRED SHEET, WEB BROWSER முதலியன பொருளியல் ஆய்வுக்கு அடிக்கடி பயன்படுத்தப்படும் மென்பொருள்கள் அகும்.

| வ.எண் | தகவல் | தொழில்நுட்ப கருவிகள் மற்றும் பணிகள் |
|---|---|---|
| 1. | உருவாக்கம் | தனிப்பட்ட கணினிகள், டிஜிட்டல் கேமராக்கள், ஸ்கேனர், ஸ்மார்ட் போன் |
| 2. | செயலாக்கம் | கால்குலேட்டர், தனிப்பட்ட கணினிகள், ஸ்மார்ட் போன். |
| 3. | சேமிப்பு | பென்டிரைவ், மைக்ரோசிப், கிளவ்டு |
| 4. | காட்சிப்படுத்துதல் | PC, TV, PROJECTOR, SMART PHONE |
| 5. | ஊடக வழி பரிமாற்றம் | இணையம், டெலிகான்பரன்ஸ், வீடியோ கான்பரன்ஸ், மொபைல் தொழில்நுட்பம், வானொலி, |
| 6. | தகவல் பரிமாற்றம் | இமெயில், இலைபேசி. |

www.Padasalai.Net

102. **முற்றுரிமைக்கு சாதகமான சூழ்நிலைகளை யாவை?**

**முற்றுரிமை தோன்ற காரணங்கள்:**

- இயற்கையாக சில பொருட்கள் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் கிடைப்பது. உதாரணம்: தென்னாப்பிரிக்கா – வைரம்.
- சில குறிப்பிட்ட பணிகளை அரசு ஏகபோகமாக எடுத்து நடத்துதல். உதாரணம்: இந்திய இரயில்வே.
- தொழில்நுட்பம், பொருளின் வடிவமைப்பு, வணிக குறியீடு வாயிலாக முற்றுரிமை தொன்றுகிறது.
- பேரளவு முதலீடு முற்றுரிமை தோன்ற காரணமாக அமைகிறது.

103. **பதப்படுத்தப்படாத பாலின் அங்காடியை ஆய்வுசெய்யும் ஆராய்ச்சியாளர் $Q_T = f(P_T, Y, A, N, P_C)$ என்ற சார்பினை எடுத்துக்கொண்டார். இதில் $Q_T$ என்பது பதப்படுத்தப்படாத பாலின் தேவை, $P_T$ என்பது பதப்படுத்தப்படாத பாலின் விலை, $Y$ என்பது ஒரு குடும்பத்தின் சராசரி வருமாணம், $A$ என்பது பதப்படுத்தப்பட்ட பாலுக்கு செய்யப்படும் விளம்பரச்செலவு, $N$ என்பது அங்காடியில் உள்ள மக்களின் எண்ணிக்கை மற்றும் $P_C$ என்பது பதப்படுத்தப்பட்ட பாலின் விலையையும் குறிக்கும் எனில்**

**1. $Q_T = f(P_T, Y, A, N, P_C)$ என்பதை சொற்களால் விளக்குக.**

**2. இம் மாறிகளில் சார்பற்ற மாறிகளை குறிப்பிடுக.**

**3. இந்த சார்பிற்கு குறிப்பிட்ட வடிவம் தருக.(பொருளியல் அறிவை பயன்படுத்தி சார்பற்ற மாறிகளின் குணகம் நேரிடை அல்லது எதிரிடை எனக் குறிப்பிடுக.**

**அ) <u>பதப்படுத்தப்படாத பாலின் தேவைக்கான சார்பு</u>** $Q_T = f(P_T, Y, A, N, P_C)$

$Q_T$ = பதப்படுத்தப்பட்ட பாலின் தேவை

$P_T$ = பதப்படுத்தப்படாத பாலின் விலை.

**$Y$ = குடும்பத்தின் சாராசரி வருமாணம்.**

**$A$ = பதப்படுத்தப்பட்ட பாலுக்குகான விளம்பரச்செலவு.**

**$N$ = மக்களின் எண்ணிக்கை.**

**$P_C$ = பதப்படுத்தப்பட்ட பாலின் விலை**

**<u>ஆ) இதில் சார்பற்ற மாறிகள்</u>**

**$A$ = பதப்படுத்தப்பட்ட பாலுக்கான விளம்பரச் செலவு.**

**$N$ = மக்களின் எண்ணிக்கை.**

**<u>இ) பாலுக்கான தேவையை தீர்மானிக்கம் காரணிகள்</u>**

- **<u>குடும்பத்தின் வருமாணம்($Y$)</u>:** வருமானம் பாலின் தேவையோடு நேரிடை தொடர்புடையது. வருமானம் உயரும் போது பாலின் தேவை உயரும்.
- **<u>பதப்படுத்தப்படாத பாலின் விலை</u>** ($P_T$): பாலின் தேவை அதன் விலையோடு எதிரிடையான தொடர்புடையது. பாலின் விலை கூடும்போது அதன் தேவை குறையும்.
- **<u>பதப்படுத்தப்பட்ட பாலுக்கான விளம்பரச்செலவு</u> ($A$):** பாலின் விலையை அதிகரிக்க செய்து பாலின் தேவையை குறைக்கும்.
- **<u>மக்களின் எண்ணிக்கை</u> ($N$):** மக்கள்தொகையின் அளவு பாலுக்கான தேவையோடு நேரிடையான தொடர்புடையது. மக்கள்தொகை அதிகரிக்கும் போது பாலுக்கான தேவை அதிகரிக்கும்.
- **<u>பதப்படுத்தப்பட்ட பாலின் விலை</u>($P_C$):** நேரிடையான தொடர்புடையது.

$P_T$ ல் மாற்றம் இல்லாத போது $P_C$ அதிகரிக்கும் எனில் பதப்படுத்தப்படாத பாலின் தேவையை அதிகரிக்கும்.

104. **ஒரு நிறுவனத்தின் வெளியீடு X ஆக இருக்கும் போது அதன் இறுதிநிலைச் செலவுச்சார்பு $MC = 100 - 10_X + 0.1X^2$ என்க. அந்த நிறுவனத்தின் மாறாச்செலவு ரூ. 500 எனில் மொத்த செலவு சார்பு காண்க.**

**<u>தீர்வு</u>**

$$MC = 100 - 10_X + 0.1X^2, \quad C = 500$$

$$TC = \int [100 - 10_X + 0.1X^2]\, d_x$$

$$= \int \left[100X - 10\frac{X^{(1+1)}}{2} + 0.1\frac{X^{(2+1)}}{3}\right] + C$$

$$= \int 100X - 5X^2 + \frac{X^3}{30} + C$$

**இங்கு மாறாச்செலவு ரூ. 500 என தரப்பட்டுள்ளது.**

∴ விடை $TC = 100X - 5X^2 + \dfrac{X^3}{30} + 500$





www.Padasalai.Net

105. X அலகுகள் உற்பத்தி செய்வதற்கான இறுதிநிலைச் செலவு சார்பு $Y = 23 + 16X - 3X^2$ ஆகும். மேலும் பூஜ்ஜிய அலகு உற்பத்திக்கான மொத்த செலவு ரூ. 40 எனில் மொத்த செலவு சார்பு, சராசரி செலவு சார்பு ஆகியவற்றை காண்க.

**தீர்வு**

$MC = 23 + 16X - 3X^2$

$C = 40$

**1. மொத்த செலவு**

$TC = \int (MC)\, dx + c$

$TC = \int [23 + 16_X + 3X^2]\, d_x + c$

$= \int \left[ 23X + 16 \frac{X^{(1+1)}}{2} - 3 \frac{X^{(2+1)}}{3} \right] + C$

$= 23X + 8X^2 - X^3 + C$

இங்கு மாறாச்செலவு ரூ. 40 என தரப்பட்டுள்ளது

$\therefore TC = 23X + 8X^2 - X^3 + 40$

**2. சராசரிசெலவு** $AC = \frac{TC}{X}$

$TC = 23X + 8X^2 - X^3 + 40$

$= \frac{23X + 8X^2 - X^3 + 40}{X}$

$\therefore AC = 23 + 8X - X^2 + \frac{40}{X}$

106. $X^2 + X - 1$ என்ற சமன்பாட்டை வகையிடுக

**தீர்வு**

$X^3 + X - 1$

$= \int [X^2 + X - 1]\, dx$

$= \frac{x^{(2+1)}}{3} + \frac{x^{(1+1)}}{2} - 1x + c$

$\therefore$ விடை $= \frac{x^3}{3} + \frac{x^2}{2} - x$

107. 4X என்பதை வகைப்படுத்துக

**தீர்வு**

4X

$= \int [4X]\, dx + c$

$= 4 \frac{x^{(1+1)}}{2} + c$

$\therefore$ விடை $= 2x^2 + C$

108. $4X^3$ என்ற சமன்பாட்டை வகைப்படுத்துக.

**தீர்வு**

$4X^3$

$= \int [4X^3]\, dx + c$

$= 4 \frac{x^{(3+1)}}{4} + c$

$\therefore$ விடை $= X^4 + C$

109. 5 என்பதை வகைப்படுத்துக

**தீர்வு**

5

$= \int [5X]\, dx + c$

$\therefore$ விடை $= 5x + C$

110. **1956 ஆம் ஆண்டு தொழிற்கொள்கை தீர்மானம் பற்றி நீ அறிவது என்ன?**

**1956 ஆம் ஆண்டு தொழிற்கொள்கை தீர்மானம்**

- மகலநோபிஸ் வளர்ச்சி மாதிரியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது.
- நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு கனரக தொழில்துறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.
- பொதுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்தது, தனியார் துறையையும் நியாயமான முறையில் வழிநடத்தியது.
- சிறுதொழில் மற்றும் குடிசை தொழில்களை ஊக்குவித்து நேரடி மானியம் அளித்தது.
- பேரளவு உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தியை கட்டுப்படுத்த பல்வேறு வரிகளை விதித்தது.
- வட்டார வேறுபாடுகளை நீக்க வலியுறுத்தியது.
- தொழில்கள் மூன்று வகையாக பிரிக்கப்பட்டன.
- முதலீடுகளின் தேவையை வலியுறுத்தியது.

www.Padasalai.Net



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

111.தேவைச்சார்பு $X = \frac{100}{P}$ விலையை பொருத்து தேவை நெகிழ்ச்சி $(E_P)$ யை P = 2 ஆக இருக்கும் போது காண்க.

தீர்வு

தேவை நெகிழ்ச்சி = $E_P = \left[\frac{P}{X}\right] \times \left[\frac{d_x}{d_p}\right]$

தேவைச்சார்பு = $X = \frac{100}{P} = 100p^{-1}$

$\therefore \frac{d(x)}{dp} = 100(-1 \times P^{(-1-1)}$

$= 100(-1)\,P^{-2} \quad = -100P^{-2}$

$\therefore \frac{d(x)}{dp} = \frac{-100}{p^2}$

P = 2 எனில்

$\therefore \frac{d(x)}{dp} = \frac{-100}{p^2}$

$= \frac{-100}{2^{-2}}$

$= \frac{-100}{(-2\times-2)}$

$= \frac{-100}{4}$

$\therefore \frac{d(x)}{dp} = -25$

$X = \frac{100}{P} = \frac{100}{2} = 50$

$X = 50, \ P = 2, \ \frac{d(x)}{dp} = -25$ என்ற மதிப்புகளை சூத்திரத்தில் பிரதியிடுக.

தேவை நெகிழ்ச்சி = $E_P = \left[\frac{P}{X}\right] \times \left[\frac{d_x}{d_p}\right]$

$= \left[\frac{2}{50}\right] \times [-25] = \frac{-50}{50} = -1$

∴ தேவை நெகிழ்ச்சி Ep = – 1

112. ஒரு குறிப்பிட்ட பண்டத்தை உற்பத்தி செய்ய ஒவ்வொரு மாதத்தின் மொத்த செலவுகளை தயாரிப்பாளர் ஒருவர் $TC = 128 + 60Q + 8Q^2$ என மதிப்பிடுகிறார். இறுதிநிலை செலவு, சராசரி செலவு, மாறாச் செலவு, மாறும் செலவு, சராசரி மாறும் செலவு, சராசரி மாறாச்செலவு ஆகியவற்றை கண்டுபிடி.

தீர்வு

$TC = 128 + 60Q + 8Q^2$

1. இறுதிநிலை செலவு$(MC) = \frac{d(Q)}{dp}$

$\frac{d(Q)}{dp} = 0 + 60 \times (1)Q^{(1-1)} + 8 \times (2)Q^{(2-1)}$

$= 0 + 60Q^0 + 16\,Q^1$

$\therefore MC = 60 + 16Q$

2, சராசரி செலவு $(AC) = \frac{TC}{Q}$

$(AC) = \frac{TC = 128 + 60Q + 8Q^2}{Q}$

$= \frac{128}{Q} + 60Q^{(1-1)} + 8Q^{(2-1)}$

$= \frac{128}{Q} + 60Q^0 + 8Q^1$

$\therefore AC = \frac{128}{Q} + 60 + 8Q$

3. மொத்த மாறாச் செலவு (TFC) = 128

4. சராசரி மாறாச் செலவு $(AFC) = \frac{TFC}{Q}$

$\therefore AFC = \frac{128}{Q}$

5.மொத்த மாறும் செலவு $(TVC) = 60Q + 8Q^2$

6. சராசரி மாறும் செலவு $(AVC) = \frac{TVC}{Q}$

$= \frac{60Q + 8Q^2}{Q}$

$= 60Q^{(1-1)} + 8Q^{(2-1)}$

$= 60Q^0 + 8Q^1$

$\therefore AVC = 60 + 8Q$





www.Padasalai.Net

113. ஒரு உற்பத்தியாளரின் மொத்த செலவு சார்பு $(TC) = Q^3 - 18Q^2 + 91Q + 10$ ஆகும். இங்கு செலவுகள் ரூபாயில் உள்ளன. Q = 3 என்கின்றபோது இறுதிநிலை செலவு(MC) மற்றும் சராசரி மாறும் செலவு (AVC) ஆகியவற்றை காண்க

தீர்வு

1) இறுதிநிலைச் செலவு $(MC) = \frac{d(TC)}{dQ}$

$(TC) = Q^3 - 18Q^2 + 91Q + 10$

இறுதிநிலைச் செலவு $(MC) = \frac{d(TC)}{dQ}$

$= (1 \times 3)Q^{(3-1)} - (18 \times 2)Q^{(2-1)} + (91 \times 1)Q^{(1-1)} + 0$

$= 3Q^2 - 36Q^1 + 91Q^0 + 0$

$\therefore MC = 3Q^2 - 36Q + 91$

Q = 3 என MC சார்பில் பிரதியிடுக

$MC = 3Q^2 - 36Q + 91$

$= 3(3)^2 - 36(3) + 91$

$= 3(3 \times 3) - 108 + 91$

$= 27 - 108 + 91$

$= 118 - 108$

**∴ விடை $MC = 10$**

2) சராசரி மாறும் செலவு $AVC = \frac{TVC}{Q}$

மொத்த மாறும் செலவு (TVC) = $Q^3 - 18Q^2 + 91Q$

$AVC = \frac{TVC}{Q}$

$= \frac{Q^3 - 18Q^2 + 91Q}{Q}$

$= Q^{(3-1)} - 18Q^{(2-1)} + 91Q^{(1-1)}$

$= Q^2 - 18Q^1 + 91Q^0$

$AVC = Q^2 - 18Q + 91$

Q = 3 என AVC சார்பில் பிரதியிடுக

$AVC = Q^2 - 18Q + 91$

$= 3^2 - 18(3) + 91$

$= (3 \times 3) - 54 + 91$

$= 9 - 54 + 91 = 100 - 54 = 46$

**∴ விடை $AVC = 46$**

114. $TR = 50Q - 4Q^2$ என தரப்பட்டுள்ளது $Q = 3$ இறுதிநிலை வருவாயை கண்டுபிடி.

**தீர்வு**

$TR = 50Q - 4Q^2$

$Q = 3$

$MR = \frac{d(TR)}{dQ}$

$MR = (50 \times 1)Q^{(1-1)} - (4 \times 2)Q^{(2-1)}$

$= 50Q^0 - 8Q^1$

$= 50 \times (1) - 8Q$

$\therefore MR = 50 - 8Q$

$Q = 3$ என MR சார்பில் பிரதியிடுக.

$MR = 50 - 8Q$

$= 50 - 8(3)$

$= 50 - 24 = 26$

**∴ விடை $MR = 26$**

115. $TC = 15 + 3Q^2 + 7Q^3$ என்பது மொத்த செலவு சார்பு என தரப்படின் இறுதிநிலை செலவு சார்பினை வருவி.

தீர்வு

$TC = 15 + 3Q^2 + 7Q^3$

$MC = \frac{d(TC)}{dQ}$

$= \frac{d(15 + 3Q^2 + 7Q^3)}{dQ}$

$= 0 + 3 \times (2)Q^{(2-!)} + 7 \times (3)Q^{(3-1)}$

$= 0 + 6Q^1 + 21Q^2$

**∴ விடை $MC = 6Q + 21Q^2$**

www.Padasalai.Net

116. Y = 4 எனில் $\frac{dy}{dx}$ மதிப்பு காண்க.

தீர்வு

Y = 4

இங்கு 4 என்பது மாறி

மாறிலி சார்பின் வகைகெழு பூஜ்ஜியம்

$\therefore$ எனவே $\frac{dy}{dx} = \frac{d(4)}{dx} = 0$

92. $Y = 6X^3$ என்ற சார்பின் சாய்வு யாது?

தீர்வு

$Y = 6X^2$ என்று தரப்பட்டுள்ளது.

சாய்வு $(M) = \frac{dy}{dx} = 6 \times (3)Q^{(3-1)}$

$\therefore$ சாய்வு $(M) = 18X^2$

117. $Y = 5X^4$ என்ற சார்புக்கு X = 10 எனும் போது சாய்வு என்ன?

தீர்வு

$Y = 5X^4$

சாய்வு $(M) = \frac{dy}{dx} = 5 \times (4)Q^{(4-1)}$

$\therefore$ சாய்வு $(M) = 20X^2$

X = 10 என சாய்வு சமன்பாட்டில் பிரதியிடுக.

சாய்வு$(M) = 20X^2$

$= 20 \times (10)^2$

$= 20 \times (10 \times 10)$

$= 20 \times (100)$

$\therefore$ சாய்வு $(M) = 20000$

118. $Y = 2X^3 - 6X$ எனில் $\frac{dy}{dx}$ ஐ காண்க.

தீர்வு

$Y = 2X^3 - 6X$

$= \frac{d(Y)}{dx} = \frac{d(2x^{3-}6X)}{dx}$

X ஐ பொருத்து Y யினை வகையிட

$\frac{d(y)}{dx} = 2(3)x^{(2-1)} - 6(1)x^{(1-1)}$

$= 6X^2 - 6X^0$

$= 6x^2 - 6(1)$

$\therefore$ விடை $\frac{dy}{dx} = 6x^2 - 6$

119. $Y = 3X^2 + 16X^3$ என்ற சார்பினை $X$ பொருத்து வகையிடுக.

தீர்வு

$Y = 3X^2 + 16X^3$

$= \frac{d(Y)}{dx} = \frac{d(3Q^2 + 16x^3)}{dx}$

$\frac{d(y)}{dx} = 3(2)x^{(2-1)} + 16(3)x^{(2-1)}$

$= 6x^1 + 48x^2$

$\therefore$ விடை $\therefore \frac{d(y)}{dx} = 6x + 48x^2$

120. $A = \begin{bmatrix} 3 & 4 \\ 10 & -2 \end{bmatrix}$ என்ற அணியின் அணிக்கோவை மதிப்பை காண்க.

தீர்வு

$A = \begin{bmatrix} 3 & 4 \\ 10 & -2 \end{bmatrix}$

$\Delta = \begin{vmatrix} 3 & 4 \\ 10 & -2 \end{vmatrix}$

$= (3 \times -2) - (10 \times 4)$

$= -6 - 40$

$\therefore$ விடை $\Delta = -46$

www.Padasalai.Net



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

121. கிராமர் விதியை பயன்படுத்தி கீழ்வரும் சமன்பாடுகளின் X மற்றும் Y மதிப்புகளை காண்க.

$X + 3Y = 1,$

$3X - 2Y = 14$

**தீர்வு**

**சமன்பாடுகள்**

$X + 3Y = 1,$

$3X - 2Y = 14$

**சமன்பாடுகளின் அணிவடிவம்**

$$\begin{bmatrix} 1 & 3 \\ 3 & -2 \end{bmatrix} \begin{bmatrix} x \\ y \end{bmatrix} = \begin{bmatrix} 1 \\ 14 \end{bmatrix}$$

$\Delta$ **வின் மதிப்பு காணல்** $\Delta = \begin{vmatrix} 1 & 3 \\ 3 & -2 \end{vmatrix} = (1 \times -2) - (3 \times -3)$

$= -2 - 9 = -11$

$\therefore \Delta = -11$

இங்கு $\Delta \neq 0$ எனவே தீர்வு உண்டு.

$\Delta_x = \begin{vmatrix} 1 & 3 \\ 14 & -2 \end{vmatrix} = (1 \times -2) - (14 \times 3) = -2 - 42$

$\therefore \Delta_x = 44$

$\Delta_y = \begin{vmatrix} 1 & 1 \\ 3 & 14 \end{vmatrix} = (1 \times 14) - (3 \times 1) = 14 - 3$

$\therefore \Delta_x = 11$

$$x = \frac{\Delta_x}{\Delta} = \frac{-44}{-11} = 4$$

$$y = \frac{\Delta_y}{y} = \frac{11}{-11} = -1$$

$\therefore$ விடை $x = 4$

$y = -1$

122. $A = \begin{bmatrix} 3 & 4 & 7 \\ 2 & 1 & 3 \\ 7 & 2 & 1 \end{bmatrix}$ என்ற அணிக் கோவையின் மதிப்பு காண்க.

**தீர்வு**

$$A = \begin{vmatrix} 3 & 4 & 7 \\ 2 & 1 & 3 \\ 7 & 2 & 1 \end{vmatrix} = 3\begin{vmatrix} 1 & 3 \\ 2 & 1 \end{vmatrix} - 4\begin{vmatrix} 2 & 3 \\ 7 & 1 \end{vmatrix} + 7\begin{vmatrix} 2 & 1 \\ 7 & 2 \end{vmatrix}$$

$= 3[(1 \times 1) - (2 \times 3)] - 4[(2 \times 1) - (7 \times 3)] + 7[(2 \times 2) - (7 \times 1)]$

$= 3\,[1 - 6] - 4\,[2 - 21] + 7\,[4 - 7]$

$= 3[-5] - 4[-19] + 7[4 - 7]$

$= -15 + 76 - 21 = 76 - 36 = -40$

$\therefore$ விடை $|A| = 40$

123. <u>பணிக்கான படிப்பு ( DMP முறை) பற்றி குறிப்பு வரைக.</u>

**பணிக்கான படிப்பு ( DMP முறை)**

- பொருளாதார கொள்கைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் வேலையின்மை, வேலைக்கான காலியிடங்களை பாதிப்பதை விளக்குவதே DMP முறை.
- பணிக்கான படிப்பு என்ற ஆய்வுக்காக பீட்டர் டயமண்ட், டேல் மார்டின்கன் மற்றும் கிறிஸ்டோர் பிசாரிட்ஸ் ஆகிய பொருளாதார அறிஞர்கள் 2010 ஆண்டின் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை பகிந்துகொண்டனர்.
- இவர்கள் உருவாக்கிய கோட்பாட்டே DMP முறை





www.Padasalai.Net

124. திரு. அன்பு 2 பேனாக்கள், 3 பென்சில்கள், மற்றும் 1 நோட்டு புத்தகம் வாங்கினார்.
திரு. பரக்கத் 4 பேனாக்கள், 3 பென்சில்கள், மற்றும் 2 நோட்டு புத்தகங்கள் வாங்கினார்.
திரு. சார்லஸ் 2 பேனாக்கள், 5 பென்சில்கள், மற்றும் 3 நோட்டு புத்தகங்கள் வாங்கினார்.
அவர்கள் முறையே ₹. 32, ₹. 52, மற்றும் ₹. 60 செலவழித்துள்ளனர். எனில் ஒரு பேனா, ஒரு பென்சில் , மற்றும் ஒரு நொட்டு புத்தகத்தின் விலையை காண்க.

தீர்வு.

X என்பது பேனாவின் விலை
Y என்பது பென்சில் விலை
Z என்பது நோட்டு புத்தகத்தின் விலை என்க.

தேவையான சமன்பாடுகள்

$2X + 3Y + 1Z = 32$

$4X + 3Y + 2Z = 52$

$2X + 5Y + 3Z = 60$

<u>சமன்பாடுகளின் அணி வடிவம்</u>

$$\begin{bmatrix} 2 & 3 & 1 \\ 4 & 3 & 2 \\ 2 & 5 & 3 \end{bmatrix} \begin{bmatrix} X \\ Y \\ Z \end{bmatrix} = \begin{bmatrix} 32 \\ 62 \\ 60 \end{bmatrix}$$

$$\Delta = \begin{vmatrix} 2 & 3 & 1 \\ 4 & 3 & 2 \\ 2 & 5 & 3 \end{vmatrix}$$

$\Delta = 2[(3\times3)-(5\times2)] - 3[(4\times3)-(2\times2)] + 1[(4\times5)-(2\times3)]$
$= 2\,[9-10] - 3\,[12-4] + 1\,[20-6]$
$= 2\,[-1] - 3\,[8] + 1\,[14]$
$= -2 - 24 + 14 = -12$
$\therefore \underline{\Delta = -12}$

$$\Delta_X = \begin{vmatrix} 32 & 3 & 1 \\ 52 & 3 & 2 \\ 60 & 5 & 3 \end{vmatrix}$$

$\Delta = 32[(3\times3)-(5\times2)] - 3[(52\times3)-(60\times2)] + 1[(52\times5)-(60\times3)]$
$= 32\,[9-10] - 3\,[156-120] + 1\,[260-180]$
$= 32\,[-1] - 3\,[36] + 1\,[80]$
$= -32 - 108 + 80 = -140 + 80 = -60$
$\therefore \underline{X = -60}$

$$\Delta_Y = \begin{vmatrix} 2 & 32 & 1 \\ 4 & 52 & 2 \\ 2 & 60 & 3 \end{vmatrix}$$

$\Delta Y = 2[(52\times3)-(60\times2)] - 32[(4\times3)-(2\times2)] + 1[(4\times60)-(2\times52)]$
$= 2\,[156-120] - 32\,[12-4] + 1\,[240-104]$
$= 2\,[36] - 3[136] + 32[14]$
$= 72 - 256 + 136 = -256 + 208 = -48$
$\therefore \underline{X = -48}$

$$\Delta Z = \begin{vmatrix} 2 & 3 & 32 \\ 4 & 3 & 52 \\ 2 & 5 & 60 \end{vmatrix}$$

$\Delta Z = 2[(3\times60)-(5\times52)] - 3[(4\times60)-(2\times52)] + 32[(4\times5)-(2\times3)]$
$= 2\,[180-260] - 32\,[240-104] + 32[20-6]$
$= 2\,[-80] - 3\,[136] + 32\,[14]$
$= -160 - 408 + 448 = -568 + 448 = -120$
$\therefore \underline{X = -120}$

<u>விடைகள்</u>

1. $X = \frac{\Delta X}{\Delta} = \frac{-60}{-12} = 5$

2. $Y = \frac{\Delta Y}{\Delta} = \frac{-48}{-12} = 4$

3. $z = \frac{\Delta Z}{\Delta} = \frac{-120}{-12} = 10$

| | |
|---|---|
| ஒரு பேனாவின் விலை | = ₹. 5 |
| ஒரு பென்சிலின் விலை | = ₹. 4 |
| ஒரு நோட்டு புத்தகத்தின் விலை | = ₹. 10 |





www.Padasalai.Net

125. $7X_1 - X_2 - X_3 = 0$
$10X_1 - 2X_1 + X_3 = 8$
$6X_1 + 3X_2 - 2X_3 = 7$ என்ற சமன்பாடுகளின் தீர்வு காண்க.

**தீர்வு**

**சமன்பாடுகளின் அணி வடிவம்**

$$\begin{bmatrix} 7 & -1 & -1 \\ 10 & -2 & 1 \\ 6 & 3 & -2 \end{bmatrix} \begin{bmatrix} x_1 \\ x_2 \\ x_3 \end{bmatrix} = \begin{bmatrix} 0 \\ 8 \\ 7 \end{bmatrix}$$

$$\Delta = \begin{vmatrix} 7 & -1 & -1 \\ 10 & -2 & 1 \\ 6 & 3 & -2 \end{vmatrix}$$

$\Delta = 7[(-2 \times -2) - (3 \times 1)] - (-1)[(10 \times -2) - (6 \times 1)] + (-1)[(10 \times 3) - (6 \times -2)]$
$= 7[4 - 3] + 1[-20 - 6] - 1[30 - (-12)]$
$= 7[1] + 1[-26] - 1[30 + 12]$
$= 7 - 26 - 42$
$= 68 - 7 = -61$
$\therefore \Delta = -61$

$$\Delta x_1 = \begin{vmatrix} 0 & -1 & -1 \\ 8 & -2 & 1 \\ 7 & 3 & -2 \end{vmatrix}$$

$\Delta x_1 = 0[(-2 \times -2) - (3 \times 1)] - (-1)[(8 \times -2)(7 \times 1)] + (-1)[(8 \times 3) - (7 \times -2)]$
$= 0[4 - 3] + 1[-16 - 7] - 1[24 - (-12)]$
$= 0 + 1[-23] - 1[48] = 0 - 23 - 38 = -61$
$\therefore \Delta x_1 = -61$

$$\Delta x_2 = \begin{vmatrix} 7 & 0 & -1 \\ 10 & 8 & 1 \\ 6 & 7 & -2 \end{vmatrix}$$

$\Delta x_2 = 7[(8 \times -2) - (7 \times 1)] - 0[(10 \times -2) - (6 \times 1)] - 1[(10 \times 7) - (6 \times 8)]$
$= 7[-16 - 7] - 0(-20 - 6) - 1[70 - 48]$
$= 7[-23] - 0[-26] - 1[22]$
$= -161 + 0 - 22 = -161 - 22 = -183$
$\therefore \Delta x_2 = -183$

$$\Delta x_3 = \begin{vmatrix} 7 & -1 & 0 \\ 10 & -2 & 8 \\ 6 & 3 & 7 \end{vmatrix}$$

$7[(-2 \times 7) - (3 \times 8)] - (-1)[(10 \times 7) - (6 \times 8)] + (0)[(10 \times 3) - (6 \times -2)]$
$= 7[-14 - 24] + 1[70 - 48] + 0[30 - (-12)]$
$= 7[-34] + 1[22] + 0[30 + 12]$
$= 266 - 22 + 0$
$= -266 - 22 = -244$

$\Delta x_3 = \therefore \Delta x_3 = -244$

**விடைகள்**

$$x_1 = \frac{\Delta x_1}{\Delta} = \frac{-61}{-61} = 1$$

$$x_2 = \frac{\Delta x_2}{\Delta} = \frac{-183}{-61} = 3$$

$$x_3 = \frac{\Delta x_3}{\Delta} = \frac{-244}{-61} = 4$$

$\therefore$ விடைகள் $x_1 = 1.$ $x_2 = 3.$ $x_3 = 4.$





www.Padasalai.Net

126. $(2,2)$ , மற்றும் $(4,-8)$ என்ற புள்ளிகளின் வழியே செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு யாது?

**தீர்வு**

$(X_1, Y_1)$, மற்றும் $(X_2, Y_2)$ **என்ற இரண்டு புள்ளிகள் வழியே செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு** $= \frac{Y - Y_1}{Y_2 - Y_1} = \frac{X - X_1}{X_2 - X_1}$

**இங்கு**

$X_1 = 2, \quad Y_1 = 2$

$X_2 = 4, \quad Y_2 = -8$

**மதிப்புகளை சமன்பாட்டில் பிரதியிடுக**

$$= \frac{Y - Y_1}{Y_2 - Y_1} = \frac{X - X_1}{X_2 - X_1}$$

$$= \frac{Y - 2}{-8 - 2} = \frac{X - 2}{4 - 2}$$

$$= \frac{Y - 2}{-10} = \frac{X - 2}{2}$$

$= 2(Y - 2) = -10(X - 2)$

$= 2Y - 4 = -10X + 20$

$2Y = -10X + 20 + 4$

$2Y = -10X + 24$

$$Y = \frac{-10X + 24}{2} = \frac{5X + 12}{1}$$

$\therefore Y = 5X + 12$

$Y = 5X + 12$

**இங்கு**

**சாய்வு(m) = 5**

**Y அச்சு வெட்டு (X= 0 எனில்) Y = 12**

**X அச்சு வெட்டு (Y = 0 எனில்)** $X = \frac{12}{5} = 2.4$

∴ விடை $(2,2)$ , மற்றும் $(4,-8)$ என்ற புள்ளிகளின் வழியே செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு $Y = 5X + 12$

127. $Q_D = 100 - 5P, \quad Q_S = 5P$ **என்பவை தேவை முறையே தேவை மற்றும் அளிப்பு சார்புகள் இதனை கொண்டு சமநிலை விலை மற்றும் அளவை காண்க.**

**தீர்வு**

**1) சமநிலை விலை =** $Q_D = Q_S$

$100 - 5P = 5P$

$-5P - 5P = -100$

$-10P = -100$

$$P = \frac{-100}{-10} = 10$$

**∴ சமநிலை விலை (P) = 10**

**2) <u>சமநிலை அளிப்பு</u>**

**(P)** = 10 என அளிப்பு சார்பு பிரதியிடுக.

$Q_S = 5P$

$= 5(10) = 50$

∴ சமநிலை அளிப்பு அளவு = 50 அலகுகள்

**3) <u>சமநிலை தேவை அளவு</u>**

**(P) = 10** என தேவை சார்பில் பிரதியிடுக

$Q_D = 100 - 5P$

$= 100 - 5(10)$

$= 100 - 50 = 50$

∴ சமநிலை தேவை அளவு = 50 அலகுகள்

∴ விடை 1. சமநிலை விலை = ₹. 10.

2. சமநிலை அளவு = 50 அலகுகள்

www.Padasalai.Net

128. ஒரு பண்டத்திற்கான விலை ₹. 5 அல்லது அதனை விட குறைவாக இருக்கும் போது அளிப்பின் அளவு பூஜ்ஜியமாக உள்ளது. விலை ₹. 5 விட ஒவ்வொரு ₹. 1 அதிகரிக்கும் போது அளிப்பின் அளவு மாறாவீதத்தில் 10 அலகுகள் அதிகரிக்கிறது எனில் பண்டத்தின் அளிப்பு சார்பை காண்க.

**தீர்வு**

விலை ₹. 5 எனில் அளிப்பு = 0 அலகுகள் ∴ முதல் புள்ளி = (0, 5)

விலை ₹. 1 அதிகரிக்கும் எனில் அளிப்பு 10 அதிகரிக்கிறது எனில்

விலை ₹. 6 எனில் அளிப்பு = 10 அலகுகள் ∴ முதல் புள்ளி = (10, 6)

விலை ₹. 7 எனில் அளிப்பு = 20 அலகுகள் ∴ முதல் புள்ளி = (20, 7)

தேவையான புள்ளிகள் (10, 6), (20, 7)

$(X_1, Y_1)$, மற்றும் $(X_2, Y_2)$ என்ற இரண்டு புள்ளிகள் வழியே செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு $= \frac{Y - Y_1}{Y_2 - Y_1} = \frac{X - X_1}{X_2 - X_1}$

இங்கு

$X_1 = 10, \quad Y_1 = 6$

$X_2 = 20, \quad Y_2 = 7$

மதிப்புகளை சமன்பாட்டில் பிரதியிடுக

$$= \frac{Y - Y_1}{Y_2 - Y_1} = \frac{X - X_1}{X_2 - X_1}$$

$$= \frac{Y - 6}{7 - 6} = \frac{X - 10}{20 - 10}$$

$$= \frac{Y - 6}{1} = \frac{X - 10}{10}$$

$$= 10(Y - 6) = 1(X - 10)$$
$$= 10Y - 60 = X - 10$$
$$10Y = X - 10 + 60$$
$$10Y = X + 50$$

$-X = -10Y + 50$ இந்த சமன்பாட்டை இரு புறமும் $(-)$ ஆல் பெருக்குக.

$X = 10Y - 50$

∴ $(10, 6)$, மற்றும் $(20, 7)$ என்ற புள்ளிகளின் வழியே செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு $X = 10Y - 50$

X என்பதை அளிப்பின் அளவு (X)

Y என்பதை விலை (P) எனவும் கருதினால்

∴ விடை $X = 10P - 50$

129. தேவைசார்பு $= 100 - 10$, அளிப்பு சார்பு $= 50 + 10P$ எனில் சமநிலை விலை யாது?

**தீர்வு**

$$100 - 10P = 50 + 10P$$
$$100 - 50 = 20P$$
$$50 = 20P = P = \frac{50}{20} = 2.5$$

∴ விடை சமநிலை விலை$(P) = 2.5$



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

130. $Q_D = 50 - 5P$ என்பது அங்காடி தேவைக்கோடாகும். எந்த அதிகபட்ச விலைக்கு மேல் பண்டத்திற்கு விலை தரமாட்டார்கள்.

தீர்வு

$Q_D = 50 - 5P,$

$5P = 50 - Q_D$

$Q_D$ மதிப்பு 0 எனில்

$5P = 50$

$P = \frac{50}{5} = 10$

$P = 10$ எனில் தேவை பூஜ்ஜியம் ∴ $P = 10$ என்பது அதிகபட்ச விலை

$P = 10$ என்ற விலைக்கு மேல் பண்டத்தை ஒருவரும் வாங்கமாட்டார்கள்

131. நேர்கோட்டு தேவைசார்பு மற்றும் சாய்வை கண்டுபிடி.

பாலுக்கான தேவை அட்டவணை.

| விலை (X) | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| தேவை (X) | 100 | 50 | 0 |

தேவையான புள்ளிகள்

(100, 1) , (50, 2)

தீர்வு

$(X_1, Y_1)$, மற்றும் $(X_2, Y_2)$ என்ற இரண்டு புள்ளிகள் வழியே செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு

$$= \frac{Y - Y_1}{Y_2 - Y_1} = \frac{X - X_1}{X_2 - X_1}$$

இங்கு

$X_1 = 100,\quad Y_1 = 50$

$X_2 = 1,\quad Y_2 = 2$

மதிப்புகளை சமன்பாட்டில் பிரதியிடுக

$$= \frac{Y - Y_1}{Y_2 - Y_1} = \frac{X - X_1}{X_2 - X_1}$$

$$= \frac{Y - 1}{2 - 1} = \frac{X - 100}{50 - 100}$$

$$= \frac{Y - 1}{1} = \frac{X - 100}{-50}$$

$-50(Y - 1) = 1(X - 100)$

$-50Y + 50 = X - 100$

$-50Y + 50 + 100 = X$

$-50Y + 150 = X$

$\therefore \underline{X = 150 - 50Y}$

X என்பதை பாலுக்கான தேவை அளவு (X)

Y என்பதை விலை (P) எனவும் கருதினால்

∴ விடை பாலுக்கான தேவைசார்பு $Q_D = 150 - 50P$

சாய்வு (m) = 5

www.Padasalai.Net

## 1 – நுண்பொருளியல் ஓர் ஆறிமுகம்

1. மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளை பற்றி பொருளியல் ஆராய்கிறது என்று கூறியவர்.
   **விடை : ஆல்பிரட் மார்ஷல்.**
2. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படை பிரச்சனை
   **விடை : பற்றாக்குறை.**
3. நுண்ணியல் பொருளியல் என்பது கீழ்கண்டவற்றுள் எதை உள்ளடக்கியது?
   **விடை : தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்.**
4. கீழ்கண்டவற்றுள் எது நுண்ணியல் பொருளாதாரம் சார்ந்தது?
   **விடை : கோதுமையின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது.**
5. பொருந்தாத ஒன்றை கண்டறிக.
   **விடை : மற்றவை மாறாமல் இருக்கும் போது.**
6. சமநிலை விலை என்பது அந்த விலையில்.
   **விடை : தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்.**
7. நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களை குறித்த ஒரு விசாரணை என்ற நூலின் ஆசிரியர்.
   **விடை : ஆடம் ஸ்மித்.**
8. விருப்பங்களோடும் கிடைப்பருமை உள்ள மாற்று வழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றி பயிலுகின்ற அறிவியலே பொருளியலாகும் என்று இலக்கணம் வகுத்தவர்.
   **விடை : இலயனல் ராபின்ஸ்.**
9. பொருளியலின் தந்தை யார்?
   **விடை : அடம் ஸ்மித்.**
10. பொருளியல் என்பது ஒரு சமூக அறிவியல் என்று கூறுவர். ஏனெனில்
    **விடை : மேற்கூறிய அனைத்தும்.**
11. பயன்பாடு என்பது.
    **விடை : மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி.**
12. அங்காடி என்பது.
    **விடை : நபர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்களை வாங்கும் மற்றும் விற்கும் முறையை குறிக்கும்.**
13. எது பொருளாதார நல இலக்கணம் சார்ந்ததல்ல?
    **விடை : பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும், வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது.**
14. வளர்ச்சி இலக்கணம் என்பது?
    **விடை : இயங்குநிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை.**
15. பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியது?
    **விடை : விலைக்கோட்பாடு.**
16. ------ பரிமாற்ற மதிப்பைக் கொண்டுள்ளவை அவற்றின் உரிமையாளர் உரிமைகளை நிறுவவும் பரிமாறவும் முடியும்.
    **விடை : பண்டங்கள்.**
17. பயன்பாட்டின் சரியான பண்புகளை அடையாளம் காண்க.
    **விடை : இது நுகர்வோரின் மனநிலையை சார்ந்தது.**
18. பற்றாக்குறை பொருளாதார இலக்கணத்தின் ஆசிரியர் யார்?
    **விடை : இராபின்ஸ்.**
19. தனிக் கருத்தில் இருந்து பொதுக் கருத்தை பெறும் முறை.
    **விடை : தொகுத்தாய்வு முறை.**
20. விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும்.
    **விடை : விலை.**

1. **<u>முற்றுரிமையின் பண்புகள் யாவை?</u>**

   **<u>முற்றுரிமையின் பண்புகள்:</u>**
   - ஒரு பண்டத்தை ஒருவரே உற்பத்தி செய்து விற்பனை செய்யும் அங்காடி அமைப்பு.
   - ஒரே ஒரு உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளர்.
   - முற்றுரிமை பண்டத்திற்கு நெருங்கிய பதிலீட்டு பண்டங்கள் இல்லை.
   - புதிய நிறுவனங்கள் உள்ளே நுழைவது முடியாது.
   - முற்றுரிமையாளர் விலை அல்லது உற்பத்தி பண்டத்தின் அளவை தீர்மானிக்கிறார்.
   - முற்றுரிமையாளரது நோக்கம் மிகை இலாபம்.
   - நிறுவனம் தொழிற்சாலை என்ற வேறுபாடு கிடையாது.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

## 2 – நுகர்வு பகுப்பாய்வு

1. முரண்பட்ட ஒன்றை தேர்வு செய்க.
   **விடை : விவசாய பொருட்கள்.**
2. தெரிவுகள் எப்போதும் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது வரையறுக்கப் பட்டவையாக இருப்பதற்கு காரணம் வளங்கள் ------- ஆக இருப்பதனால்.
   **விடை : பற்றாக்குறை**
3. இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர்.
   **விடை : மார்ஷல்.**
4. கீழ்கண்ட வாய்பாட்டின் மூலம் இறுதிநிலை பயன்பாட்டை அளவிடலாம்.
   **விடை :** $TU_n - TU_{n-1}$
5. இறுதிநிலை பயன்பாடு பூஜ்யமாக இருக்கும் போது மொத்த பயன்பாடு ----------- இருக்கும்.
   **விடை : உச்சமாக.**
6. காஸசன் முதல்விதி ------------------ என்றும் அழைக்கப்படுகிறது.
   **விடை : குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி.**
7. கீழ்கண்ட விதியை தேவை விதி அடிப்படையாகக் கொண்டது.
   **விடை : குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி.**
8. நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர்.
   **விடை : மார்ஷல்.**
9. தகுவிலை ₹.250 ஆகவும் மற்றும் உண்மை விலை ₹. 200 ஆகவும் உள்ளது நுகர்வோர் எச்சத்தை காண்டுபிடி
   **விடை : ₹.50**
10. சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது.
    **விடை : தரவரிசை பயன்பாட்டு ஆய்வு.**
11. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர்.
    **விடை : மார்ஷல்.**
12. கீழ்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும்
    **விடை : அதிக மானியம் வழங்குவதால்**
13. கொடுக்கப்பட்ட தேவை வளைக்கோட்டில் நகர்ந்து செல்லுதல் கீழ்கண்டவாறு அழைக்கப்படுகிறது.
    **விடை : தேவை விரிவு மற்றும் தேவை சுருக்கம்.**
14. மிகைத் தேவை நெகிழ்ச்சி உள்ள தேவைக்கோட்டின் வடிவமானது.
    **விடை : மெதுவாக சரியும்.**
15. நுகர்வோர் சமநிலையில் இருக்கும் போது இறுதிநிலை பயன்பாடானது ....... ஆக இருக்கும்.
    **விடை : சமமாக.**
16. சமநோக்கு வளைக்கோட்டை முதன்முதலில் தோற்றுவித்தவர்
    **விடை : எட்ஜ்வொர்த்**
17. தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்கு சமமாக இருக்கும் போது அது ....................
    **விடை : அலகுத் தேவை நெகிழ்ச்சி.**
18. சம அளவு திருப்பதியை கொடுக்கக்கூடிய புள்ளிகளை இணைக்கும் கோடானது இதனுடன் தொடர்புடைது.
    **விடை : சமநோக்கு வளைகோடு.**
19. சாதாரண தரவரிசை பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்.
    **விடை : தரப்படுத்துதல்**
20. சமநோக்கு வளைகோடுகள்
    **விடை : எதிர்மறை சரிவுடையவை.**

1. **தேசிய ஊரக நல அமைப்பு பற்றி குறிப்பு வரைக.**

   • **தேசிய ஊரக நல அமைப்பு:** • தேசிய ஊரக நல அமைப்பு 2005 ஏப்ரல் 12 ஆம் நாள் தொடங்கப்பட்டது.

   • **நோக்கம் மற்றும் பணிகள்:**

   • சமூக பரவலாக்கப்பட்ட நல விநியோக முறையை ஏற்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம்.
   • நலிவடைந்த ஊரக மக்களுக்கு குறைந்த விலையில் எளிதில் பெறக்கூடிய தரமான ஆரோக்கியமான வசதிகளை வழங்குதல்.
   • சுத்தமான குடிநீர், சுகாதாரம், கல்வி, ஊட்டசத்து, சமூக – பாலின சமத்துவம் ஆகியவற்றை ஊரக மக்களுக்கு வழங்குதல்.
   • மகப்பேறு, குழந்தை நலம், இனப்பெருக்கம், தாய்மைப்பேறு, வளர் இளம் பருவத்தினர் நலம் ஆகியவற்றுக்காக பல்வேறு பணிகளை செய்கிறது.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

## 3 – உற்பத்திப் பகுப்பாய்வு

1. முதன்மை உற்பத்திக் காரணிகளாவன
   **விடை : நிலம் மற்றும் உழைப்பு.**
2. மற்ற பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் மனித முறயற்சியால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள்.
   **விடை : மூலதனம்**
3. சராசரி உற்பத்தியை கணக்கிடப் பயன்படும் விகிதம்.
   **விடை :** $AP = \frac{TP}{N}$
4. எந்த காரணி சமுதாய மாற்றம் உருவாக்கும் முகவர் என்று அழைக்கப்படுகிறது.
   **விடை : தொழிலமைப்போர்.**
5. தொழில் முனைவோரின் முக்கியமான குணம் உறுதியற்ற தன்மையை பொருத்துக் கொள்ளல் என்ற கூற்றை கூறியவர்.
   **விடை : நைட்.**
6. ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பை தருவது எது?
   **விடை : உற்பத்தி சார்பு.**
7. ஒரு நிறுவனம் 5 அலகுகள் உற்பத்திக் காரணிகளை பயன்படுத்தி 24 அலகுகளை உற்பத்தி செய்கிறது . ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது உற்பத்தி 30 அலகுகளாக உயர்கிறது எனில் சராசரி உற்பத்தியை(AP) கணக்கிடுக.
   **விடை : 5**
8. குறுகியகால உற்பத்திச் சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது.
   **விடை : மாறும் விகித அளவு விளைவு விதி (Law of Variable Proportions)**
9. நீண்டகால உற்பத்திச் சார்பு எதன் மூலம் அளவிடப்படுகிறது.
   **விடை : விகித அளவு விளைவு விதி (Returns to Scale).**
10. சம உற்பத்திக் கோட்டின் வேறு பெயர்.
    **விடை : சம உற்பத்தி வளைகோடு.**
11. நிறுவனத்தின் உள்ளிருந்து தோன்றும் சிக்கனத்திற்கு காரணமாக அமைவது எது?
    **விடை : மேற்காணும் அனைத்தும்.**
12. காப் – டக்லஸ் உற்பத்திச் சார்பு எதனை அடிப்படையாக கொண்டது?
    **விடை : மாறா விகித விளைவு விதி.**
13. உற்பத்திக் காரணிகளை 5 விழுக்காடு அதிகரித்தால் வெளியீடு 5 விழுக்காட்டிற்கு மேல் அதிகரிப்பது எந்த விகித விளைவு விதியை சார்ந்தது
    **விடை : வளர்ந்து செல் விளைவு விகித விதி.**
14. கீழ் காண்பவற்றுல் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?
    **விடை : இயங்கும் தன்மையுடையது.**
15. ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது கிடைக்கும் உற்பத்தி.
    **விடை : இறுதிநிலை உற்பத்தி.**
16. நவீன பொருளியல் வல்லுநர்களின் விதி.
    **விடை : வளர்ந்து செல் விகித அளவு விளைவு விதி.**
17. உற்பத்தியாளர் சமநிலையை அடையும் புள்ளி எது?
    **விடை : (MRTS) ம் விலை வீதமும் சமமாக இருக்கும்.**
18. பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு எது?
    **விடை : நேர் மறை.**
19. சராசரி உற்பத்தி குறையும் போது இறுதிநிலை உற்பத்தி.
    **விடை : சராசரி உற்பத்தியை விட குறைவாக இருக்கும்.**
20. உற்பத்தி சார்பு இவற்றுக்கு இடையே உள்ள தொடர்பை விளக்குகிறது
    **விடை : உள்ளீட்டு அளவிற்கும் வெளியீட்டு அளவிற்கும் இடையே உள்ள தொடர்பு.**

1. **வில்முறை குறிப்பு வரைக.**
   நேராக அமையாத தேவைக் கோட்டின் இரண்டு புள்ளிகளுக்கு இடையே விலைத் தேவை நெகிழ்ச்சியை அளவிட வில்முறையை பயன்படுத்தலாம்.

   **வில் முறையில் விலைத் தேவை நெகிழ்ச்சி** $(ep) = \frac{Q_1 - Q_2}{Q_1 + Q_2} \div \frac{P_1 - P_2}{P_1 + P_2}$





www.Padasalai.Net

## 4 – செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு.

1. செலவு என்பது ----------------

   **விடை : உற்பத்தி.**

2. செலவுச் சார்புகளை -------------- சார்புகள் எனலாம்.

   **விடை : உற்பத்தி.**

3. பணச் செலவை ----------- செலவு என்று அழைக்கலாம்.

   **விடை : வெளியுறு.**

4. வெளியுறு செலவுகள் மற்றும் உள்ளுறு செலவுகளின் கூடுதல் -------------- செலவாகும்.

   **விடை : பொருளாதார செலவு.**

5. வெளியுறு செலவுகள் என்பது ------------

   **விடை : கையில் இருந்து செய்யும் செலவுகள்.**

6. தனக்கு சொந்தமான வளங்களை நிறுவனங்களுக்கு செய்யும் செலவு.

   **விடை : உள்ளுறு செலவு.**

7. உற்பத்தின் எல்லா மட்டங்களிலும் மாறாத செலவுகள் --------------

   **விடை : மாறாச் செலவு.**

8. சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு.

   **விடை :** $AVC = \frac{TVC}{Q}$

9. ஓர் அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்காக ஆகும் செலவு.

   **விடை : இறுதிநிலைச் செலவு.**

10. உற்பத்திக்கு ஏற்றாற் போல மாறும் செலவு -------- எனப்படும்.

    **விடை : மாறும் செலவு.**

11. கூலி -------- செலவுக்கு உதாரணம்.

    **விடை : மாறும்.**

12. ஓர் அலகு உற்பத்திக்கான செலவு ------------ செலவாகும்.

    **விடை : சராசரி செலவு.**

13. சராசரி செலவுக்கான வாய்ப்பாடு.

    **விடை :** $AC = \frac{TC}{Q}$

14. மொத்த மாறாச் செலவு ₹. 100 , மொத்த மாறும் செலவு ₹. 125 எனில் மொத்த செலவை கணக்கிடுக.

    **விடை : ₹. 225**

15. நீண்டகால சராசரி செலவுக்கோடு --------- வளைகொடு என்றும் அழைக்கப்படுகிறது.

    **விடை : திட்ட வளைகோடு.**

16. பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் -------- வருவாயாகும்.

    **விடை : மொத்த வருவாய்.**

17. ஓர் அலகு பொருளை கூடுதலாக விற்பதால் கடைக்கும் வருவாய் ---------- வருவாயாகும்.

    **விடை : இறுதிநிலை வருவாய்.**

18. இறுதிநிலை வருவாய் என்பது ஏற்கனவே உள்ள ------------- உடன் கூடுதலாக பெறுவது .

    **விடை : மொத்த வருவாய்.**

19. விலை நிலையாக இருக்கும் போது AR கோடு MR கோட்டுக்கு ------------- ஆக இருக்கும்.

    **விடை : சமமாக.**

20. ஒரு புத்தகம் ₹.10 வீதம் 40 புத்தகங்கள் விற்கப்படுகிறது எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய

    **விடை : ₹. 400**

21. **<u>வெளிப்படை வேலையின்மை என்றால் என்ன?.</u>**

    • **<u>வெளிப்படையான வேலையின்மை:</u>** • வேலை செய்யும் தகுதியும் விருப்பமும் இருந்து நடைமுறையில் உள்ள கூலி வீதத்தில் எந்த வேலையும் கிடைக்காமல் இருப்பது.

22. **<u>பருவகால வேலையின்மை என்றால் என்ன</u>?**

    • **<u>பருவ கால வேலையின்மை</u>:** இயற்கை சூழ்நிலையை பொருத்து ஆண்டின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் ஊரக மக்கள் வேலைவாய்ப்பை பெறுவர்.

    • மற்ற காலங்களில் வேலையின்றியோ அல்லது பகுதி நேர வேலையில் இருப்பதே பருவகால வேலையின்மை.

    • வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மை.• **உதாரணம்:** ஐஸ்கிரிம், வேளாண்மை.





www.Padasalai.Net

## 5 – அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும்.

1. கீழ் கண்ட எந்த வகையான அங்காடியில் விலை மிக அதிகமாக இருக்கும்.
   **விடை : முற்றுரிமை.**
2. நிறுவனத்தின் சமநிலை என்பது.
   **விடை :** $MC = MR$.
3. கீழ்கண்டவற்றுள் எது முற்றுரிமைப் போட்டியின் இயல்பு
   **விடை : பண்டங்களின் வேறுபாடு.**
4. முற்றுரிமை நிறுவனம் குறுகியகாலத்தில் ---------------- பெறும்.
   **விடை : அதிக இலாபம்.**
5. கீழ்கண்டவற்றுள் உபரித்திறன் இல்லாத நிறுவனம் எது -------------
   **விடை : நிறைவுப் போட்டி.**
6. எப்போது நிறுவனம் இலாபம் பெற முடியும்.
   **விடை :** $TR > TC$
7. விலையின் மற்றொரு பெயர் --------------------------------
   **விடை : சராசரிவருவாய்(AR)**
8. எந்த அங்காடியில் AR மற்றும் MR சமமாகும்.
   **விடை : நிறைவுப் போட்டி.**
9. நிறைவுப் போட்டி அனுமானிப்பது......................
   **விடை : ஒத்த தன்மை பண்டம்.**
10. முற்றுரிமைப் போட்டியில் MR கோடு ------- கோட்டிற்கு கீழ் இருக்கும்.
    **விடை : AR**
11. குழுச் சமநிலையை ஆராய்வது ---------------
    **விடை : முற்றுரிமைப் போட்டி.**
12. முற்றுரிமைப் போட்டியின் முக்கியமான இயல்பு------------
    **விடை : விற்பனைச் செலவு.**
13. முற்றுரிமைப் போட்டி ------ ஆகும்.
    **விடை : நிறை குறை போட்டி.**
14. விலைத் தலைமை அம்சம் கொண்ட அங்காடி எது -----------
    **விடை : சில்லோர் முற்றுரிமை.**
15. விலைபேதம் காட்டுதலின் விளைவு ---------- ஆகும்.
    **விடை : ஆ மற்றும் இ.**
16. முற்றுரிமைப் போட்டியில் சராசரி வருவாய் கொடு ---------
    **விடை : பெருமளவு நெகிழ்ச்சி உடையது.**
17. நிறைவுப் போட்டியில் நிறுவனத்தின் தேவைக்கோடு --------
    **விடை : படுகிடை.**
18. எந்த அங்காடியில் போட்டியே இருக்காது -------------
    **விடை : நிறைவுப் போட்டி.**
19. கீழ் காண்பவற்றுள் எந்த வகை அங்காடியில் நுகர்வோர் அதிகம் சுரண்டப்படுகின்றனர் ------------
    **விடை : முற்றுரிமை.**
20. விற்பனை செலவிற்கு உதாரணம் --------------
    **விடை : விளம்பரச் செலவு.**

1. **<u>மறைமுக வேலையின்மை என்றால் என்ன?</u>**
   - **<u>மறைமுக வேலையின்மை</u>:**
   - தேவைக்கும் அதிகமான வேலையாட்கள் பணியில் இருக்கும் நிலை **உதாரணம்: வேளாண்மை.**
   - உபரி பணியாட்கள் நியமிக்கப்படுவதே மறைமுக வேலையின்மைக்கு காரணம்.
   - வேலையில் இருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தி திறன் குறையாது.
   - உழைப்பாளரின் இறுதிநிலை உற்பத்தி திறன் பூஜ்யம்.
2. **<u>தொழில் நுட்ப வேலையின்மை என்றால் என்ன?</u>**
   - **<u>தொழில்நுட்ப வேலையின்மை</u>:**
   - உழைப்பை சேமிக்கின்ற புதிய கண்டுபிடிப்புகள், கருவிகள் வேளாண்மையில் புகுத்தப்படுவதால் தோன்றும் வேலையின்மை.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

## 6 – பகிர்வு பற்றிய ஆய்வு

1. பொருளியலில் வருமானப் பகிர்வு எதனுடன் தொடர்புடையது.
**விடை : உற்பத்திக் காரணிகள்.**
2. பகிர்வுக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது.
**விடை : காரணி விலைக் கோட்பாடு.**
3. எதனை பயன்படுத்துவதற்கான வெகுமதி வாரம்.
**விடை : நிலம்.**
4. போலி வாரம் என்ற கருத்து யாருடன் தொடர்புடையது.
**விடை : மார்ஷல்.**
5. தொன்மை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்.
**விடை : ரிக்கார்டோ.**
6. நிலத்திற்கு உண்மையானதும் அழிக்க முடியாத சக்தியும் உள்ளது என்ற கருத்தைப் பயன்படுத்தியவர்.
**விடை : ரிக்கார்டோ.**
7. உழைப்பாளருக்கான வெகுமதி.
**விடை : கூலி.**
8. பணக் கூலியின் வேறுபெயர்.
**விடை : பெயரளவுக் கூலி.**
9. எச்ச உரிமை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்.
**விடை : வாக்கர்.**
10. முதலீட்டை பயன்படுத்துவதற்கான வெகுமதி.
**விடை : வட்டி.**
11. கீன்ஸின் வட்டிக் கோட்பாடு இவ்வாறு வழங்கப்படுகிறது.
**விடை : நீர்மை விருப்பக் கோட்பாடு.**
12. கடன் நிதி கோட்பாட்டின்படி கடன் நிதிகளின் அளிப்பு இதற்குச் சமமாகும்.
**விடை :** $S + BC + DH + DI$.
13. எதிர்பாராத செலவுகள் என்ற கருத்தை கீன்ஸ் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.
**விடை : முன்னெச்சரிக்கை நோக்கம்.**
14. தனி நபர்களுக்கு நாட்டின் செல்வத்தை அல்லது வருமானத்தை பகிர்ந்தளிப்பது என்பது --------
**விடை : தனிநபர் வருமான பகிர்வு.**
15. இலாபம் இதற்கான வெகுமதி.
**விடை : அமைப்பு.**
16. புத்தாக்க இலாபக் கோட்பாட்டை வழங்கியவர்.
**விடை : சும்பீட்டர்.**
17. போலி வாரம் இதனால் தோன்றுகிறது.
**விடை : மனிதன் உருவாக்கிய உபகரணங்கள்.**
18. 'ஓர் உற்பத்தியாளர் ஒப்பந்தத்தின் மூலம் உழைப்பாளி தன் பணியை வழங்கியதற்காக கொடுக்கும் மொத்த பணமே கூலியாகும்' இதனைக் கூறியவர் யார்?
**விடை : பென்ஹாம்.**
19. தூய்ப்பு தவிர்ப்பு வட்டிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்.
**விடை : N.W.சீனியர்.**
20. கடன்நிதி வட்டிக் கோட்பாடு -----------------
**விடை : புதிய தொன்மைக் கோட்பாடு.**

1. **<u>தனி நபர் வருமான பகிர்வு என்றால் என்ன?</u>**
**<u>தனிநபர் வருமான பகிர்வு</u>:** நாட்டு வருமானத்தை தனி மனிதர்களிடையே பகிர்ந்தளித்தல்.
2. **<u>பணிசார்(செயல்முறை) வருமான பகிர்வு என்றால் என்ன?</u>**
**<u>பணிசார் பகிர்வு</u>:** • நாட்டு வருமானத்தை நான்கு உற்பத்திக் காரணிகளிடையே பகிர்ந்தளித்தல்.
• நிலம் – வாரம், உழைப்பு – கூலி. மூலதனம் – வட்டி தொழில் முனைவு – இலாபம் என பிரித்தளிக்கப்படுதல்.
3. **<u>இறுதி நிலை உற்பத்தி திறன் பகிர்வு கோட்பாட்டின் வேறு பெயர்கள் யாவை?</u>**
• பொதுப் பகிர்வு கோட்டபாடு. • நாட்டு ஈவுத்தொகை பகிரவு கோட்பாடு.





www.Padasalai.Net

## 7– இந்தியப் பொருளாதாரம்

1. கர்நாடகத்தின் முக்கிய தங்கச் சுரங்கப் பகுதி.
   **விடை : கோலார்.**
2. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அளவிடப்படுவதை குறிப்பிடுவது.
   **விடை : GDP**
3. கீழ் கண்டவற்றவற்றுள் எது முன்னேற்றம் அடைந்த நாடு.
   **விடை : பிரான்ஸ்.**
4. வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளின் வரிசையில் இந்தியாவின் இடம்.
   **விடை : ஏழு.**
5. கலப்புப் பொருளாதாரம் என்பது.
   **விடை : பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது.**
6. இந்தியப் பொருளாதாரம் ---------- காரணமாக வலிமையின்றி இருக்கிறது.
   **விடை : பொருளாதார சமநிலையின்மை**
7. மக்கள் தொகையின் இயல்புகளைப் பற்றிய அறிவியல் ரீதியான ஆய்வு.
   **விடை : மக்கள் தொகையியல்.**
8. மக்கள் தொகையில் 1961 ஆம் வருடம் --------- எனப்படுகிறது.
   **விடை : மக்கள் தொகை வெடிப்பு வருடம்.**
9. எந்த ஆண்டில் இந்திய மக்கள் தொகை நூறு கோடியை தாண்டியது.
   **விடை : 2001**
10. ஆயிரம் மக்களுக்கு இறப்பவர் எண்ணிக்கை என்பது.
    **விடை : கச்சா இறப்பு விகிதம்.**
11. ஆயிரம் மக்களுக்கு பிறப்பவர் எண்ணிக்கை என்பது.
    **விடை : கச்சா பிறப்பு விகிதம்.**
12. மக்கள் தொகை அடர்த்தி என்பது.
    **விடை :** $\frac{\text{மக்கள் தொகை}}{\text{குறிப்பிட்ட நில அளவு}}$
13. தேசிய வளர்ச்சிக் கழகத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
    **விடை : ஜவர்ஹர்லால் நேரு.**
14. காந்திய பொருளாதார சிந்தனைகளை தொடர்ந்து வலியுறுத்தியவர் யார்?
    **விடை : J.C. குமரப்பா**
15. ஜனநாயக சமதர்மத்தை கொண்டு வந்தவர்.
    **விடை : ஜவர்ஹர்லால் நேரு.**
16. B.R.அம்பேத்கர் இந்தியப் பொருளாதாரப் பிரச்சனைகளை இதன் அடிப்படையில் ஆராய்கிறார்.
    **விடை: இந்திய ரூபாயின் சிக்கல்கள்.**
17. இந்த கொள்கையின் அடிப்படையில் காந்தியப் பொருளாதாரம் இயங்குகிறது.
    **விடை : ஒழுக்க நெறி அடிப்படை.**
18. V.K.R.V. இராவ் இவரின் மாணவராக இருந்தார்
    **விடை: J.M. கீன்ஸ்**
19. பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை அமர்த்தியா சென் பெற்ற ஆண்டு
    **விடை : 1998**
20. திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துகள் குறிப்பாகக் கூறுவது
    **விடை : மேற்காண் அனைத்தும்.**
21. **மொத்த நாட்டு மகிழ்ச்சி குறியீடு பற்றி நீ அறிவது யாது?**
    **மொத்த நாட்டு மகிழ்ச்சிக் குறியீடு**: • மொத்த நாட்டு மகிழ்ச்சி குறியீடு என்ற தொடரை 1972 இல் வடிவமைத்தவர் ஜிக்மே – சிங்யே – வாங்சுக். • இவர் பூடான் நாட்டின் நான்காவது மன்னர் ஆவார்.
    • இது நிலைத்த தன்மை, சுற்றுச்சூழல், பாதுகாப்பு, கலாச்சார மேம்பாடு, சிறந்த நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
22. **இந்திய பொருளாதாரத்தின் பலவீனங்கள் யாவை?**
    **இந்திய பொருளாதாரத்தின் பலவீனங்கள்:** • அதிக மக்கள் தொகை. • ஏற்றத்தாழ்வும் வறுமையும்.
    • உள்கட்டமைப்பில் பலவீனம். • அத்தியாவசிய பண்டங்களின் விலை உயர்வு.
    • பழைமையான தொழில் நுட்பம். • வேலைவாய்ப்புகளை உருவாக்க திறனற்ற நிலை.



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

## 8 – இந்தியப் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும்.

1. இந்தியாவின் கள்ளிக்கோட்டைக்கு வாஸ்கோடகாமா வருகை புரிந்த வருடம்.
   **விடை : 1498.**
2. 1614 இல் தாமஸ் மன்ரோ யாரிடம் அனுமதி பெறுவதில் வெற்றிப் பெற்றார்.
   **விடை : ஜஹாங்கீர்.**
3. இந்தியாவை ஆளும் உரிமை கிழக்கிந்தியக் கம்பெனியிடம் இருந்து ஆங்கிலேய அரசுக்கு மாற்றப்பட்ட ஆண்டு.
   **விடை : 1858.**
4. இரயத்வாரி முறை முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம்.
   **விடை : தமிழ்நாடு (சென்னை).**
5. முதலாம் உலகப்போர் தொடங்கப்பட்ட ஆண்டு.
   **விடை : 1914.**
6. இந்திய அரசாங்கம் தனது முதல் தொழிற்கொள்கையை வெளியிட்ட ஆண்டு.
   **விடை : 1948.**
7. 1956 தொழிற்கொள்கையின் நோக்கம்.
   **விடை : பெரிய நிறுவனங்களை முன்னேற்றுவது.**
8. 1993 இல் முன் பதிவு நீக்கப்பட்ட தொழில்துறை.
   **விடை : செம்பு மற்றும் சிங்க் சுரங்கத் தொழில்.**
9. 1969 இல் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை.
   **விடை : 14.**
10. இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை.
    **விடை : M.S. சுவாமிநாதன்.**
11. வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதன் முக்கிய நோக்கம்.
    **விடை : சமூக நலம்.**
12. திட்டக் குழு அமைக்கப்பட்ட ஆண்டு.
    **விடை : 1950.**
13. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம்.
    **விடை : வேளாண்மை.**
14. பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலம்.
    **விடை : 2002 – 2007.**
15. 2016 ஆம் ஆண்டுக்கான மனித வளர்ச்சி அறிக்கையின் படி188 நாடுகளில் இந்தியாவின் தரம்
    **விடை : 131.**
16. வருடாந்திரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட ஆண்டு.
    **விடை : 1990 –1992.**
17. இந்தியாவின் மிகப் பழமையான பெரிய அளவிலான தொழில்.
    **விடை : பருத்தி.**
18. மனித மேம்பாட்டுக் குறியீட்டெண்ணை உருவாக்கியவர்.
    **விடை : அமர்த்தியா குமார் சென்.**
19. பனிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம்.
    **விடை : விரைவான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி.**
20. வாழ்க்கைத் தர குறியீட்டெண்ணை உருவாக்கியவர்.
    **விடை : டி. மோரிஸ்.**

1. **<u>1948 ஆம் ஆண்டு தொழிற் கொள்கை பற்றி நீ அறிவது யாது</u>?**

   **<u>1948 ஆம் ஆண்டு தொழிற் கொள்கை</u>:**

   - இந்திய அரசு முதல் தொழிற்கொள்கையை 1948 ஏப்ரல் 6 ஆம் நாள் அறிவித்தது.
   - இதன் முக்கிய நோக்கம் கலப்பு பொருளாதாரத்தை இந்தியாவில் அறிமுகம் செய்தல்.
   - இரயில்வே, இராணுவ தளவாடங்கள், அணுஆற்றல், தபால்துறை இந்திய அரசு முற்றுரிமையின் கீழ் செயல்படும்.
   - நிலக்கரி, எஃகு, விமான உதிரி பாகங்கள் தயாரிப்பு, வாகன உற்பத்தி, கம்பியில்லா தொடர்பு சாதனங்கள், எண்ணெய் வளங்கள் மாநில அரசின் முற்றுரிமையின் கீழ் செயல்படும்.
   - மேற்கண்ட இனங்களில் உள்ளடங்காத தொழில்களில் தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் ஈடுபடலாம்.





www.Padasalai.Net

## 9 – இந்தியாவின் மேம்பாட்டு அனுபவங்கள்.

1. கீழ் கண்டவற்றுள் எது தனியார் மயமாதலை குறிக்கும்.
   **விடை : இவை அனைத்தும்.**
2. இன்றைய நாட்களில் வளர்ச்சிக்காக ஒவ்வோரு நாடும் ---------- இருக்க வேண்டும்.
   **விடை : ஒன்றையொன்று சார்ந்து.**
3. LPG – க்கு எதிரான வாதம்.
   **விடை: மக்கள் மற்றும் மண்டலங்களிடையே ஏற்றத்தாழ்வு.**
4. FDI என்பதன் விரிவாக்கம்.
   **விடை: வெளிநாட்டு நேரடி முதலீடு (Foreign Direct Investment)**
5. உலக அளவில் இந்தியா ---------- உற்பத்தியில் மிகப் பெரிய உற்பத்தியாளராக விளங்குகிறது.
   **விடை: பழங்கள்.**
6. வெளிநாட்டு முதலீடு ----------- மற்றும் ---------- யை உள்ளடக்கியது.
   **விடை: FDI மற்றும் FPI.**
7. சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை --------------------- தில் வெளியிடப்பட்டது.
   **விடை: ஏப்ரல் 2000.**
8. விவசாய உற்பத்தி அங்காடிக் குழு ------------- ஆகும்.
   **விடை: சட்ட பூர்வமான குழு.**
9. பண்டங்கள் மற்றும் பணிகளின் மீதான வரி என்பது.
   **விடை: ஒரு முனை வரி மற்றும் அடுக்கு விளைவுகள் அற்றது.**
10. புதிய வெளிநாட்டு வர்த்தக கொள்கை ---------- ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
    **விடை: 2015.**
11. நிதித் துறை சீர்திருத்தங்கள் முக்கியமாக ------------------ துறைக்கானது.
    **விடை: அ மற்றும் ஆ.**
12. பண்டங்கள் மற்றும் பணிகளின் வரிச் சட்டம் --------------- ஆம் தேதி அமல்படுத்தப்பட்டது.
    **விடை: 2017 ஜூலை 1 அம் தேதி.**
13. புதிய பொருளாதார கொள்கை கீழ் கண்டவற்றுள் எதனை உள்ளடக்கியது.
    **விடை: இவை அனைத்தும்.**
14. --------- ஆம் ஆண்டு நிதி தொடர்பான நரசிம்மன் குழுவின் பரிந்துரைகள் சமர்பிக்கப்பட்டன.
    **விடை: 1991.**
15. உழவர் கடன் அட்டையை பயன்படுத்தி விவசாயிகள் எந்த வங்கியில் கடன் பெற முடியும்.
    **விடை: இவை அனைத்தும்.**
16. வர்த்தக கொள்கையின் சீர்திருத்தங்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட ராஜா செல்லையா குழுவின் பரிந்துரைப்படி அதிகபட்ச இறக்குமதி சுங்கத் தீர்வை ---------- ஆகும்.
    **விடை: 50%.**
17. இந்தியாவில் முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம் ----------- ல் ஏற்படுத்தப்பட்டது.
    **விடை: காண்ட்லா.**
18. ராஜ் கிருஷ்ணாவால் வார்க்கப்பட்ட '**இந்து வளர்ச்சி வீதம்**' என்பது ------------ யை குறிக்கும்.
    **விடை: குறைவான பொருளாதார வளர்ச்சியை.**
19. GST யில் அதிக பட்ச வரிவிதிப்பு ---------- ஆகும். (2017 ஜூலை – 1 ன் படி)
    **விடை: 28%.**
20. தொழில் உடைமையை பொதுத் துறையில் இருந்து தனியார் துறைக்கு மாற்றுவது ----- எனப்படும்.
    **விடை: தனியார் மயமாக்கல்.**

1. <u>1956 ஆம் ஆண்டு தொழிற்கொள்கை தீர்மானம் குறிப்பு வரைக</u>?

   **<u>1956 ஆம் ஆண்டு தொழிற்கொள்கை தீர்மானம்:</u>**
   - மஹலநோபிஸ் வளரச்சி மாதிரியின் அடிப்படையில் நீண்ட கால பொருளாதார வளர்ச்சிக்காக கனரக தொழில்களுக்கு முக்கியத்துவம் அளித்தது.
   - 17 தொழில்கள்(மத்திய அரசு), 12 தொழில்கள்(மாநில அரசு), மூன்றாம் பிரிவு தொழில்கள் என பிரிக்கப்பட்டன.
   - பொதுத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தனியார் துறையை நியாமான முறையில் வழிநடத்தியது.
   - அரசு சிறு மற்றும் குடிசைத் தொழிள்களை ஊக்குவித்து நேரடி மானியம் அளித்தது.
   - அரசு பேரளவு உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தியை கட்டுப்படுத்த வரிகளை விதித்தது.
   - வளர்ச்சியினால் வட்டார வேறுபாடுகளை குறைக்க வலியுறுத்தியது.
   - இந்திய முதலீடுகளின் தேவையை அரசு உணர்ந்திருந்தது.





www.Padasalai.Net

## 10 – ஊரகப் பொருளாதாரம்.

1. எது ஊரகப் பகுதியின் அடிப்படை அலகாகக் கருத்தப்படுகிறது.
**விடை: வருவாய் கிராமம்.**
2. எது ஊரகப் பகுதியை கண்டறியும் பண்பு.
**விடை: குறைவான மக்கள் தொகை அடர்த்தி.**
3. ஊரகப் பொருளாதாரத்தின் முக்கியமான இயல்பு.
**விடை: வேளாண்மையை சார்ந்து இருத்தல்.**
4. 2011 கணக்கெடுப்பின் மொத்த மக்கள் தொகையில் ஊரகத்தில் வாழும் மக்கள் தொகை சதவீதம் என்ன?
**விடை: 60%**
5. தேவைக்கும் அதிகமாக வேலையில் ஈடுபடும் மக்களின் நிலைமை.
**விடை: மறைமுக வேலையின்மை.**
6. இரண்டு முற்றிலும் வேறுபட்ட தன்மைகளை தொடர்புபடுத்தி குறிப்பது.
**விடை: இரட்டை தன்மை.**
7. ஊரகப் பகுதி. ஊரக மக்கள். ஊரக வாழ்க்கையை மேம்படுத்துதல் என்பது.
**விடை: ஊரக மேம்பாடு.**
8. ஊரகப் பொருளாதாரத்தில் வேளாண்மை சிக்கலுக்கு தொடர்புடையதாக கருத்ப்படுவது.
**விடை: சிறிய அளவு நில உடைமை.**
9. ஊரகப் பகுதியில் ஒரு மனிதன் எடுத்துக்கொள்ள வேண்டிய கலோரியின் அளவு.
**விடை: 2400**
10. ஊரக ஏழ்மைக்கான காரணத்தை சுட்டுக.
**விடை: வேளாண்மை சாரா வேலையின்மை.**
11. மறைந்திருக்கும் வேலையின்மைக்கு மற்றொரு பெயர்
**விடை: மறைமுக வேலையின்மை.**
12. குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வேலைவாய்ப்பு பெறுவதை எப்படி கருதுவது?
**விடை: பருவகால வேலைவாய்ப்பு.**
13. ஊரக தொழிற்சாலைக்கு உதாரணம் தருக.
**விடை: பாய் தயாரிக்கும் தொழிற்சாலை.**
14. இந்தியாவில் உள்ள ஊரக குடும்பங்களில் கடனாளிகளின் பங்கு எவ்வளவு?
**விடை: நான்கில் மூன்று பங்கு.**
15. இந்தியாவில் ஊரக கடனுக்கு காரணமாக கருத்ப்படுவது.
**விடை: ஏழ்மை(வறுமை).**
16. எந்த வருடம் வட்டார ஊரக வங்கி பயன்பாட்டிற்கு வந்தது.
**விடை: 1975**
17. முத்ரா (MUDRA) வங்கி அமுல்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக.
**விடை: 2015.**
18. தேசிய ஊரக சுகாதாரப் பணி அமுல்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக.
**விடை: 2005.**
19. ஊரக சாலையின் பயன்பாடாக கருதப்படுவது.
**விடை: மேற்கண்ட அனைத்தும்.**
20. 'இந்திய விவசாயி கடனாளியாகப் பிறந்து, கடனாளியாக வாழ்ந்து, கடனாளியாக இறந்து, கடனையே சந்ததிக்கு விட்டுச் செல்கிறான்' இந்த சொற்றொடரை கூறியவர் யார்?
**விடை: சர் மால்கம் டார்லிங்.**

1. **வறுமை ஒழிப்பு திட்டங்கள் யாவை?**

| வறுமை ஒழிப்பு திட்டம் | தொடங்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| • 20 அம்ச திட்டம் | 1975 |
| வேலைக்கு உணவுத் திட்டம் *(FWP)* | 1977 |
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் *(IRDP)* | 1978 |
| ஊரக இளைஞர்களுக்கான தன் வேலைவாய்ப்பு பயிற்சி *(TRYSEM)* | 1979 |
| தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் *(NREP)* | 1980 |
| ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் *(RLEGP)* | 1983 |
| ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் *(JRY)* | 1989 |
| மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் *(MGNREGS)* | 2006 |



ரா. மணிகண்டன்., அ.மே.நி. பள்ளி – வாணதிரையன் பட்டணம், அரியலூர் மாவட்டம்.

www.Padasalai.Net

## 11 – தமிழ்நாட்டுப் பொருளாதாரம்

1. சுகாதார குறியீட்டில் தமிழ்நாடு எந்த மாநிலத்திற்கு மேலாக உள்ளது?
   **விடை: குஜராத்.**
2. பாலின விகித்தில் தமிழ்நாட்டின் தரம்.
   **விடை: மூன்றாவது.**
3. தமிழ்நாடு எதில் வளமானது.
   **விடை: மனித வளம்**
4. நீர்பாசனத்தின் முக்கிய ஆதாரம்.
   **விடை: கிணறுகள்.**
5. பின்னலாடை உற்பத்தி அதிகம் உள்ள இடம்.
   **விடை: திருப்பூர்.**
6. கீழ் கண்டவற்றுள் தவறான இணை எது?
   **விடை: வீட்டு ஜவுளி தயாரிப்பு – ஈரோடு.**
7. கீழுள்ள நகரங்களில் எதில் சர்வதேச விமான நிலையம் இல்லை?
   **விடை: தூத்துக்குடி.**
8. பயிர் உற்பத்தியில் எந்த பயிரை தவிர தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது.
   **விடை: ஏலக்காய்.**
9. எந்த பயிர் உற்பத்திக்காக அதிகப் பரப்பு நிலம் தேவைப்படுகிறது.
   **விடை: நெல்.**
10. எழுத்தறிவு வீதத்தில் தமிழ்நாட்டின் தரம்.
    **விடை: எட்டு.**
11. குறு, சிறு, மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டில் தமிழ்நாட்டின் தரம்
    **விடை: I (ஒன்று)**
12. தமிழ்நாட்டின் எம் மாவட்டத்தில் பாலின விகிதம் அதிகமாக உள்ளது?
    **விடை: நீலகிரி.**
13. எம் மாவட்டத்தில் குழந்தை பாலின விகிதம் குறைவாக உள்ளது?
    **விடை: அரியலூர்**
14. எந்த யூனியன் பிரதேசத்தில் பாலின விகிதம் அதிகமாக உள்ளது?
    **விடை: பாண்டிச்சேரி.**
15. தமிழ்நாட்டின் உள்ள நாட்டு உற்பத்தியில் அதிக பங்கு வகிப்பது?
    **விடை: பணிகள்.**
16. மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாட்டின் தரம்.
    **விடை: 3**
17. *SPIC* அமைந்துள்ள இடம்
    **விடை: தூத்துக்குடி.**
18. *TICEL* ன் பகுதி.
    **விடை: உயிரி பூங்கா.**
19. சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் எந்த நிலையில் உள்ளது.
    **விடை: மூன்றாம்**
20. தேன்னக இரயில்வேயின் தலைமையிடம்
    **விடை: சென்னை.**

1. தமிழகத்தின் பட்டாசு தொழில் பற்றி குறிப்பு வரைக.
   தமிழகத்தின் பட்டாசு தொழில்:
   • அச்சு தொழில், பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியின் தலைவனாக சிவகாசி விளங்குகிறது.
   • நேரு சிவகாசியை, குட்டி ஜப்பான் என்று அழைத்தார்.
   • இந்திய பட்டாசு உற்பத்தியில் சிவகாசியின் பங்கு 80 சதவீதமாகும்.
   • இந்திய அச்சுதுறைத் தீர்வுகளில் சிவகாசியின் பங்கு 60 சதவீதம்.
2. **உயிரி எரிபொருள் என்பது என்ன?**
   உயிரி எரிபொருள் காட்டாமணக்கு வகை தாவரங்களில் இருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் எரிபொருள்.
3. ***சிசு இறப்பு வீதம்(Infant Mortality Rate)*** என்றால என்ன?
   ***சிசு இறப்பு வீதம்***: ஒரு வயது நிறைவடையும் முன் இறக்கும் பச்சிளங்குழந்தைகளின் எண்ணிக்கை.





www.Padasalai.Net

## 12 – பொருளியலுக்கான கணித முறைகள்

1. ---------- இவற்றின் ஒருங்கிணைப்பே கணிதவியல் பொருளாதாரம்.
   **விடை: கணிதம் மற்றும் பொருளாதாரம்.**
2. தேவைக் கோடு அல்லது அளிப்புக் கோடு வரைவதில் -------- பயன்படுத்தப்படுகிறது.
   **விடை: பகுமுறை வடிவியல்.**
3. பொருளியலில் கணிதத்தை முதன் முதலாக பயன்படுத்தியவர்.
   **விடை: ஜியோவாணி செவா**
4. ஒரு சாராத மாறியுடன் கூடிய சார்பு ----------- எனப்படுகிறது.
   **விடை: ஒரு மாறிச் சார்பு.**
5. இரு அளவுகளுக்கு இடையே சமநிலை என்ற சொற்றொடர் ------------ குறிக்கிறது.
   **விடை: சமன்பாட்டை**
6. சாராத மாறியின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் காரணமாக சார்ந்த மாறியின் மதிப்பில் ஏற்படும் கூடுதல் முறை மாற்றம் --------- எனப்படும்.
   **விடை: சாய்வு விகிதம்.**
7. $Y - Y_1 = m(X - X_1)$ என்பது ------------ யை குறிக்கும்.
   **விடை: நேர்கோட்டை.**
8. $D = 50 - 5P$ எனக்கொள்க, $D = 0$ எனில் P யின் மதிப்பு யாது?
   **விடை:** $P = 10$
9. $D = 150 - 50P$ எனில் சாய்வு ------- ஆகும்.
   **விடை:** $-50$
10. ஒரு அணிக்கோவையின் மதிப்பு $\Delta = 0$ என்றால் அச்சார்புகளுக்கு தீர்வு -------
    **விடை: கிடையாது.**
11. நிலைநிற்கும் புள்ளி*(State of rest)* ------- எனப்படும்.
    **விடை: சமநிலை.**
12. நிலையான மதிப்பின் வகையீட்டுக் கேழு மதிப்பு ------ ஆகும்.
    **விடை: சுழியம் (பூஜ்யம்)**
13. $X^n$ என்பதன் வகையீட்டுக் கேழு ------ ஆகும்.
    **விடை:** $nX^{(n-1)}$
14. கணிதமுறையில் வெளிப்படுத்தப்பட்ட மொத்த செலவு சார்பில் நிலையான செலவு ------ உறுப்பால் குறிப்பிடப்படும்.
    **விடை: நிலையான மதிப்பு.**
15. மொத்த வருவாய் சார்பின் முதல் வகையீடு ------ ஆகும்.
    **விடை: இறுதிநிலை வருவாய்.**
16. தேவை நெகிழ்ச்சி ------- உள்ள விகிதம் ஆகும்.
    **விடை: இறுதிநிலை தேவை சார்பிற்கும் சராசரி தேவை சார்பிற்கும்.**
17. $X + Y = 5, \quad X - Y = 3$ எனில் X யின் மதிப்பு யாது?
    **விடை: 4**
18. தொகையீடு எனபது ------- என்பதன் தலைகீழ் செயல்பாடாகும்.
    **விடை: வகையீடு.**
19. *Data Processing* --------- ல் மேற்கொள்ளப்படுகிறது.
    **விடை: PC மற்றும் கணக்கீட்டுக் கருவி**
20. **Ctrl + M** என்ற ஆணை ------ பயன்படுத்தப்படுகிறது.
    **விடை: நழுமத்தை நீக்க.**

1. **பணித்தாள் என்றால் என்ன?**
   **பணித்தாள்:** வாய்ப்பாடுகள், தரவுகளை நிரை மற்றும் நிரல்களாக தருவதற்கு ஏற்ப அட்டவணை வடிவிலான ஆவணமே பணித்தாள்.
2. **வகைக் கெழு என்றால் என்ன? பொருளியலின் அதன் பயன் யாது?**
   - ஒரு சார்பின் மாற்ற வீதமே வகைக்கெழு.
   - சார்பற்ற மாறியில் ஏற்படும் சிறிய மாற்றத்திற்கு ஏற்ப சார்ந்த மாறியில் ஏற்படும் மாற்றமாகும்.
   - பொருளியலில் இறுதிநிலை கருத்துகள், தேவை மற்றும் அளிப்பு நெகிழ்ச்சி போன்ற பதில் மாற்ற வீதங்களை அளவிட பயன்படுகிறது.





www.Padasalai.Net